# யாழ்ப்பாணக் கதைகள்



கே. வி. நடராஜன்

பொலிகண்டி
4.5.66

"தென்னியான்"

# யாழ்ப்பாணக் கதைகள்

யாழ்ப்பாண மண்ணையும்
பாத்திரங்களையும்
உணர்ச்சிகளையும்
சித்திரிக்கும்
பதினொரு சிறுகதைகள்

கே. வி. நடராஜன்

யாழ். இலக்கிய வட்ட வெளியீடு: 1

முதற் பதிப்பு டிசம்பர் 1965

விலை: 2-50

# YALPPANAKKATHAIKAL

(A Collection of Short Stories)

BY

**K. V. Nadarajan**

*First Edition*:
December 1965

**Price: Rs. 2-50**

*Published by*:
YARL. ILAKKIYA VADDAM

அச்சுப்பதிவு: ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

சமர்ப்பணம்

என் அன்புப் பாட்டிக்கு

# முன்னீடு

**யா**ழ்ப்பாணம் ஒரு தனி உலகம். அந்த மண்ணிற்கே உரித்தான தனித்துவக் கலாசாரப் போக்கும் அதற்குண்டு. உணர்ச்சிகளின் சொரூபங்களையும், எண்ணங்களின் முகங்களையும் வெளியே காட்டாது, ஏதோ மனோசிக்கலிலும் மன அவசத்திலும் அவற்றைத் திரையிட்டு வாழும் பண்பு அக்கலாசாரத்திற்கு மட்டுமே உண்டு. அந்தத் திரைதான் தென்னோலை வேலிகள் — Cadjan curtain. இந்த வேலியால் — கறையான் பிடித்து உக்கிப்போன 'செத்தை'யாக இருந்தாலும் — தனது அம்மண வாழ்க்கையை மறைத்து விடலாமென்பதில் யாழ்ப்பாணத்திற்கு அசைக்கமுடியாத நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கையும், அது எழுந்து நிற்கும் 'கதிகால்'களும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்க இயலாத அம்சங்களாகும். ஆமைக்கு ஓடு எப்படியோ, அப்படித்தான் யாழ்ப்பாணத்திற்கு வேலி. வேலியே வேலிகள். இவ்வேலிகளும் பல வகைத்து. வேலிகள் கட்டி வாழும் மனோபாவத்தின் உருவகமாகத்தான் கிடுகு வேலி அமைந்துள்ளது. பழைமைக்கு இசைந் தொழுகுவதாகக் காட்டிக் கொள்ளுதல்; தடிப்பான சாதி ஆசாரத்தைப் பேணுதல்; 'பணச் சடங்கு மூன்று நாட்கள் நடைபெறும்' என்று அழைப்பிதழ் விடுதல்; 'மரக்கறி' மனோபாவத்திற் பிரீதியென நடித்தல்; உறவு முறைகளை இறுக்கி வைத்தல்; — எல்லாமே தாழ்வுச் சிக்கலில் அழுந்தும் ஒரு சமூகந் தன்னைப் பாதுகாப்பதற்கு ஏற்படுத்திய வேலிகளே. பணம் என்ற ஜடத்தையே உயிர்ப் பொருளாக்கி, அதைத் தெய்வ பீடத்திலமர்த்தி, அதையே பூஜை செய்து கொண்டு, அதைப் பூஜை செய்யாதது போலக் காட்டிக் கொள்வதுகூட — அது பச்சையான மத்தியதர வகுப்பினைப் பிரதிபலிப்பதாக இருந்தாலும் — அதுவும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கவே உதவுகின்றது. உணர்ச்சிகளை மறைத்தும் அமுக்கியும், காப்புறுதியை உறுதிப்படுத்துஞ் சடங்குகளாகவே யாழ்ப்பாணக்

கல்யாணங்கள் நிறைவேறுகின்றன. 'காணி பூமி — நகை நட்டு — சேனை சனம் — குலம் கோத்திரம்' — எல்லாமே அவர்களுக்கு 'இன்சூரன்ஸ் பொலிஸி'களே! அத்தகைய வாழ்க்கை முறைகளும், வேலிகளும். இந்த வேலிகளை எஃகுலித்து, வீதிக்கு வரும் விவகாரங்கள் ஈழத்தின் சுவை மிகு வழக்குகளாகப் பிரபல்யமடைகின்றன. இவற்றைப் பிரபல்யப்படுத்தி, பழியைச் சம்பந்தப்பட்ட தனி நபர்கள்மீது சுமத்தி, 'இவை விதி விலக்குகளே' என்று பறைசாற்றுவதும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஓரம்சமாகும். 'யாழ்ப்பாணம் இறுக்கமான — கட்டுப்பாடான ஒழுக்க நெறிகளுக்கு இசைந்தொழுகிக் கற்புத் தனத்தைக் காப்பாற்றுகின்றது' எனப் பிறரை ஏமாற்ற இஃது உதவுகின்றது. பிறரை ஏமாற்றும் அதே நேரத்தில், அவர்கள் தங்களையும் ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். இந்தப் போக்கும் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு இயல்பானதாகும். இந்தப் போக்குஞ் சேராமல் யாழ்ப்பாணக் கலாசாரம் பூரணமடைவதில்லை. இவையெல்லாம் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பூச்சு வேலைகளே. சைவனொருவன் தன்னை அவ்வாறு காட்டிக்கொள்ள, நெற்றியிலே தாராளமாக விபூதிப் பூச்சை அப்பிக் கொள்வதைப்போல! சைவர்கள் புனைந்து கொள்ளும் வேடமே விபூதிப் பூச்சு. அந்த விபூதிப் பூச்சினுல் சைவத்தின் உயிர் மூச்சினை உணர்த்த முடியாது. ஆனுல், இந்த வெளிப் பூச்சையே யாழ்ப்பாணக் கலாசாரம் என்று நம்பி ஏமாறுவதும் ஏமாற்றுவதும் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு இன்றியமையாத பண்பாகத் தேவைப்படுகின்றது. உண்மையில், இந்தப் பூச்சு வேடங்களைக் கலைத்து, வேலித் திரைகளை அகற்றி, ஆழமான பார்வையை ஊடறுத்துச் செலுத்தினுற்ருன் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் மூல விக்கிரகத்தை அல்லது உயிர் மூச்சினை நம்மால் தரிசிக்க முடியும். அவ்வாறு தரிசிப்பதற்கு நமக்குத் துணிவு வேண்டும்; தெளிவு வேண்டும்; யாழ்ப்பாணக் கலாசாரத்துடன் இரண்டறக் கலந்து வாழ்ந்து, அதனின்றும் தன்னை விடுவித்துக் கொள்ளும் ஒரு துறவறப் பக்குவமும் வேண்டும். இவை மூன்றும்

அமையப்பெற்று, பேனுவை நேர்மையாக உழத் தெரிந்த பெற்றியனே உண்மையான — வேடம் கலேக்கப்பட்ட — சுயம்புவான யாழ்ப்பாணத்தைத் தரிசிக்கின்ருன். **யாழ்ப் பாணக் கதைகள்** என்னும் இத்தொகுதியிலே, சில கதை களேனும் அவ்வாருன தரிசன பயனேத் தொனிப் பொருள் களாகக் கொண்டு, சிறந்த கதைகளாக அமைந்துள்ளன என்பதையிட்டு கே. வி. நடராஜன் அவர்கள் பெருமைப் படலாம். முன்னீட்டிலே ஏதாவது நான்கு வார்த்தைகள் மங்கலமாகச் சொல்லப்படல் வேண்டுமென்ற பிறிதொரு சம்பிரதாயத்தைக் காப்பாற்றுவான் வேண்டி இதனே நான் சொல்லவில்லே; நிச்சயமாக இல்லே.

நடராஜன் அவர்களுக்குப் பத்து வருட எழுத்துப் பயிற்சி உண்டு. இந்தப் பத்து வருட ஈழத்துத் தமிழ் இலக்கிய முயற்சிகள் என்ற நிலேக்களனில் வைத்தே இக் கதைகளே மதிப்பீடு செய்தல் வேண்டும். 'புரட்சி ஓங்குக!' என்ற சர்வதேசக் கோஷம் ஒன்றுடன் யாழ்ப்பாணத்திற்கு இடதுசாரி இயக்கம் வந்து சேர்ந்தது. அதன் இலக்கியக் கிளேயாக முற்போக்கு இலக்கிய இயக்கந் தோன்றிற்று. இந்த இயக்கம் 'முற்போக்கு இலக்கியம்', 'தேசீய இலக் கியம்', 'மண் வாசனே இலக்கியம்' என்ற சில கோஷங்களே இயக்கத்தின் தந்திரோபாய (Tactical) நடவடிக்கைகளாக அறிமுகப்படுத்தியது. இக்கோஷங்களே எழுப்பியவர் களால், இக்கோஷங்களே விளக்கக்கூடிய திருட்டாந்தங் களாக அமையவல்ல இலக்கியங்களேப் படைக்க முடிய வில்லே. இதன் கோஷங்களின் தாற்பரியங்களே அதை எழுப்பியவர்களாலேயே உய்த்துணர முடியவில்லேயென் பதுதான் இந்த இயலாமைக்குக் காரணம். முற்போக்கு இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இலக்கியப் பயிற்சி குறைந் தவர்களாகவும், தனித்துவப் பார்வை இல்லாதவர்களாக வும், இயக்கத்தின் பிரசார பலத்திலே சுய மனித முன் னேற்றங் காணவேண்டுமென்ற அவாவுடையவர்களாக வும் இருந்தமை மட்டுமே இக்கோஷங்களின் தோல்விக் குக் காரணங்களல்ல. இவை தோல்வியைக் கடுகதியிற்

கொண்டுவர உதவின. ஆனால், இலக்கிய இயக்கத்திற்குக் குருபீடமாக அமைந்த அரசியல் இயக்கமே யாழ்ப்பாணக் கலாசாரத்தின் தனித்துவத்திற்குள் அமுங்கிவிட்டது. அப்படி அமுக்கும் வலிமை யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு உண்டு. இதன் காரணமாகத்தான் மத்தியதர வகுப்பைச் சேர்ந்த உயர் சாதி இந்துக்களின் தலைமைப்பீடமே இடது சாரி இயக்கத்தை வழிநடத்த வேண்டுமென்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. சாதிக் கட்டுப்பாடுகளின் இறுக்கம் வர்க்க முரண்பாடுகளுக்குத் தவறான விளக்கங் கொடுக்கத் தூண்டியது. சக்கிலியனான ஸ்டாலினை ருஷியப் பெருமக்கள் ஒரு வர்க்கத்தின் பெருந் தலைவனாக ஏற்றுக்கொண்டனர். ஆனால், யாழ்ப்பாணத்துக் கலாசாரம் இதனைக் கற்பனை செய்து பார்க்கக்கூட அனுமதிக்கமாட்டாது. எனவேதான், சிருஷ்டி இலக்கியத்தில் ஓரளவு பயிற்சியுள்ளவர்களும், சாதித் தாழ்வின் சிக்கலுறுத்த, சிருஷ்டி இலக்கியப் பயிற்சி அற்றவர்களைச் சாதி மேன்மை காரணமாக இலக்கிய இயக்கத்தின் தலைமைப் பீடத்திற்கு உயர்த்த வேண்டியிருந்தது. தலைமைப்பீடம் யாழ்ப்பாணத்து வெளிவேட கலாசாரத்தைப் பேண விழைந்த பொழுது, மற்றவர்கள் அப்போக்கிற்கு இசைவாக எழுதினர். இந்த முரண்பாடு முற்போக்கு இலக்கியகாரரின் எழுத்துக்களில் மிகமிக அம்மணமாகத் தெரிகின்றது. இவர்களுடைய சிருஷ்டிகள், தலைமைப் பீடம் இவர்களுக்கு விளக்க முடியாத கோஷங்களை விளங்கிக் கொண்டதான 'பாவலா'வையும், தங்களுடைய சாதியே தொழிலாளி வர்க்கமாக நிலைநாட்டிவிட வேண்டுமென்ற 'ருங்கி'யையுங் கொண்டு போலியாகி விடுகின்றன. மேலும், இலக்கியப் பயிற்சி அதிகமில்லாத இவர்கள் பிராந்தியத்திற் பயிலப்படுஞ் சில சொற்களை மட்டும் பெயர்த்தெடுத்து ஒட்டு வேலை செய்துவிட்டால், 'தேசீய இலக்கிய'மும் 'மண் வாசனை இலக்கிய'முந் தோன்றிவிடுமெனத் திரிகரண சுத்தியாகவே நம்புகிறார்கள். இந்த நம்பிக்கை இவர்களுடைய படைப்புக்கள் போலியானவை என்பதை நிறுவவே உதவுகின்றது. இலக்கியத்தின் தொனிப்

பொருளே ஒரு பிராந்தியத்தின் உயிரைப் பிரதிபலிக்க வல்லது. அந்த உயிர் தனக்கு இசைவான உருவந் தாங்கி இலக்கியமாக உயர்கின்றது. இதைக்கூட உணராத தலைமைப் பீடம், இந்தப் போலிகளுக்கும் இலக்கிய அந்தஸ்து உண்டு என வாதாடி, தன்னைப் படித்த வர்க்கமாக உயர்த்திப் பல்கலைக் கழகங்களில் உத்தியோகங்கள் சம்பாதித்துக் கொண்டது. மீண்டும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்க இயலாத வேலி நுழைந்து கொண்டது. சிருஷ்டி இலக்கிய ஆற்றலற்ற தலைவர்களுக்கும், எழுத்துப் பயிற்சியில் ஈடுபட்ட பாமர எழுத்தாளர்களுக்கும் இடையில் எழுந்த வேலி! வர்க்க போதத்தையூட்டி, சாதிகளை ஒழிக்க வந்த இயக்கம் புதிய சாதிகளைத் தோற்றுவித்துத் தோற்றது.

இந்தப் பகைப்புலத்திலே 'யாழ்ப்பாணக் கதைகள்' என்னும் இத்தொகுதியில் இடம்பெறுஞ் சில கதைகளின் தரத்தை இனங் கண்டு பிடிக்க முடிகின்றது. இயக்கத்தில் இராக்கதப் பிடிக்கும் சிக்காத ஒரு தனித்துவப் பார்வையை நடராஜனின் கதைகள் கொண்டுள்ளன. சில கதைகள் தேசீய இலக்கியத்திற்கான விளக்கத் திருட்டாந்தங்களாக அமைந்துள்ளன. இயக்கம் சாதிக்கத்தவறியதைத் தனி மனிதனுகவே சாதித்த பெருமையும் நடராஜனைச் சாருகின்றது. உண்மையான யாழ்ப்பாணக் கலாசாரத்தைத் தரிசிக்கவும் உதவுகின்றார்.

**பிரம்மஞானி** பருவத்தைத் தவறவிட்டு, சம்பிரதாயத்திற்காக மணந்து கொண்ட தமிழாசிரியருடைய வாழ்க்கையைப் படம் பிடிக்கின்றது. சாதியைத் தாண்டி எழும் காதல் உணர்ச்சியின் அவசங்களைச் **சாம்பல்** சித்திரிக்கின்றது. யாழ்ப்பாணத்து நம்பிக்கை, மரங்களிலே குடியேற்றி வைக்கும் 'முனிக'ளைப் பற்றி நரபலி நயம்படச் சொல்லுகின்றது. **கறை**யில் வரும் பாத்திரங்களை நாம் அடிக்கடி யாழ்ப்பாணக் கோடுகளிற் சந்திக்கலாம். நினைத்தும் பார்க்க முடியாத இந்த எதார்த்தமும் யாழ்ப்பாண வேலி மறைப்பில் கொழுக்கின்றது. **இழவு** யாழ்ப்பாணத்

துப் போலி ஆசாரத்தின் பின்னணியில், யாழ்ப்பாணத்தின் அறியாமையையுஞ் சுட்டிக் காட்டுகின்றது; அதே சமயம் மனோவிகாரக் காம எண்ணங்களையுந் தொட்டுக் காட்டுகின்றது. **வேலி** யென்ற ஒரு கதையே போதும் இத்தொகுதிக்கு 'யாழ்ப்பாணக் கதைகள்' என்ற பொதுப் பெயரைச் சூட்டுவதற்கு. இக்கதை மற்றெல்லாக் கதைகளுடைய தொனிப் பொருள்களையுந் தரிசிப்பதற்கான திறவுகோலை வைத்துள்ளது. **விடிவு** ஆசிரியருக்கு யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறையிலும், அங்கு பயிலப்படுஞ் சொற்களிலுமுள்ள தேர்ச்சியை நன்கு காட்டுகின்றது. கதை சொல்லும் உபாய முறையும் நேர்த்தியாக அமைந்துள்ளது. 'வேலி'யும் 'விடிவு'ம் என்றும் நின்றுலவப் போகும் நல்ல சிறு கதைகளாகும். **கனவான்** என்ற கதையில், ஆசிரியர் தமக்கிருக்கும் நகைச்சுவை உணர்ச்சியை, கதை வடிவிற் சில இறுக்கமான வார்த்தைகளிற் காட்டுகிறார். இவ்வளவு கதைகளைத் தரமாகத் தமது தொகுதியிற் சேர்த்து கே. வி. நடராஜன் அவர்கள், உண்மையில், யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் 'தேசீய இலக்கியம்' இதுதான் என்பதைத் திருட்டாந்தமாகச் சுட்டிக் காட்டத்தக்கதான ஒரு தொகுதியைத் தந்துள்ளார். பல காலமாகத் தேவையாக இருந்த ஒன்று இச்சிறு கதை மூலம் நிறைவுறுகின்றது என்ற நிறைவே இத்தொகுதியை வாசித்து முடிந்ததும் மிஞ்சுகின்றது. 'யாழ்ப்பாணக் கதைகள்' நல்ல மகுடம். உள்ளே இடம் பெறுங் கதைகள் மகுடத்திற்கு ஏற்றவை.

**எஸ். பொன்னுத்துரை.**

*231,* ஆதிருப்பள்ளித் தெரு,
கொழும்பு—*13.*
*18-12-65.*

# பதிப்புரை

**யாழ்.** இலக்கிய வட்டம் என்ற சங்கம் தொடங்கிச் சில மாதங்களே ஆகின்றன. எந்த இலக்கியச் சங்கங்களுக்கும் போட்டி போடாத முறையில் அதிகம் ஆர்ப்பாட்டமின்றிச் சில நற்பணிகளை ஆற்றலாம் என்று குறிப்பிட்ட சில இலக்கிய — எழுத்தாளர் தொடங்கிய சங்கம் இது. அதன் முக்கிய உறுப்பினருள் ஒருவர் இந்நூலாசிரியராகிய கே. வி. நடராஜன் அவர்கள். பழகுவதற்கு மிகவும் இனியவர். தன்னைப் பற்றியும் தன் எழுத்தைப் பற்றியும் அளவுக்கு மீறிப் புழுகாதவர்.

அப்படிப்பட்ட எழுத்தாள நண்பரது நூலை முதலாவதாக வெளியிடுவதில் யாழ். இலக்கிய வட்டம் மிகவும் பெருமைப்படுகிறது. இலக்கிய வட்டத்தின் நோக்கங்களில் புத்தக வெளியீடும் ஒன்று. அந்த நோக்கத்தில் ஒரு சிறிதளவு அடியெடுத்து வைத்ததில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

'யாழ்ப்பாணக் கதைகள்' என்ற இந்தச் சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளைப் பற்றி நாம் ஒன்றும் கூருமல் வாசகர்களின் அபிப்பிராயத்துக்கே விட்டுவிடுகிறோம். ''சிறுகதைகளும் இலக்கியமா? அவற்றில் பிரசாரமா? அவை தூய்மை கெடாமல் படைக்கப்பட வேண்டுமா? 'பச்சைப் படியாக' எழுதப்பட வேண்டுமா? யாழ்ப்பாணக் 'கொச்சை' மொழியில் எழுத வேண்டுமா? செந்தமிழில் எழுதுதல் வேண்டுமா?'' என்ற பல பிரச்சினைகள் உள்ள காலமிது. அதோடு தமிழ் நாட்டுப் பிரபல பத்திரிகையாளர் ஒருவர், 'ஈழத்துக் கதைகளுக்கு அடிக்குறிப்பும் போடவேண்டும்' என்ற புதியதொரு 'குண்டை'யும் தூக்கிப் போட்டிருக்கிறார்.

கால வெள்ளத்தைத் தாண்டி நல்லவை நிலைக்கும். மற்றவை அழிந்துவிடும். அதற்கு யாரும் 'வக்காலத்து'

வாங்கவோ, விமர்சன விக்கிரகமாக நின்று மறைக்கவோ வேண்டாம்.

நண்பர் கே. வி. நடராஜன் 1955 — 1965 என்ற இடைப்பட்ட காலத்துள் எழுத்துத் துறைக்கு வந்தவர். அவரின் முதல் முயற்சி இது. இம்முயற்சியில் வெற்றி பெற்று இன்னும் ஊக்கம் தளராமல் எழுத்துத் துறையில் பீடுநடை போடவேண்டும் என்பது எம் அவாவாகும்.

கனக. செந்திநாதன்,
தலைவர்,
யாழ். இலக்கிய வட்டம்.

குரும்பசிட்டி,
15-12-65.

# என்னுரை

நூலுக்கு முன்னுல், ஆசிரியன் சில வார்த்தைகள் சொல்வது சம்பிரதாயமாகும். அந்தச் சம்பிரதாயம் வர வேற்கத் தக்கதே. ஏனெனில் இச்சம்பிரதாயமில்லாவிட்டால் ஆசிரியன் தான் உருவாக்கியுள்ள கதைகளைப் பற்றி அறிமுகப்படுத்துவதற்குக் களமில்லாமற் போய்விடும்.

என்னைப் பற்றிச் சுயகட்டியங் கூறுவதற்கு அதிகமில்லை. நான் இயக்கங்களினுலும், எழுத்தாளர் அணிகளினுலும் உருவாக்கப்பட்டவனல்லன். தானுகத் தோன்றி தவத்தாற் கொடியுயர்த்தியவனென்று தம்பட்டமடிக்கத் தெரியாத கோழை நான். இந்தத் தொகுதியை வெளியிடுவதினுல் ஈழத்துச் சிரஞ்சீவிச் சிறுகதை எழுத்தாளர் வரிசையில் இடம் பிடித்துவிட்டேன் என்று கர்வப்படவுமில்லை.

நான் யாழ்ப்பாணத்தவன். யாழ்ப்பாணத்துச் சூழலில் வாழ்பவன். யாழ்ப்பாண மக்களிடம் விசேட, தனித் தன்மையுள்ள பண்பாடு இருக்கின்றது. அவர்களுடைய குறைபாடுகளிலே கூட நமக்கு அனுதாபம் பிறக்கிறது. அவர்களுடைய உள்ளத்து உணர்ச்சிகளையும், நெகிழ்ச்சிகளையும் அவர்கள் மறைக்கிருர்கள். அந்த மறைப்பும் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் பிரிக்கமுடியாத ஓரம்சமாகும். இந்தக் கலாசாரத்தின் இராக்கதப் பிடிக்குள் சிக்கியுள்ள பல பாத்திரங்களையே நான் இந்தப் பதினெரு கதைகளிலும் அறிமுகப்படுத்தியுள்ளேன். இந்தக் கதைகளிற் சிலவேனும் வெற்றிக் கதைகளாக அமைந்திருக்குமானுல், அந்தப் பெருமையும் யாழ்ப்பாணக் கலாசாரத்திற்கு உரியதே.

நான் ஓரளவு துணிவுடன்தான் இச்சிறுகதைத் தொகுதியில் உள்ள கதைகளைத் தொகுத்திருக்கின்றேன். என்னுடைய பத்து ஆண்டு எழுத்துப் பயிற்சியில் அறுவடையான பல கதைகளுட் சிலவற்றையே தொகுத்துள்

ளேன். இது என்னுடைய கன்னி முயற்சி. மனிதனுடைய ஆற்றலுக்கு எல்லையுண்டு. குறைகள் இருக்கக்கூடும். அவற்றைச் சுட்டிக் காட்டும்பொழுது ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

இந்தத் தொகுதியை வாசகர் கரங்களுக்களிக்கும் இச் சந்தர்ப்பத்தில், சில உண்மைகளைப் பொறித்து வைக்க ஆசைப்படுகின்றேன். நடந்து வந்த பாதையை மறந்து, ஆக்கமும் ஊக்கமும் அளித்தவர்களுடைய பெயர்களை இருட்டடிப்புச் செய்து 'நானே நான்' என்று நெஞ்சு நிமிர்த்தும் சில எழுத்தாளர்கள் நம் மத்தியில் வாழ்கின் றார்கள். நன்றி மறக்கும் அந்தக் கூட்டத்துடன் நான் சேர விரும்பவில்லை.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் திரு. எஸ். பொன்னுத் துரை அவர்களுக்கு நிரந்தர இடமுண்டு. அவர் இது வரை தனி மனிதனுகவே சாதித்தவை அதிகம். ஈழத்து முன்னணிச் சிறுகதை எழுத்தாளர்கள் பலர் அவரால் உரு வாக்கப்பட்டவர்கள்; பலர் அவருடைய எழுத்துக்களின் அருட்டுணர்வால் எழுத்தாளர்களாகியுமிருக்கிருர்கள். 'எஸ். பொ.' அவர்களுடைய தொடர்பும், அவர் அவ் வப்போது கூறிய உற்சாக மொழிகளும் என்னைச் சிறு கதை எழுத்தாளனுக்குவதற்குப் பெரிதும் உதவின என் பதைப் பெருமையுடன் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். 'சிறுகதை மன்னன்' என்று பலராலும் விதந்தேத்தப்படும் அவரே இந்நூலுக்கு 'முன்னீடு' வழங்கியுள்ளார். அவருக்கு என்னுடைய உளங் கனிந்த நன்றி.

அவருடன் சேர்த்து இன்னுஞ் சிலருக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டவனுவேன். என் மேசையில் தூங்கிய பல கதைகளைப் பத்திரிகையில் வெளிவர எனக்கு ஊக்கந் தந்தவர் வீரகேசரி யாழ்ப்பாண நிருபரும், சிறந்த எழுத் தாளருமாகிய திரு. சி. செல்லத்துரை அவர்களாவர். பல சந்தர்ப்பங்களில் என்னுடைய சிறு கதைகளை வாசித்து, அவற்றின் குறைநிறைகளைப் பற்றிச் சொல்லி ஊக்கியவர்

திரு. இ. நாகராஜன் அவர்களாவர். இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்களுடைய இரசனையே, பல எழுத்தாளர்களை வாசகர்களுக்கு நன்கு அறிமுகஞ் செய்து வைத்தது. இம்மூவருக்கும் என்னுடைய உளங் கனிந்த நன்றி.

இப்புத்தகத்தை வெளியிட முன்வந்த யாழ். இலக்கிய வட்டத்தாருக்கும், இதை உருவாக்குவதிற் பல உதவிகளைச் செய்த இலக்கிய வட்டச் செயலாளர் 'யாழ்வாணன்', துணைச் செயலாளர் திரு. சு. சபாரத்தினம் (சசிபாரதி) மற்றும் திரு. வா. மாணிக்கம் ஆகியவர்களுக்கும் என் நன்றி.

ஈற்றில், இப்புத்தகத்தின் கவர்ச்சியான அமைப்பிற்கு, ஈழத்தின் முன்னணிப் பிரசுரகர்த்தாக்களுள் ஒருவரான, அரசு பதிப்பக நிர்வாகி எம். ஏ. ரஹ்மான் அவர்கள் பல சந்தர்ப்பங்களிலே ஆலோசனை கூறியுள்ளார். அவருக்கும் என் நன்றி. மிகக் குறுகிய காலத்தில் இப்புத்தகத்தை விரைவில் அச்சிட்டுதவிய ஸ்ரீ சண்முகநாத அச்சகத்தாருக்கும் என் நன்றி.

**கே. வி. நடராஜன்.**

யாழ்ப்பாணம்,
15-12-65.

# உள்ளே

| | | |
|---|---|---|
| பிரம்மஞானி | ... | 1 |
| கனவான் | ... | 10 |
| சாம்பல் | ... | 22 |
| நரபலி | ... | 36 |
| கறை | ... | 45 |
| சுவீப் | ... | 56 |
| அன்றில் அன்றேல்? | ... | 69 |
| இழவு | ... | 78 |
| ஊருக்காக | ... | 89 |
| வேலி | ... | 98 |
| விடிவு | ... | 102 |

# பிரம்ம ஞானி

வயிரவ கோவிலடி வாசலில் பஸ் ஒன்று தங்கிப் போகும் அசுரத்தொனி ஊருக்குள் எதிரொலிக்கிறது.

யாரோ எவரோ என்ற அசுவாரசியத்துடன் ஊர் திரும்பிப் படுத்துக் கொட்டாவி விடுகின்றது.

உழைக்கும் மக்கள் நித்திரா தேவியை இறுக அணைத்து, இன்பம் அனுபவிக்கும் அந்த வேளையில். யார் வந்தாலென்ன? ஊர் அரைத் தூக்கத்திற் சுகிக்கிறது.

பஸ்ஸை விட்டிறங்கிய வித்துவான் கந்தசாமி வெகு சிரமத்தினூடே தன் கைக்கடிகாரத்தைப் பார்க்கின்றார். மணி பன்னிரண்டே முக்கால் என்பதை நெருப்புக்குச்சி வெளிச்சத்தில் நீச்சலடித்த கடிகார முட்கள் தெரிவிக்கின்றன.

சாதாரணமாக அவர் கையிலிருந்த கடிகாரம் அவருக்கே தெரியவில்லை என்பது ஆச்சரியந்தான்! உள்ளுணர்வுப் 'பெண்டுலத்'திற்கு அது இருப்பது தெரியும் ஆனால் வெளியே இருள்......

கொடிய இருளின் கோரத்தாண்டவம் எங்கும் குறைவில்லாமல் அரசோச்சுகிறது. அதன் அடக்குமுறைச் சட்டத்திற்கு அடிபணிந்து விட்டதுபோல் கரிக் கும்பமாகக் காட்சியளிக்கிறது வடக்கம்பிராய்க் கிராமம்

காரிருளின் கோரப்பிடியிற் கருகித்தெரிந்த ஊரை ஒருமுறை திரும்பிப் பார்க்கிருர். அவருடைய அகத்தையும் புறத்தையும் அந்தகாரமான இருள் சொந்தம் கொண்டாடியதால் எங்கு செல்வோம் என்ற மனப்பிரமை அவருக்கு. ஒளியுண்ட விழிகளை உறுத்தும் இருளுடன் ஐக்கியப் படுத்துவதற்காக இமைகளை அப்படி மளமளவென்று வெட்டிப் பிரித்து நிலைமையைச் சரிசெய்ய முயலுகின்ருர்.

அவருடைய நெஞ்சில் நிரம்பி வழியும் வியாகூல இருளுக்கும் தன் விழிகளால் வெட்டிப் பார்த்து விழிதிறக்க நினைக்கின்ற அந்த வெளியிருளுக்கும் வித்தியாசம் இல்லை.

கலங்கிச் சுருங்கிய 'நஷனல்' உடுப்பை இலேசாக உதறித்தட்டிவிடுகிருர். சிலும்பிச் சின்னுபின்னப்பட்டிருந்த தலைமயிர்க் கூட்டத்தை ஒரு நிரைப்படுத்த விரும்பியவராய் வலக்கை விரல்கள் ஐந்தையும் அதற்குள்விட்டுக் கோதிக் கொள்கிருர்.

கையில் ஏதோ ஒன்று. எதுவாக இருப்பினும், கனக்கும் பொருள் என்பது கைமாற்றிக்கொண்டு செல்வதிலிருந்து தெரிகிறது. காலின் செருப்புக் குதிகளை முத்த மிடுமோசை நிசியின் அமைதியினுல் தூரத்தில் கேட்கிறது. அது வித்துவான் ஊருக்குள் இறங்கிவிட்டார் என்பதைக் கட்டியங் கூறிச் சொல்வதாயமைகிறது.

பழக்கப்பட்ட தெரு என்ற மமதையில் பாதையைப் பார்க்காமலே நடக்க முயற்சிக்கின்ருர். இடைக்காலத்தில் எத்தனை எத்தனையோ குண்டு குழிகளைத் தன்வசம் சேர்த்துக்கொண்ட அத்தெரு அவரையொரு அசல் குடிகாரனுக்கிக் கொண்டே நீண்டு செல்கிறது!

அதனுலென்ன ? அதையொன்றும் அவர்மனம் பொருட் படுத்தவில்லை. கனகம் ! அவருடைய மனைவி. அவருக்குப் பாலிய வயது முதற்கொண்டே நன்ருகத் தெரிந்தவள் தானே ! அவளே அவரை இடறித் தூக்கி எறிந்து விட்டிருக்கும் போது......

குண்டு குழிகளில் அவர் கால்கள் இடறுப்படுவ தால் உடல் குலுங்கத்தான் செய்கிறது. ஆனுல், அவர் மனம் இரைமீட்கும் அந்த மொட்டைக் கடிதத்து விவகாரத் திலேயே நிலைத்திருக்கின்றது.

அதிலோர் வார்த்தை. நெஞ்சில் உளிகொண்டு செதுக்கியது போல் அங்கு நிலைப்பட்டுவிட்டது. இன்ன மும் அவ்விடத்தில் உதிரம் பொசிந்து கொண்டேயிருக் கிறது. ‘ அதற்கு உன் அம்மாக்காரியும் உடந்தையாயிருக் கிருள் ’ என்பது தான் அது.

இனந்தெரியாத யாரோ ஒரு யமனுல் எழுதப்பட்ட அக் கடிதத்தில் தாயைப் பற்றி இழுத்துவிட்டிருப்பது விடு படாத வெறும் புதிராகவே பட்டது.

‘ பெற்றதாய் பிள்ளைக்கு இப்படியும் செய்வாளா ? எந்தத் தாய்தான் இந்தக் கொடூரமான ஈனத்துரோகத் திற்கு உடந்தையாக இருக்கமுடியும் ? அப்படிப்பட்டவ ளுடைய சொந்த வாழ்க்கை...... ? ஐயோ அம்மா ! ’

அசைமீட்ட ஆட்டிற்குத் திடீரென்று இரைப்படுவான் வியாதி கண்ட மாதிரியாகிறது.

தாயைப் பற்றிய நினைவைத் தொடர்ந்து நினைக்கா மல் இடைக்கொள்ளையாக அதைச் சாகடித்துவிட்ட அவர், மனதைத் திருப்பி மனைவிமேல் மேயக்கட்டுகிருர்.

பயிரும் ஆடும் அவருடையது. கயிற்றை வேறு தாராள மாக இளக்கிக் கட்டிவிடுகிருர். எப்படி மேய்ந்தால் என்ன?

அம்மானுடைய ஆட்டைத்திவசம் முடிந்த அடுத்தநாள் என்பது அவருக்கு நன்கு ஞாபகமிருக்கின்றது. அதைத் தொடர்ந்து அவருடைய வாழ்க்கையின் கதையை உள்ளூர் இருட்டில் யாரோ ஒளித்திருந்து பகடி பண்ணிப் பேசுவது போன்ற ஒரு சலனம் மனத்திற் பிரமை ஊட்டுகிறது.

உண்மை. ஊருக்குத் தெரியாமல், இப்படியொரு மொட்டைக் கடிதம் வந்திருக்க நியாயமில்லை. அதிலும் அவரை மாப்பிள்ளையாக அடைய விரும்பி ஏமாந்தவர்களுக்கு, இதைவிட வேறு சந்தர்ப்பம் எப்போது கிடைக்க முடியும் ?

அடுத்த நாள்.

ஆட்டைத்திவசத்திற்குச் சமைத்த சட்டி பானைகளைத் துப்புரவாக்கி வைத்துவிட்ட சுற்றத்தார் வித்துவானைச் சூழ்ந்து கொள்ளுகிறார்கள்.

அவர்களுக்கென்ன ? அடுத்த விருந்தையும் நாட் குறித்து வைத்து விட்டால் வயிற்றைச் சற்று ஆசுவாசமாக இளக்கிவிட்டுக் கொண்டு வரலாம் என்ற நினைப்பு.

கலியாணப் பேச்சு வெற்றிலைச் 'சமா'வுடன் ஆரம்பமாகிறது. பழஞ்சோற்றுப் புளிச்சல் எதிரெடுப்பிற்குத் தன்னை ஈடு கொடுத்துச் சமாளிக்க முடியாத பொக்கை வாய்க்கிழவரொருவர் பேச்சைத் தொடக்கி வைக்கின்றார்.

'ஏன்ரி பிள்ளை விசாலம்' இந்தப் பொட்டை கனகத்தின் சங்கதியைத்தான் சொல்லுறன். தாய் தகப்பனில்லாத பிள்ளையை நெடுக வீட்டிலை வைச்சுக் கொண்டு........... பொடியனும் வந்து நிக்குது இப்ப கதைச்சாத்தானே நல்லது' என்ற பெரியவர், எல்லுப்போல தேத்தண்ணி குடித்தால் தேவையில்லை என்ற பாணியில், அந்தப் பெரிய ஏவறையைத் தொண்டைக்குள் இருந்து வெளியே தள்ளினர்.

'அதுக்கு நான் என்னண்ணை செய்ய?...... நானுந் தான் நாண்டுகொண்டு நிக்கிறன் அவர் ஓமெண்டு சொல்லாமலுக்கு......' என்று இழுத்தாள் வித்துவானின் தாய் விசாலம்.

எல்லோரும் கதைத்துப் பேசி ஆடும் நாடகம் தான் என்பது வித்துவானுக்குத் தெரியும். என்ருலும், அவருடைய மனச்சாட்சியே அவரைக் குத்திக் காட்டியபோது கனகத்தைக் கைப்பிடிப்பதற்குச் சம்மதம் தெரிவித்து விட்டார். அதைத் தொடர்ந்து தேநீர் விருந்தொன்று சமிபாட்டிற்கு எல்லோர் வயிற்றிலும் இன்பமாகச் செல்கிறது.

அந்த லீவு முடிந்து போவதற்குள்ளாகவே வித்துவானுக்கும் கனகத்திற்கும் திருமணத்தை முடித்து வைத்து விட்டார்கள். வயது மூப்பிளமையில் இருவருக்கும் எவ்வளவோ உண்டு. பத்தாண்டுகளை முதலில் உருட்டித் தள்ளிவிட்ட வித்துவானுக்கு, முப்பது வயதுக்காரி ஒத்து வரமாட்டாளா?

திருமணம் வெகு சிறப்பாக நடக்காவிட்டாலும் மட்டுக்கு மட்டாக வெகு கச்சிதமாக நடந்தேறியது. ஆனல் ஒரு சங்கதி ; அது ஒரு துக்குறி மாதிரி ஆகிவிட்டது. எல்லோருடைய வயிறுகளும் பகீரென்று பற்றி எரியத்தான் செய்தன. தவணைக் கணக்கைக்கூடக் கலியாண உற்சாகத்தில் கனகம் மறந்து போய் விட்டாளா?

கனகம் அன்றைக்கென்றே, தாலி கழுத்தில் ஏறிய உடனேயே தன்னைச் சுற்றிக் கரிவட்டம் போட்டுக் காவல் செய்து கொண்ட சங்கதியிருக்கிறதே .. ...

மூக்கின் கொழுந்தில் யாரோ ஓங்கிக் குத்தியது போலிருந்தது. மேற்படி சங்கதியைக் கேட்ட வித்துவானுக்கு திட்சை கேட்ட அவருக்குத் தூக்க மாத்திரைகளைச் சாப்பிட்ட அயர்வு தட்டிற்று வாழ்க்கையில். வெட்கம்

வேறு அவரைப் பிடுங்கித் தின்றதால் ‘லீவு முடிந்து போய் விட்டது’ என்று சொல்லி அடுத்த நாளே கிளம்பிப் போய்விட்டார்.

நாற்பது வயதை எவ்வளவு நாணயத்துடன் கழித்த மனிதன்! ஊருக்குள் இருப்பதுகூடத் தெரியாது. அவருடைய பிரம்மச்சரியத்தில் இதுவரையில் ஒரு தவறேனும் ஏற்பட்டிருக்குமா ?

கலகெதரையின் குளிர்காற்றில் கனகத்தின் நினைவு அடிக்கடி தலைகாட்டத்தான் செய்தது. இடையில் ஒருதரம் போய் வரவேண்டுமென்ற ஆசையுந்தான். என்றாலும் எங்கே ஒழிகிறது? இலக்கியச் சொற்பொழிவு என்று சதா ஏதாவது ஒன்று இருந்து கொண்டேயிருக்கும். கடைசியில் ஒரேயடியாக பள்ளிக்கூட லீவு விட்ட பின்பு போய் விடுவோம் என்று தீர்மானித்திருந்தவரை, திடுதிப்பென்று வந்த மொட்டைக் கடிதம் கட்டித் தூக்கி வந்து ஊருக்குள் எறிந்து விட்டதென்றால்...

வெட்கக்கேடான சங்கதி. அவருடைய அறிவுக்கும் பெருமைக்கும் இப்படி ஒரு இழுக்கைக் கனகம் உண்டாக்கி விட்டாள்.

அவரால் அதை நம்பவே முடியவில்லை. என்றாலும் மனம் குழம்பிப் போய்விட்டது. சோகச் சாயல் அவர் முகத்தில் தானாகவே வந்து கவியத் தொடங்கி விட்டது.

வித்துவான் என்பதால் சந்தேகம் விட்டு விலகியிருந்து விடுமா ? அன்பு அதிகமாகச் செலுத்தப்பட்ட இடத்தில் சும்மா ஒரு கீறு விழுந்தாலும் போதும், சந்தேகம் தானாகவே செழித்து வளரும்.

அவருடைய ஆண்மைக்குச் சவால்விட்ட அந்த மொட்டைக் கடிதத்தை மறுபடியும் ஒருமுறை பைக்குள் கைவிட்டு நெருடிப் பார்க்கிறார்.

அது விரிபுடையனுகச் சரசரக்கிறது.

'கட்டிய மனைவி கள்ளப் புருஷன் கனகசபையுடன் சோரம் போகிருள்' என்ருல் எட்டிநின்று கேட்டுவிட்டுப் போகக்கூடிய சமாச்சாரமா ?

'வெட்டிக் கொலை செய்ய வேண்டியது தான் !

'இல்லையேல், நானுவது செத்தொழிய வேண்டியது.'

பல நினைவுகள் குதியாட்டமிட வித்துவான் கால்களை எட்டிப் போட்டு நடக்கிருர்.

'அப்படிச் செய்யவில்லை யென்ருல், காலமெல்லாம் சொள்ளைக் கதைகள் பேசி எள்ளி நகையாடுமே ஊரும் உலகமும். தலைநிமிர்ந்து நடக்கத்தான் முடியுமா ஊருக்குள்' என்று திரும்பவும் தன்னைத்தானே கேட்டுக்கொண்ட வித்துவானின் நடையிலே மீண்டும் வேகம்.

இருட்டை எதிர்த்துப் பிரித்துக் கொண்டு நடக்கும் வித்துவானின் முன்னே சற்றுத் தொலைவில் சென்று கொண்டிருக்கிறதே ஓர் உருவம், அது... ?

குரல், குரல்வளைக்குட் சாம்பியது. அவருடைய திடப் படுத்தப்பட்ட நெஞ்சுகூட சற்றுநேரம் வெலவெலத்துப் போய்விட்டது. வித்துவான் திகைத்து நின்று நோட்ட மிட்டார். பேய், பிசாசைக் கண்டாற்கூட ஏற்படமாட்டாத திகில் ஒரு கணப் பின்னத்தில் அவரை உலுக்குகின்றது. மனித உருவமென்று நிதானித்த பின்னர் செருப்பைக் கழற்றிக் கைகளில் எடுத்துக் கொள்ளுகிருர். தூரத்தில் செல்லும் அந்த உருவத்தைத் தொடர்ந்து செல்லும் முயற்சியது.

கடுகதி வேகத்தில் நடக்கும் அந்த உருவம் அடிக் கொருதரம் பின்னும் முன்னுமாக இருட்டைத் துளாவிப் பார்த்துக் கொண்டே நடக்கின்றது.

மொட்டைக் கடிதம், சரித்திர தஸ்தாவேஜாக விரிகிறது... பிரம்மச்சரியத்தின் இந்திரியப் புலனடக்கம் அவரை எள்ளி நகையாடுகின்றது. ஒழுக்க சீலம் சம்மட்டியாக அவருடைய மண்டையை ஓங்கி அறைந்து பிளக்கின்றது. அந்த மண்டைப் பிளவில் முன்னுல் நடக்கும் உருவம் கனகசபையாக மிடுக்கு நடைபோடுகின்றது... அவருடைய சேதனச் செயலையும் மீறி, அவருடைய உடல் அதன் பாரத்தை இறக்கி, அந்த உருவத்தின் பின் இறகாகப் பறக்கின்றது... அவரும் சமீபமாக வந்து விடுகிருர்.

வேலிப் பொட்டுக்கூடாக முதுகை வளைத்து உள்வளவுக்குள் தன்னை இழுத்துக் கொண்ட கனகசபை வித்துவானின் வீட்டிற்குள் புகுந்து விடுகிருன் !

இருவரையும் தொலைத்துத் தலைமுழுகி விடுவதென்ற வீருப்புடன் தொடர்ந்து வந்த வித்துவான், ஏன் அப்படி வேலிப் பொட்டடியில் கல்லாய்ச் சமைந்து போயிருக்கிருர் ?

வேலியைப் பிரித்துச் சென்ற பிணத்திற்கு இளநீர் வெட்டி வைத்து அழும் காட்சி...

பொட்டிற்குள் வித்துவானின் உடல் இலகுவாகப் புகுந்து முன்னேறுகிறது கதவு மூடாமற் சார்த்தப்பட்டிருக்கிறது. வீட்டிற்குரியவன் போன்று கனகசபை உள்ளே நுழைகின்ருன். கதவு உள்ளே சார்த்தப்படுஞ் சப்தம் கேட்கின்றது.

வித்துவானின் உள்ளம் ஒரு கணம் குழம்பிய குளமாகின்றது. மறுகணம் தாமரை இலை நீராகின்றது. அடுத்த கணம் தாமரை இலை நீர் குளத்து நீருடன் கலந்து கலங்குகின்றது. கலங்கிய குளத்தின் நீர்த்துளி ஒன்று தாமரை இலையிலேறி, நித்திய ஜாலம் காட்டுகின்றது.

கதவை வெளிப்புறமாகப் பூட்டினுர்.

அன்றொருநாள் வித்துவானுக்கும் கனகத்திற்கும் விவாகம் முடித்து வைத்த சமூகம் அங்கு கூடிநிற்கிறது அவர்களுடைய உள்ளங்களில் துவேஷம் குடிகொண்டிருக்கின்றது. ஆனால், வித்துவான் மிக அமைதியாகச் சில வார்த்தைகளில் விஷயத்தை விளக்கி, வீட்டைத் திறந்து காட்டுகிறார்.

கனகமும், கனகசபையும் வெலவெலத்து, நடுநடுங்கி விழிகளை நிலத்திற் புதைத்து நிற்கின்றார்கள்.

கூட்டத்தில் நின்ற கிழவர்களிற் சிலர் "தூ! மானங் கெட்ட சவங்கள்" என்று துப்பல் மூலம் ஆத்திரத்தைத் காட்டுகிறார்கள்.

வித்துவான் பிரம்மஞானியின் பரிபக்குவ நிலையுடன், வார்த்தைகள் தளம்பாமல் மிகவும் நிதானமாகச் சொன்னார்: "உங்களுக்கு விருப்பமெண்டால், ஊரறிய வாழ்கிறது தானே? ஏன் ஒளிப்பு மறைப்பு? நான் வருகின்றேன்."

ஊரைத் திரும்பிப் பார்க்காமல் வித்துவான் நடக்கத் தொடங்குகிறார்.

அந்த துன்பப்பட்ட கௌதம முனிவரே தன் மனைவி அகலிகையைக் கல்லாகச் சமைத்தார். அகலிகை, ஸ்ரீ ராமனின் கால் வண்ணம் படும்வரையிற் சிலையாகத் தவமிருந்தாள்.

ஆனால். கனகத்தின்மேல் தனக்கிருந்த உரிமையை சமூகத்தின் முன்பாக உதறிவிட்டு, அவளுக்கும் புதுவாழ்வு அளித்து ஊரைவிட்டுத் தூரத்தூர நடந்து கொண்டிருக்கும் வித்துவான் ...?

---

# கனவான்

யாழ்ப்பாணம் 'கிராண்ட் பஜார்' வீதியிலுள்ள சுப்பையா 'சாறி எம்போறியத்தின்' முன்பாக, அரசரத்தினம் ஓட்டி வந்த 'பரீனு கார்' 'சடின் பிரேக்' குடன் நிறுத்தப் பட்டது.

திடீரென்று இப்படி நிகழ்ந்தால் யார்தான் திகிலடைய மாட்டார்கள்? ஜனப் போக்குவரத்து நிறைந்த அத்தெரு ஒருகணம் ஸ்தம்பித்து நின்றுவிட்டது.

'என்னவோ ஏதோ' என்ற திக்பிரமைகொண்ட சனங் களின் பார்வை அரசரத்தினத்தின் காரை மொய்க்கின் றன. தற்செயலாக ஏற்படும் அந்தரம் ஆபத்துக்குப் போடவேண்டிய 'புல்பிரேக்கை' சர்வ சாதாரணமான சும்மா வேளையிலும் பிடிப்பதாக இருந்தால் என்னதான் நெஞ்சுரமுள்ளவர்களாக இருந்தபோதிலும், இருதயத்தின் துடிப்பு ஒரு நிமிஷ நேரம் செயலற்று நின்றுவிடுவது தவிர்க்க முடியாத இயற்கைதானே!

'பிரேக் ரெஸ்ற்' பண்ணிப் பார்ப்பதற்கு அரசரத்தினம் என்ன பெரிய மெக்கானிக்கா? பிரேக் பிடித்ததனுல் சக்கரங்கள் தெருவில் அழுந்தி இழுபட்டு அலறிய சப்தம்.... 'நல்லவேளை' யாரையும் அடித்துவிடவில்லை என்ற தெம்பு ஏற்பட்ட திருப்தியுடன் பிரக்ஞை பெற்ற பாதசாரிகள் மறுபடியும் தங்கள் வழியே விரைகிருர்கள்.

திடீர் 'பிரேக்' போட்டு நிறுத்தி இறங்குவதிலும் ஒரு தனிச் 'சுதி'தான் போலும்! சும்மாவா? சில இளவட்டங்கள் மனம் விட்டுப் பேசிக் கொள்கிருர்களே, 'நல்ல ஸ்ரையிலான நிற்பாட்டமென்று'. இரண்டொரு கிழட்டுக் கட்டைகள் மாத்திரம் 'சதிரம் புல்லரிச்சுப் போச்சு அவன் பிடிச்ச பிறேக்கில, பத்தியெரிவாங்கள் செத்துப்போறது உப்புடித்தானே' என்று திட்டிக் கொண்டார்கள்.

என்ன இருந்தாலும் 'ஸ்ரியறிங்' என்ற லகானைப் பிடித்து இப்படிச் சரித்து வெட்டி, நிறுத்துவதில் தனக்கு நிகர் வேறு யாருமில்லை என்பதை வெளிக்காட்டிக் கொள்வதற்கு இதுவா வழி? எத்தனை பேருடைய ஏக்கத்துக்குப் பாத்திரமாக வேண்டி இருக்கிறது!

ஒரு தரம் முகத்தைத் தாழ்த்தி நிலத்தை முத்தமிட்டு இன்னமும் 'ஜம்' பண்ணுவதை நிறுத்தவில்லை, கார். இத்தனை களேபரத்துக்குக் காரணமாயிருந்த அந்தக் கார் புத்தம் புதிது என்பதைப் புறம்பாகச் சொல்ல வேண்டுமா என்ன? 'சோக்கான' சொகுசு நிறைந்த அந்த வாகனத்தை இலேசாக ஒரு தரம் பார்த்தால், சாதாரண பிரகிருதிகள் ஜன்மத்துக்கும் சவாரி செய்ய முடியாது என்ற சங்கதிபுலப்படும். பார்த்தவர்கள் தங்கள் கண்களை அவ்வளவு சுலபத்தில் அகற்றிவிட மாட்டார்கள். அதைவிட்டு, யாழ்ப்பாணத்துக்கும் அது புதிது; அவ்வளவுதான்!

சில்லறை வியாபாரி அபுசாலிக் காக்கா கார் வந்த வரத்திலும், நிற்பாட்டப்பட்ட விதத்திலும் தன் கடையை இடித்துத் தள்ளிவிடுமோ என்ற பயத்தினுல் கள்ளிப்

பெட்டி ஆசனத்திலிருந்து துள்ளி விழுந்து பதறியவர் இப்போதுதான் எழுந்து நின்று எட்டிப் பார்க்கிறார். கார் கடைக்கு இடைஞ்சலாக நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவே, ஆத்திரம் பொங்கியெழச் சூடாக 'உங்க வாப்பாட..' என்று ஏதோ சொல்ல வந்தவர் காரிலிருந்து இறங்கிய கறுவாக்காட்டு நாகரிக ஜோடியைப் பார்த்த மாத்திரத்தில் உதடுவரை வந்த வார்த்தைகளைத் தொண்டைக்குள் அமுக்கி விழுங்கிக்கொண்டார்.

ஏதும் நடக்காதது போல் வெகு அலட்சியமாகக் காரை விட்டிறங்கிய அரசரத்தினமும், அந்த அழகியும் அங்கு யாரையும் பொருட்படுத்தாது ஏதோ தங்களுக்குள் பேசிச் சிரிக்கிறார்கள். அவர்களை இன்றைய சினிமா நட்சத்திரங்களின் நிலைக்கு உயர்த்திவிட்ட அந்தக்காரின் கதவுக் கண்ணாடிகளை உயர்த்தி 'லொக்' பண்ணிவிட்டு, சாவியைக் கையிலெடுத்துக் கொண்ட அரசரத்தினம் சாவிச் 'செயினை' வெகு ஸ்ரைலாக ஆள்காட்டி விரலில் அப்படியும் இப்படியும் சுற்றிச்சுற்றி சிறிது நேரம் சேலைக் கடைகளை நோட்டமிட்டார். பின்பு சிகரெட் ஒன்றை எடுத்து உதடுகளில் பொருத்தினார். அரசரத்தினத்துடன ஒட்டிநின்று பேசும் அந்த அழகியுடன் அவர் அளவளாவும் போது, வாயில் செருகிய சிகரெட் சிவதாண்டவம் புரிகிறது. உடலோடு ஒட்டிவிட்டாற் போன்றதொரு அநுபந்த அவயவம் மாதிரி வாயில் பொருத்தியிருந்த சிகரெட். 'லைற்றரி'லிருந்து குதித்தெழுந்த சுடர்க்கொழுந்தை அணைத்து முத்தமிட்டது.

ஒரு தம். ஆ...! மூக்குத் துவாரங்கள் புகைபோக்கியாகச் செயல்படுகின்றன.

அரசரத்தினம் இழுத்து வெளியே ஊதிவிட்ட புகைப் படலம் நேர் எதிரே நின்ற அவள் நிலவு முகத்தில் கவிந்து... வெண்பஞ்சு மேகமோ என மிதந்து தவழ்கின்றது. அவளும் அந்தப் புகையின் சுகந்தத்தை அநுபவிப்பவள் போல் மூக்கை இன்னும் மலரவிட்டுக்கொண்டே மிக அருகில் நெருக்கமாக நின்றாள்.

ஆறடி உயரத்திற்கேற்ற 'சூட்' அவரை ஒரு யூறப்பியனே என்றுகூட நினைக்கத் தோன்றும். ஏறக்குறைய நிறமும் அப்படித்தான். கையில் வெள்ளிப் பூண்போட்ட "வாக்கிங் ஸ்ரிக்" அவருடைய விறைப்பான நடைக்கு நிச்சயம் அது வேண்டியதுதான். அளவோடு கத்தரித்து விடப்பட்டிருந்த 'சமர் குரூப்', சிவந்து பரந்து கிடந்த முகத்திற்கேற்ற முழுமீசை, எல்லாமாகத் தனிக்கவர்ச்சி ஊட்டின. இத்தனை லட்சணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அரசரத்தினம் நடந்து போகும்போது பார்க்க வேண்டுமே! உண்மையில் சுழன்றுவிட மாட்டார்களா சேலைகட்டியவர்? மொத்தத்தில் 'அசல் ஆம்பிளை'.

நாற்பது வயதாகி விட்டதென்று சொன்னால் நாக்கு அழுகிப் போய்விடும். இன்றைக்கும் பார்த்தால் கூட இளமை பொங்கிப் பூரித்து நிற்கும் உடற்கட்டில் விரல் வைத்து ஊன்றிப் பார்த்தால் ஒரு சொட்டு இரத்தமில்லாத பகுதியென்று ஒதுக்கி விடக்கூடிய எதுவுமில்லை. இள மட்டங்களைக் காட்டிலும் இன்னமும் அவரிடம் உற்சாகம் பன்மடங்கு அதிகரித்து நிற்கிறது.

அவள் மாத்திரம் என்ன, நாகரிகத்திற் சோடையா? 'கொழும்பு செவன்' மோஸ்தர் உடுப்பிற்குள் குமுறி நிற்கும் அவயவங்கள், கொடிவாக்கில் துவளும் அவள் இடை, அதனைக் குறிப்பாகப் பார்த்தால் தாவிக் கைபோட்டு அணைத்து நடக்கத்தான் யாருக்கும் தோன்றும். அந்தக் குங்குலிய மேனியாளின் 'பானு' கழுத்துச் சட்டைக்குள்ளே பாதி வெளியே பிதுங்கி பார்த்தவர்களைத் தன்பால் ஈர்த்துக் கொள்வதற்கு இதைவிட அவளிடத்தில் எத்தனையோ பிற அம்சங்கள் உள என்பதை ஏனோ அவள் அறிய மறந்து விட்டாள். கதைபேசும் அபிநய விழிகளும் கவர்ச்சிமிக்க ஏனைய அங்கங்களிலும் செய்துகொண்ட 'இமிற்றேஷன்' வேலைப்பாடுகளும் சேர்ந்த அவள் எடுப்பான தோற்றம், ஒரு இருபத்தெட்டை நிர்ணயிக்க, துருதுருவென்று நடந்தாள்.

அரசரத்தினம் மாத்திரம் அவளுக்குச் சளைத்தவரா என்ன? 'வாக்கிங் ஸ்ரிக்' அவருடைய வீச்சு நடையில் 'டிக்... டிக்' என ரூபக தாளத்தில் ஜதி போடுகின்றது. அந்த உன்னதமான நடையில் சொக்கிப் போய் விட்டவர்கள் அவரை ஓர் 'ஆமி கொமாண்டர்' என்றுகூட அவ்விடத்தில் பேசிக் கொண்டார்கள்.

இணைந்து சென்ற அவர்களிருவரும் 'சுரையா கபே'க்குள் பிரவேசித்தார்கள். முதலாளி அகமும் முகமும் குளிர எழுந்து நின்று வரவேற்கிறார். "வாருங்கோ சேர்" என்று கொண்டே மேசைக்கடியில் பொருத்தப்பட்டிருந்த 'எலக்ரிக் பெல் சுவிச்'சை அழுத்துகிறார். பெல் அலறிப் புடைக்கிறது. அதைத் தொடர்ந்து ஆறு, ஏழு 'சப்ளையர்'கள் ஆளுக்கொரு பக்கமாக ஓடிவந்து முதலாளியின் மேசையை மொய்த்துக் கொள்கிறார்கள்.

கபேக்குள் ஒரு சில நிமிஷம் பூரண நிசப்தம் குடி கொள்கின்றது. சினிமாப்படம் ஆரம்பமாவதற்கு அறிகுறியாகக் கடைசி பெல் ஒலிக்குமபோது தியேட்டர் 'கப்சிப்' என்று ஆகி விடுவது போன்ற அமைதி. தின்று குடித்துக் கொண்டிருந்தவர்கள் சகலத்தையும் மறந்து, நிறுத்திவிட்டு அரசரத்தினம் ஜோடியையே இமைக்கா விழிகளால் விழுங்குகிறார்கள்.

பார்க்கட்டுமே! அவர்கள் எப்போதுமே தங்களை மற்றவர் பார்த்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதற்காகத் தானே இவ்வளவு தடல்புடல்களையும் செய்கிறார்கள்! அதைப் பற்றியெல்லாம் பொருட்படுத்திக் கொண்டிருப்பதற்கு அரசரத்தினமும் அவளும் என்ன சாதாரண பிரகிருதிகளா?

"வாருங்கோ ஐயா... லேடீஸ் றூமுக்கு" என்ற பணியாள், அவர்களை வழிநடத்திச் சென்றான்.

"இரண்டு ஓவல்" இரத்தினச் சுருக்கமாகச் சொல்லி முடித்தார் அரசரத்தினம்.

"இரண்டோவல்"—சப்ளையரின் தொண்டை கிழிந்து ஓடர், சன்னமாகப் புறப்பட்டது. தொடர்ந்து தேவாரம் பாடுவதற்காக நிறுத்திய ஒப்பாரி மறுபடியும் ஒலிப்பது போல் கபேக்குள், பேணி, கிளாஸ், தட்டுமுட்டுச் சாமான்களின் பேரரவம் சூழ்ந்து கொண்டது.

'பில்' பணத்தைக் கொடுக்கும்போது அரசரத்தின மும் முதலாளியும் ஆங்கிலத்தில் ஏதோ பேசிக்கொள் கிருர்கள். "அதுக்கென்ன சேர், ஆனல் ஒரு அரை மணித்தியாலம் சுணங்கும்... ஆயிரம் போதுமா சேர்...?" என்ருர் முதலாளி.

"யேஸ் யேஸ், தற் இஸ் இனவ்... ஆனல் கொஞ் சம் கெதிபண்ணித்தரவேணும். நாங்கள் உதிலையொருக் கால் பக்கத்துக் கடைவரைக்கும் போய்விட்டு வருகிறேம்" என்று கூறிவிட்டு கபேயுள்ளிருந்து வெளியே வீதிக்கு வந்தார்கள்.

வீதி நெடுகச் சேலைக்கடைகள்.

அரசரத்தினமும் அவளும், ஒவ்வொரு கடையின் முகப்பைத் தாண்டும் போதும் "வாருங்கோ சேர்... வாருங்கோ அம்மா" என்று வந்தனுபசாரம் கூறினர் கள் அங்குள்ள சிப்பந்திகள்.

ஒவ்வொரு கடையாக ஏறி இறங்கி ஒரு ரூபாய் அரை ரூபாய்க்குப் பேரம் பேசி மலிவு பார்த்து நாக்கு வளைத் துக் கொள்வதற்கு அவர்களென்ன நாட்டுப்புறப் பேர் வழிகளா?

சுரையா கபேக்கு ஐந்தாறு கடைகள் தாண்டி, அரச ரத்தினத்தின் கார் நிற்பதற்கு எதிர்க் கடையான சுப்பையா சாறி எம்போறியத்தில், எவரையும் கவர்ந்திழுக் கும் முறையில், பலவித புடைவைகளையும் வெகு நேர்த்தி யாகக் காட்சிக்கு வைத்திருந்தார்கள். மணவறை வைத்த மாதிரி அலங்காரமாயிருந்த அந்தக் கடைக்குள்ளே ஓரளவு நல்ல கூட்டம்.

சுப்பையா சாறி எம்போறியம் அரசரத்தினம் ஜோடி யின் கண்களைக் குத்துகிறது. கொலு மாப்பிள்ளையாக இருந்த முதலாளி சுப்பையா, அவர்களை வரவேற்க அப்போ திருந்தே எழுந்து நின்றுவிட்டார்.

"வாருங்கோ ஐயா, வாருங்கோ அம்மா."

சிப்பந்திகள் கட்டியம் கூற அதைத் தொடர்ந்து முதலா ளியே எதிர்வந்து நின்று "வாருங்கோ சேர், இப்படி உள்ளே வாருங்கோ..." என்று கூறி வழி விலக்கிக் கொண்டு நடந்தார். 'மளமள'வென்று தன்னுடைய கஜானு மேசைக்கு எதிர்த்தாற்போல் உள்ள கதிரைகளைத் தட்டித் துடைத்து நிரைப்படுத்திப் போட்டார். சிகரெட் டின்னையும் தீப்பெட்டியையும் எடுத்து மேசை மீது வைத்த முதலாளி ஓரேயடியாகப் பரபரத்தார்.

"நோ, தாங்ஸ்" என்ற அரசரத்தினம் 'நான் உந்தச் சிகரெட் பற்றுவதில்லை' என்று சொல்லாமல் சொல்வதுபோல் தன்னுடைய உயர்த்தியான சிகரெட் டொன்றை எடுத்து மேசையில் தட்டிவிட்டு வாயில் வைத் துக் கொண்டார்.

சுப்பையா முதலாளியின் முகத்தில் ஏதோ அசடு வழிந் தது. அதைச் சமாளிக்க எண்ணியவராக 'கூல்' பண் ணப்பட்ட கொழும்புச் சோடாவைக் கிளாஸ்களில் ஊற்றிக் கொண்டே சிரிக்க முயன்றார். சினங்கொண்ட சோடா அவர் முகத்திற்கு நேராகச் சீறிற்று.

"நியூ மெற்றீரியல் ஏதாவது வந்திருக்கா ?" என்ற அரசரத்தினம், இருந்த இருப்பில் கழுத்தைச் சுழற்றி கடையைத் துளைத்தார்.

"ஓ யெஸ், நிறைய..." என்று சொல்லிக் கொண்ட முதலாளி சுப்பையாவே ஓடிச் சென்று அங்குள்ள 'மெற் றீரியல்ஸ்' முழுவதையும் எடுத்து மேசைமீது பரப்பினார்.

"இது கேஸ்மல் சேர் . , இதோ இதைப் பாத்தீங்களா .. லதாப் பப்ளின்—இதுதான் இப்ப பாஷன் ஏதோ உங்களுக்குத் தெரியாதது மாதிரி நான் சொல்லுறனே பாருங்கோ... இது லேஸ் கொட்டன்...., அது இங்கிலீஷ் பப்ளின் அதோ அதைப் பாத்தீங்களா சேர், அம்மா நிறத்துக்கு நல்ல எடுப்பா இருக்கும்; டிஸ்யூ மணிப்புரி..., என்ன அவளவாப் பிடிக்கவில்லையெண்டு சொல்லுறியளா? இது நைலோன்..., நல்லமாச்சா இருக்கும்... மணியம் அந்தச் சீலையை எடு .. இது மணிப்புரி..., இதோ பாத்தீங்களா இதை, பியோர் காஷ்மீர் சேர்..., அது மைசூர் ஜோஜெட்....

"சோமு, அந்த ஷூட்டிங் குளோத்துகளையும், ரெர்லின் ஷேட்டுகளையும் எடு .."

சுப்பையாவின் வாய் ஓயாமல் பேச, கைகள் இயந்திர கதியில் செயல்படுகின்றன. அவருக்கு வெகு உற்சாகம். 'பிஸ்நெஸ்' பிழையில்லாமல் இருக்குமென்ற நம்பிக்கை. அதனுல் இறக்குமதிக் கட்டுப்பாட்டிற்கு முன்னமே பதுக்கி வைத்திருந்த பழைய இருப்பெல்லாம் வெளியே வந்து மேசைமீது குவிந்து கிடந்தன.

"அப்ப இதிலை ஒரு ஐந்து யார் போதுமெண்டு சொல்லுறியளா அம்மா ஜோஜெட் அம்மாவுக்குப் பிடிக்கவில்லைப்போல கிடக்குச் சேர், நீங்கள் போடச் சொல்லுறியள் . சரி அப்ப அதிலையுமொரு அஞ்சு கிழி சோமு. நொன்னயன் சேட்டுகளிலை வேறை சேட்டுகளும் இருக்கு சேர் . ஓ! நீங்க சொல்லுறபடி ரெர்லினைக் காட்டிலும் நல்லாயில்லைத்தான்."

துணிகள் முதலாளியின் நேரடிப் பார்வையிலேயே 'பற பற' என்று கிழிக்கப்படுகின்றன. தட புடலான வியாபாரம். முதலாளியின் உற்சாகம் கரைபுரள்கிறது.

"எங்கே சேர், உங்களுக்குத் தெரியாத விஷயமே? இறக்குமதி இல்லாமலுக்குப் போனதுக்குப்பிறகு எல்லாமே

சரியான நெருப்பு விலை சேர் என்னும் ரொப்புக்குப் போகும் போலை கிடக்கு உண்மையிலை உங்களுக்கென்ற படியால் உந்த விலை போடுறன் சேர் ஏனெண்டால் சில நல்ல கஸ்ரமேஸை நாங்கள் பிடிச்சு வைச்சிருக்க வேணும் சேர்.. அது சரி அடுத்தமுறை யு என் பி க்கு ஒரு சான்ஸ் அடிக்குமா சேர்?'' என்று கேட்டுவிட்டு அரசரத்தினத்தின் முகத்தை ஆவலோடு பார்த்தார்.

'ஓ யெஸ் சுவராக. அதிலை இன்னும் வேறு உங்களுக்குச் சந்தேகமா? கொழும்பு முனிசிப்பல் எலெக்ஷன் அதற்கொரு முன்னோடியல்லவா?'' என்றார் அரசரத்தினம்.

"நம்ம பொன்னம்பலத்தாரும் 'கூப்' கேசோடை ஒரு பிரட்டுப் பிரட்டிப் போடுவார் போலை கிடக்கு. இப்ப இருக்கிற நிலையிலை அந்தாள் கொழும்பிலை கேட்டாலும் சுவர் சான்ஸ் என்றும் கதைக்கினம் என்ன இருந்தாலும் மனுஷன் கெட்டிக்காரன்தான். சும்மாவா சேர். சகடயோக மல்லவா! சாகும் வரைக்கும் வெள்ளி திசைதான்'' என்று நிறுத்தினார் முதலாளி சுப்பையா.

''ஓ யெஸ். அவருடைய திறமையை எங்கையும் மதிக்கிறார்கள். அது தானே ஏதோ ரமில்லில சொல்லுவாங்களே, ஏதோ எனக்கு நல்லா ஞாபகத்துக்கு வருகுதில்லை; கற்றாருக்குச் சிறப்போ என்னவோ என்று.. உங்களுக்கும் தெரியாதா'' என்றார் அரசரத்தினம் இலேசாகச் சிரித்துக் கொண்டே.

"எங்கே சேர், இந்தத் தொழிலுக்கு வந்தாலே அதுகளையெல்லாம் அடியோடை மறந்திடவேணுமெண்டு அப்பர் அப்பவே சொல்லித் தந்திட்டார். அதிலையிருந்து உதுகளெல்லாம் என்ரை மூளையுக்கை நிக்கமாட்டனென்குது. நானும் உங்களைப் போலைத்தான் சேர் டேய் சோமு, அந்த மிச்சப் பாட்டைப்படி ஓ! கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்று சொன்னனி.. அது தானே பார்த்தன்; எனக்கும் இப்பத்தான் ஞாபகம் வருகிறது என்ற முதலாளி 'பிஸ்னெஸ்'க்கு விரைந்தார்.

"என்னும் என்ன சேர் போடுவம்?... அடடே, பில் தொகையைப்பற்றி யோசிக்கிறியளாக்கும்; அவளவொண்டும் பெரியதொகை ஆகிவிடவில்லை. என்ன சோமு, ஐயாவிலை ஒரு ஆயிரம் வரையிலை ஆகியிருக்குமா?... என்ன சொன்னுய்?... சரியா மட்டமா அவளவுதானெண்டு சொல் லுறியா? அதுக்கென்ன சேர், குறைஞ்சாக்கிறைஞ்சால் அதைப்பற்றி ஒண்டும் யோசிக்காதையுங்க சேர், வீட்டை வந்து எடுத்தால் போச்சுது!" என்ருர் சுப்பையா.

அரசரத்தினம் துரையின் அந்தஸ்துக்கு அது ஒன் றும் அவ்வளவு பெரிய தொகையில்லை என்ற நினைப்பில் முதலாளி சுப்பையா வெகு அலட்சியமாகச் சொன்ஞர் அத்தொகையை.

"தற்றிஸ் இனவ்... பிறகொருநேரம் பார்த்துக்கொள்ள லாம்" என்ருர் அரசரத்தினம், ஆசனத்தை விட்டு எழுந்து கொண்டே.

"சோடாக் குடிக்காமல் போகவா சேர்... பிளீஸ் மாடம்."

"ஓ! தாங்ஸ்" என்றவாறு இருவருமாக முதலாளி யிடத்திலிருந்து சோடாவை வாங்கிப் பருகுகிருர்கள்.

"சோமு பார்சலைத் தூக்கிக் கொண்டுபோய் ஐயா வின்ரை காரிலை வை" என்ருர் சுப்பையா.

பேஸைக் கையிலெடுத்துத் திறந்து பார்த்துக்கொண்ட அரசரத்தினம் "மணி கொஞ்சம் குறையிது போலைக் கிடக்கு..." என்று இழுத்துக்கொண்டே, தொடர்ந்து "பெடியனை ஒருக்கா உதிலை சுரையா கபே வரைக்கும் என னுடன் அனுப்பிவிடுங்க, அங்கே எடுத்துக் கொடுதது விடு க்றேன்" என்ருர்.

"அதுக்கென்ன சேர், மனுசரைப் பார்த்தாலே தெரி யாதா? காசா பெரிசு? அடிக்கடி வந்து போங்க சேர்" என்று சிரித்தார் சுப்பையா

நல்லவொரு கஸ்ரமரை வாலாயப் படுத்திவிட்ட எக் களிப்பு அவர் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது.

' சோமு, பார்சலைக் காரில் வைத்துவிட்டு ஐயாவுடன் போய்விட்டு வா !'' என்றார் சுப்பையா.

''றைற், அப்ப வரலாமா? சேரியோ !'' என்று கொண்டே நடந்தார்கள் அரசரத்தினமும் அந்த அழகியும்.

''ஹி... ஹி... சேரியோ ஹி... ஹி...'' — சுப்பையா வழி யனுப்பி வைத்தார்.

சுரையா கபேக்குள்...

''ஹலோ ! .. என்ன இன்னும் சேரவில்லையா?... ரூ லேற். ஓ! மை கோட். நௌ இஸ் வண்ணுக் குளொக்... வேறு என்கேஜ்மென்ற் இருக்கு. அந்தத் தவுசனையும் இவ ரிடத்தில் கொடுத்து விடுங்கள்'' என்றார் அரசரத்தினம்.

''மன்னிச்சிடுங்கோ சேர், இன்னுமொரு அஞ்சு நிமி ஷத்திலே கொடுத்து விடுகிறேன்'' என்றார் சுரையா முதலாளி.

''சரி சோமு வாங்கிக் கொள்வாய்தானே?'' என்றார் அரசரத்தினம் சோமுவைப் பார்த்து சாவதானமாக.

''ஓம் ஐயா!'' — சோமு பவ்வியமாகக் குழைந்து சொன்னான்.

பரீனக் காரின் உறுமலின் சப்தம் கேட்டு எட்டிப் பார்த்த முதலாளி சுப்பையா கையைத்தூக்கி டட்டா காட்டி னார். கார் பறந்தது. அரசரத்தினமும் அழகியும் மறைந்து விட்டார்கள்.

''என்ன சோமு, என்ன ஆச்சு?''—முதலாளி பத களித்தார்.

''சுரையா கபேயில் ஓடர் பண்ணியிருக்கிறார். ஒரு அஞ்சு நிமிஷம் பொறுத்து வரச் சொல்லியிருக்கிறார் சுரையா கபே முதலாளி'' என்றான் சோமு.

''ஜென்ரில் மென், ஜென்ரில் மென்தான்! எவ்வளவு பெருந்தன்மையான மனிதன்! உப்புடிக்கொத்தவங்

களோடையல்லோ சாவாசம் வைக்க வேணும்! புள்ளிக் காரப் பேர்வழி.. மனுசன் சரி அந்த மனுசி சரி, விலை தலை ஏதாவது கேட்டுதுகளா? ஒரு யார் காரிக்கன் துணி வாங்க வந்து கழுத்தை அறுப்பாங்களே சில தரித்திரம் பிடிச்ச ஈச்சப்பியள். கறிக்கடை விலைகேட்டு நாக்கிலை ஊறுகிற துப்பலைக்கூட வழிச்செடுத்துக்கொண்டு போயிடுவாங்கள் இடியற்ஸ்.. இந்தா பார்! வந்தது போனதே தெரியேல்லை ஆனால் ஆயிரம் ரூபாய்க்கு பிஸ்னெஸ்; அலுப்பில்லாத யாபாரம்" — சுப்பையா முத லாளி சந்தோஷத்தில் முழக்கித் தள்ளினர்.

ஐந்து நிமிஷம் ஆகிய பின்பு, சுரையா கபேக்குச் சென்ற சோமு, அரசரத்தினத்துக்குக் கட்டிக்கொடுத்த துணிப் பார்சலளவில் ஒரு பார்சலை தோளில் வைத்துச் சுமந்து கொண்டுவந்து முதலாளி சுப்பையாவின் மேசை யில் இறக்கி வைத்தான்.

"என்னடா இது சோமு...?" என்று குரலைச் சற்று உயர்த்திக் கேட்டார் முதலாளி சுப்பையா.

"அந்தத் துரை சொல்லிப்போட்டுப் போன ஆயிர முங்க" என்ருன் சோமு, அழாத குறையாக.

எல்லோர் முகத்திலும் விளக்கெண்ணை வடிந்தது.

"அவர் சொல்லிப் போட்டுப் போன ஆயிரமாடா...?" முதலாளி சுப்பையாவின் அகலத் திறந்த வாய்மூட மறந்து விட்டதேன்? இழுப்பு வலியோ?

பார்சல் கட்டுகள் அவசர அவசரமாகக் கத்தரிக்கோல் விட்டு, வெட்டப்படுகின்றன. பொரிந்து இன்னமும் சூடு அகலாத வடைகளின் சுகந்தமணம் கடையெல்லாம் வியா பித்துக் கமழ்ந்தது.

முதலாளி சுப்பையாவும், சிப்பந்திகளும் அரசரத்தி னத்தின் ஆயிரம் வடைகளையும் மோப்பம் பிடிக்கிருர்களா?

வடையைச் சுற்றி சக்கர வியூகம் போட்டபடி சிப்பந்திகள் வாயடைத்துப் போய் நின்ருர்கள்.

அலங்க மலங்க நின்ற சுப்பையா பிரக்ஞைபெற்று, "அவன் தேத்தண்ணிக்குச் சொல்லிப்போட்டுப் போக வில்லையாடா?" என்ருர் தாழ்ந்த குரலில்

# சாம்பல்

சாம்பலை நீக்கிக் கரியைப் பல்லில் போட்டுத் தீட்டிக் கொண்டு கிணற்றடிக்கு வந்தான் வேலும் மயிலும். மூன்று மாதங்களுக்கு முன்னர் லீவில் வந்தபொழுது நடந்த சம் பவங்கள் இன்னமும் மனதில் குதியாட்டம் போட்டுக் கொண்டிருந்தன. ஒரு வார லீவில் ஊருக்கே வந்தது பூமணிக்காகத்தான் என்பது அவனுடைய அடிமனத்தின் உள்ளுணர்வு. ஆறு வருடங்களாக அவனுடைய உள்ளத் தில் விதை வெடித்து, முளைகொண்டு விகசித்துவிட்ட இச்சையல்லவா அது?

கிணற்றுக்கட்டில் ஏறி, கொல்லைப்புறத் தோட்டத்தில் கண்களைத் துளைத்துப் பூமணியின் உருவத்தை ஒரு தடவை பார்த்துவிடவேண்டுமென்ற நினைவுச் சுழல் அவன் மனத்தை அலைக்கழித்தது.

கொல்லைப்புற வேலிக்கு அப்பால் ஒரு மரவள்ளித் தோட்டம். ஓர் ஆண்டுக்கு முன்னர் அத்தோட்டத்தைக் குத்தகை எடுத்துக்கொண்டு அங்கு குடியேறினன் முருகன். அவனுடைய மகள் பூமணி நல்ல அழகி. முதன் முதலாக, அவள் துலாக் கொடியில் கை வைத்து தண்ணீர் இறைக் கும் பொழுதுதான் பார்த்தான். சேலையை வேட்டியைப்

போலக் கட்டிக்கொண்டு, மேல் பகுதியை மறைப்பதற்குச் சட்டை போட்டிருந்தாள். அந்தச் சாதிப் பெண்கள் கல்யாணமானதற்குப் பிற்பாடுதான் தாவணி போட்டுக்கொள்வார்கள். துலாக் கொடியுடன் மல்லுக்கட்டிக் கொண்டு, ராட்டினம் ஆடும் பாணியில் வளைந்து நிமிர்ந்து வேலை செய்யும்பொழுது அவளுடைய கவர்ச்சியே கவர்ச்சி. அவள் வனப்பில் அவன் மனம் பறிகொடுத்தான் தன் மனத்தின் மானசீகக் கோடியிலே, அவளுடைய உருவத்தை வரித்துக்கொண்டான். அவளுக்கு ஈடு சோடான அழகினை எந்தப் பொருள்களிலும் காண இயலாது என்ற நினைவு, அவன் கண்களில் சிலந்திக் கூடு விரிக்க ஆரம்பித்தது. இளமைப் பருவத்தின் குருத்துக் கனவுகள் தழைத்தோங்கும் வயது. அவள் பாய்ச்சிய நீரை உண்டு வளர்ந்த மரவள்ளித் தோட்டத்தைப் பார்க்கிலும், அவன் உள்ளத்தில் அவளைப் பற்றிய ஆசைகள் 'விசுக் விசுக்' கென்று வளர்ந்து கொண்டிருந்தன. அவளுடன் எப்படியாவது பேசிவிட வேண்டுமென்று நினைப்பான். ஆனால், அவள் எட்டாத தூரத்தில் கண்ஜாடையால் மனதை இதமூட்டித் தவிக்க வைக்கும் தாரகையாகவேயிருந்தாள். 'எப்படியும் அவளைத் தான் கல்யாணம் கட்டி வாழ்வது; ஒரு பட்சக் காதலாக இருந்தாலும், முதற் காதல் தெய்வீகமானது; என்றெல்லாம் நினைத்தவன், பரீட்சையிற் சித்தியடைந்தான். உத்தியோகத்திற்குச் சென்றபொழுது. உலகையும் அதன் நெளிவு சுழிவுகளையும் முறையாகக் கற்றான். தன்னையும் பூமணியையும் பிரித்து வைப்பது வெறும் ஓலை வேலியல்ல; ஜாதி அந்தஸ்து கௌரவம் என்ற கள்ளிப்பற்றைகளும், முள் வேலியும் என்ற ஞானம் பிறக்கத் தொடங்கியது. இருப்பினும், அவனால் பூமணியையும் அவள் உருவத்தையும் மறக்க இயலவில்லை நெஞ்சின் மையத்தில் அழியாச் சுவடாக அது பதிந்துவிட்டது.

அவளைப் பற்றிய நினைவுகள் உள்ளத்தில் குமைந்து புகைக்க, ஒரு தடவை லீவுக்கு வந்திருந்தான். விண்மீனைப் பார்த்துக் கவிதை புனையும் கவிஞனின் வேட்கையா? அல்

லது கடல்மீனை வலைவீசிப் பிடிக்கும் செம்படவனின் ஆசையா? கிணற்றுக்கட்டில் ஏறிக் கொல்லைப்புறம் பார்த்தான்.

அப்பொழுதும் பூமணி கிணற்றடியில் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தாள். குமரி வனப்புக் குலையின் எழில் காட்டிப் போர்த்திருக்கும் சட்டைக்கு மேலே, தாவணி இடம் பெற்றிருந்தது. தாவணியின் ஒயில் அவளுடைய கவர்ச்சியை இன்னும் அதிகப்படுத்தியது.

அவளுக்குச் சின்னத்தம்பி என்ற ஒருவனை மணம் முடித்து வைத்திருந்தார்கள் என்ற சமாச்சாரம் பின்னர் தான் தெரிந்தது.

கொல்லை வேலியில் ஒரு பொட்டும் அடைப்பும் இருந்தன. கன்னி, வேலி தாண்டுவதில்லை. ஆனால் தாலியைக் கழுத்தில் சுருக்கிக் கொண்டால், வேலி என்ற காவல் கிடையாது. அவள் அவனுடைய வீட்டுக்கு வந்து போவாள். அவனுடைய தாய்க்கு அவள்மீது தனிப்பிரியம். அவள் வீட்டிற்கு வருவது அம்மாவுக்கு வெளி வேலைகளில் ஒத்தாசை செய்வதற்கே. தேங்காய் உரிப்பது, விறகு உடைப்பது, இடிப்பது ஆகிய கடின வேலைகளில் கெட்டிக்காரி. துலாக் கொடி பிடித்து பாத்தியில் நீர் பாய்ச்சி உரம் பெற்ற கைகள் அல்லவா? தூற்றல் மழையிலேயே 'அஸ்மா' வில் அவதிப்படும் அம்மாவுக்கு அவள் துணை இன்றியமையாததாகி விட்டது. 'கூட மாட' வேலை செய்வதற்கு அம்மா அவளுக்குப் பல சலுகைகள் செய்வாள். அவள் எந்தக் கடின வேலையில் ஈடுபட்டிருந்தாலும் கூட களைப்பையோ சோர்வையோ காணமுடியாது. எப்பொழுதும் சிரித்த முகம். வேலும் மயிலுவுடனும் சிரித்துப் பேசுவாள். அவன் உத்தியோகம் பார்க்கும் பட்டினத்தில், வெங்காயச் சருகுச் சேலைகளுடனும் கடைச் சரக்குகளின் தளுக்குகளுடனும், மினுக்குகளுடனும் பவனிவரும் எத்தனையோ மேக்அப்' அழகிகளைப் பார்த்திருக்கிறான். ஆனால், பூமணியைக் கிட்டப் பார்த்த பொழுது அவை

வெறும் போலிகளே என்ற எண்ணம் மிகவும் உறுதிப் பட்டது. இடையும் மார்பும் அச்சில் வார்க்கப்பட்ட சிலையாகக் கனகச்சிதமாகத் தோன்றின 'பூமணி வானத்துத் தாரகையல்ல, முற்றத்துக்கே வந்துவிட்ட ரோஜாவாகப்பட்டது. பூச்சட்டியில் மலரும் ரோஜாவைப் பாதுகாத்து வெகுவாகப் புகழ்கின்றோம். ஆனால், அதிலும் பார்க்க அழகான ரோஜாக்கள் காட்டில் மலர்ந்து வெளியுலகிற்குத் தெரியாமல் இருக்கின்றன. காட்டில் விளைந்து, தன்வீட்டு முற்றத்திற்கு வந்துவிட்ட ஓர் அபூர்வ ரோஜாவாகவே பூமணி அவனுக்குத் தோன்றினாள். அந்த ரோஜாவைத் தொட்டால், அதன் மென்னிதழ்களின் ஸ்பரிசத்தை நுகரலாமா அல்லது முள்தான் உறுத்துமா என்பதுதான் கேள்வி. துணிச்சல் பிறக்கவில்லை. தனது உள்ளத்து ஆசை உலர்ந்த விறகுக்கட்டையாகவே அவனுக்குப் பட்டது.

ஒருநாள், அம்மா குசினி வேலையில் ஈடுபட்டிருந்தாள். முற்றத்தில் வெயில் கொளுத்தியது. அவன் அறையில் யன்னலின் ஓரத்தில் நிழலுக்கு ஒதுங்கிக் குந்தி, தேங்காய் மட்டையைக் கொடுவாக் கத்தியினால் உரித்துக் கொண்டிருந்தாள் பூமணி. வியர்வைக்காகத் தாவணி விலக்கப்பட்டிருந்தது. யன்னலால் எட்டிப் பார்த்தவனின் பார்வை கவர்ச்சிகளின் திரட்டாக இருந்த மார்பின் மீது, பலாப்பாலில் சிக்கிவிட்ட ஈயின் நிலையில் நிலைத்தது. ஓரக் கண்ணால் அவனைக் கவனித்து விட்டான். அவனுடைய கண்களில் கொழுந்து விட்டெரிந்த ஆசையின் உள்ளடக்கத்தை அறியாத குழந்தையல்ல அவள். தாவணியைச் சரி செய்து கொண்டு, இதழ்க்கோடியில் அரும்பி நெளிந்த முறுவலை மென்று விழுங்கினாள். கெட்டிக்காரி. இச்செயலுக்கு என்ன அர்த்தம்? முகம் சுருங்கவில்லை; விரியவில்லை. ஒப்புகின்றாள் என்று அர்த்தமா? அல்லது மறுப்புக் கூறுகின்றாள் என்று அர்த்தமா? ஒன்றையும் நிச்சயமாகத் தீர்மானிக்க இயலாவிட்டாலும்கூட "பூனைக்கு யார் மணி கட்டுவது" என்ற கேள்வியில் விவகாரம் இழுபடுவதாகவே அவனுக்குப்பட்டது.

அந்தச் சம்பவத்திற்கு அடுத்தநாளும், அவள் வந்தாள். பேசுவதற்கு ஏதாவது 'துடக்கு மனப்பான்மை காட்டுவாள்' என்று நினைந்தான் பழைய அவளேதான். சிரிக்கச்சிரிக்கப் பேசினுள். சதா சிரித்த முகம் தானு? என்றைக்காவது சினத்தில், கவலையில் சுருங்காதா?

உலர்ந்து விறகான ஆசையில், நம்பிக்கையென்ற ஒரு தீப்பொறி விழுந்தது.

அடுத்த லீவுக்கு வந்திருந்த பொழுது, பூமணியை அவன் சந்திக்கவே யில்லை. நீண்ட காலத்தின் பின்னர் வந்த லீவாதலினுல் அவளைப் பார்க்கவே அவன் கண்கள் துருதுருத்தன. பொட்டைப் பார்ப்பதும், கிணற்றுக் கட்டில் ஏறிக் கிணற்றடியைப் பார்ப்பதுமாக இருந்தான். "இங்கு வந்து போன பொடிச்சி எங்கே?" என்று தாயைக் கேட்க நாக்கு உன்னியது. ஆனுல், கேட்பதன் விளைவு என்னவாகுமோ என்று, அவள் எங்கே போனுள் என்ற மர்மத்தை அறியாமலே சென்று விட்டான்.

அதற்குப் பின்னர் அவளைச் சற்று மறந்து விட்டதாகவே பட்டது. அது அதிக காலம் நீடிக்கவில்லை. மறு விடுமுறைக்கு வந்தபொழுது அவள் அவன் வீட்டிற்கு வந்தாள். இப்பொழுது அதிக நேரம் தங்கமாட்டாள். "டக்" கென்று வீட்டிற்கு ஓடுவாள். பின்னர் எப்படி விரைவாக ஓடுவாளோ அப்படியே விரைவாகத் திரும்பி விடுவாள். அவள் ஏதோ குட்டிபோட்ட பூனையைப் போன்று தன்னைச் சுற்றித் திரிவதாகவே அவனுக்குப் பட்டது.

ஒரு சமயம் அம்மாவின் பார்வையிலிருந்து விலகி, அவனது அறையின் யன்னலோரம் நின்று கொண்டிருந்தாள். அவள் கண்களில் கெஞ்சுதலும், ஏதோ பேச விரும்பும் ஆவலும் மண்டியிருப்பதை அவனுல் அவதானிக்க முடிந்தது.

" என்ன வேணும் பூமணி ? "

" ஒண்டுமில்லை ... "

" சொல்லன் "

" ............ "

"உதென்ன பூமணி, புது நாணயமாயிருக்கு. சொல்லன்."

" ஒரு காரியம் செய்யுற தெண்டால், ஓம் எண்டு சொல்லுங்க. அப்பதான் சொல்லுவன். "

" உனக்கு எதுவும் மறுக்கமாட்டன். "

" குறை நினைச்சுக் கொள்ளாதையுங்க, எனக்கு ஒரு இருபது ரூவாய் கைமாத்து வேணும். நெடுக நெடுக அம்மாட்டைக் கேக்க வெக்கமாயிருக்கு. போன கோசு அம்மாவுக்கு என்னாலை நல்ல சிலவு. இப்ப லீவிலை வந்திருக்கிற உங்களிட்டைப் பணம் இருக்குமெண்டுதான் கேக்கிறன். அடுத்த பயணம் வரேக்க கட்டாயம் தருவன்."

மறு வார்த்தைகூட வேலும்மயிலும் பேசவில்லை. பல ஆண்டுகளாக நெஞ்சில் நிலைத்தவளுக்கு இது ஒரு பெரிய உதவியா ? ஆண்கள், பெண்களைத் தங்கள் பலவீனங்களுக்கு உடந்தையாக்க, அவர்களைக் கடனாளிகளாக்குவதும் ஒரு தந்திரந்தான். ஆனால், அவன் உண்மையிலேயே. அவளுடைய அவசர தேவைக்கு உதவவே எண்ணினான்.

" பணத்தைத் திருப்பித்தரத் தெண்டிக்காதே. கிடைக்கும் பொழுது, வசதி ஏற்படும் பொழுது, எப்பவாவது திருப்பித்தா " என்றான். அன்றைக்கே அவன் பயணமானான்.

கடைசியாக மூன்று மாதங்களுக்கு முன்னர் ஊருக்கு வந்திருந்தான். அப்பொழுது நடந்த சம்பவம்தான் அவன் உள்ளத்தில் கங்குககும் தீயை மூட்டியது என்று சொல்ல வேண்டும்.

தன் மகன் மெலிந்த கோலம் காட்டுகிறான் என்று கவலைப்பட்ட தாய், அன்று வெள்ளிக் கிழமையாதலால் மதிய அர்ச்சனை செய்விக்கக் கோயிலுக்குப் போய்விட்டாள். சென்று வெகு நேரமாகியது. இதற்கிடையில் பூமணி வந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணத்தில் வேலும்மயிலும் சாம்பிக்கொண்டிருந்தான். வெகு நேரம் இந்த நினைவில் அலைக்கழிந்து முடிந்த பின்னர், எதிர்பார்த்ததைப் போல அவளும் வந்து சேர்ந்தாள். அவளே பேச்சைத் தொடங்கினாள்.

"இந்தப் பயணம் காசைத் திருப்பித்தர முடியவில்லை..."

"அதுக்கென்ன பூமணி, நான் உன்னை இப்ப கேட்டனானே? உந்த விசர்க்கதைதான் எனக்குப் பிடிக்காது. அது கிடக்கச் சின்னத்தம்பியின்ரபாடு எப்பிடி?"

"தெரியாதே? ஆண்டவன் கொண்டந்து என்ர தலையிலே கட்டியடிச்சிருக்கு. அம்பேசேத்து உழைப்பெண்டால் ஒரு ரூவாய்க் குடி. உதுதான் சீவியமாச்சு. உங்கடை கொம்மான்ர உதவியுமில்லாட்டி, நான் குளம் குட்டையிலை விழுந்துதான் உயிரை மாய்க்க வேணும். ஒரு புள்ளை ஒரு வருசமாச்சு. அந்தப் புள்ளைப் பொறுவுக்குப் பட்ட கடனே இன்னும் அடைக்கல்லை."

"பொடியனோ, பொடிச்சியோ? ஏன் இங்க கொண்டாறதில்லை?"

"பொடிச்சிதான். அந்தச் சனியனுக்கு மூளையிலே அப்பன்ரகுணம். இங்க கொண்டந்தால் வேலை வெட்டி செய்யவும் விடமாட்டாள்."

"சத்தியமாய்ச் சொல்லுறன் பூமணி, உன்னைப் புள்ளைப் பெத்தவளெண்டு ஒருத்தரும் சொல்லாயினம். உன்ரை வடிவும் ஒரு வடிவுதான். அம்மா கூடச் சொல்லும், கிளியை வளர்த்துப் பூனை கையில் குடுத்த மாதிரியெண்டு."

" என்ர அப்பு இப்பிடியொரு புரியனைக் கொண்டந்து என்ர கழுத்திலை கட்டிவைப்பாரெண்டு நான் கனவிலும் நினைக்கயில்லை" என்று சொல்லி முந்தானையை எடுத்து மூக்கைச் சீறினாள். அதனை விலக்கிய பொழுது, அவள் வனப்புக் குலையாமல், அன்றிருந்தது போலவே தோன்றியது.

அவளைப் பார்த்தான். அவளுடைய அங்கம் ஒவ்வொன்றின் அழகினையும் கட்புலனால் நுகர்ந்துவிடும் வேகம். இவ்வளவு காலமும் தன்கண்ணில் தட்டுப்படாத வனப்புகள் அவள் மேனியில் படர்ந்திருப்பதாகப் பிரமை. வட்ட முகம் முகத்தைப் பேர் பாதியாக வெட்டிவிடும் நீள் கண்கள். அவற்றிக்கு இமைக்கோடிகள் வரை கரையிட்டிருக்கும் புருவங்கள். அதன் இணைப்பில் எழுந்த கூரிய மூக்கு. நெளிந்த கடலலைகளின் அழகு காட்டும் கேசம். செவிப் பிரதேசத்தில், தூக்கணாங்குருவி கூடு தூக்கும் சிலிம்பி மயிர். இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு, ஒரு குழந்தைக்குப் பாலூட்டியும் இன்னமும் குமரிக்கட்டுக் குலையாது புடைத்து நிற்கும் மார்புகள். கொடிவாக்கின் கயிற்றுடல்....

" பூமணி " — அவன் பேச்சில் புலால் வேட்கை கொண்ட வேங்கையின் நெடி.

"..........." — ஆழ் கடல்.

" சரியா ? "

" என்ன சரி ? " — எக்கச்சக்கமான கேள்வி. மனத்தைக் கலக்கியது.

" என்னில் எப்ப எண்டாலும் கோவிப்பியா ? "

சம்மதமா ? அல்லது சிந்தனையா ? — தலை கவிழ்ந்து நிற்கிறாள்.

" சொல்லன். "

" கோவிக்கமாட்டன். "

அப்பொழுது " தம்பி " என்று அழைத்துக் கொண்டு அம்மா வந்தாள்.

அவன் ஏமாற்றத்தின் எதிரொலியாக விட்ட நெடு மூச்சு அவள் உடலில் பட்டிருக்க வேண்டும்.

மௌனம்.

அந்த மௌனத்தில், உள்ளத்தின் இச்சை நெருப்பு, தீ நாக்குகளை மேலெழுப்பி ... அவள் விலகி நகர்ந்தாள்.

“ அம்மாவே ? உங்களைத்தான் தேடி இப்ப வந்த னுன்” என்று அம்மாவை எதிர் கொண்டழைத்தாள்.

“ ஆர், பூமணியே ? என்னடி புள்ளை தேள்வை ... ? ”

“ இண்டைக்குக் கூப்பன் எடுக்க வேணும். ஒரு ரெண்டு ரூவாய் வாங்கிக் கொண்டு போகலாமெண்டு ..”

“ உதுக்குத் தானே வந்தனி ? அது தாறன். அது கிடக்க அண்டைக்கு என்னடி வீட்டிலே சண்டை ? ரெண்டு மூண்டு நாளா உன்ர தலைக் கறுப்பையும் காணேல்லை. சின்னத்தம்பியின்ரை சிலமனையும் உங்காலை காணேல்லை.”

“ வேதாளம் முருங்கை மரத்திலை தானே ஏறும். போன கோசு அடைவு வைச்ச அட்டியலை, எங்களுக்குத் தெரியாமல் வித்துச்சுட்டுத் திண்டுட்டுது. அப்பு அதைக் கேட்டதுக்குத்தான் சண்டை. எனக்கு மனுஷனுடை சீ எண்டு போச்சுது.”

“ என்னமோ உன்ர தலைவிதி உப்பிடியாய்ப் போச் சுது.”

அன்று பின்னேரம் கிணற்றடிக்குக் குளிக்கச் சென்ற வேலும்மயிலும் எட்டிப்பார்த்தான். பூமணி கிணற்றடியில் ‘உடுத்தாடை’ கட்டிக் குளித்துக்கொண்டிருந்தாள் அவன் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை அவளும் கவனித்து விட்டாள். அவள் மேலில் அழுக்குத் தேய்க்கும் வாக்கில், அடிக்கொரு தடவை அவனைத் திரும்பிப் பார்த் தாள். வெற்றிலைக் காவியிலுலும் தன்னுடைய வெண்மை யைச் சோரம் போக்காத பற்களை, அடிக்கொரு தடவை காட்டினுள். அன்று இருவரது குளிப்பும் முடிய ஒருமணி நேரமென்ருலும் ஆகியிருக்கும்.

அவனுக்கு நெஞ்சுத் துணிச்சல் குறைவு. எப்படி எல்லாமோ திட்டங்களை மனத்தில் உருட்டினாலும், ஒன்று கூட உருப்படியாக அமையவில்லை. அதற்கிடையில் லீவு முடிந்தது. பட்டினம் போகவேண்டியிருந்தது. ' நான் ஏமாற்றவில்லை; உங்கள் மனப் போக்குத் தெரியும்' என்றே அவள் தன் பார்வையில் செய்தி விடுத்ததாக அவனுக்குப் பட்டது.

அன்று போனவன், மூன்று மாதங்களுக்குப் பின்னர், இன்றுதான் ஒருவார லீவில் வந்திருக்கிறான்.

ஆறு ஆண்டுகளாக உருவாகிய இச்சை மூன்று மாதங்களுக்கு முன்னர் தீப்பிளம்பாகி அதன் காங்கையில் உருகும் நெஞ்சு ....

ஆசை பொங்கும் உள்ளத்துடன், கிணற்றுக் கட்டில் ஏறி, போன தடவை அவள் சிரித்துச் சிரித்துக் குளித்துக் கொண்டிருந்த கிணற்றடியைப் பார்த்தான். அங்கு ஈ, காகம் கூடக் கிடையாது. வெறிச் சோடிக் கிடந்தது. அவள் வாழும் குடிசைக்குத் தன் பார்வையைத் திருப்பினான்.

குடிசைக்குப் பின்னல் ' திடு திப் ' பென்று எழுந்திருக்கும் பந்தல்.

' எதற்கு ? '

அந்தப்பந்தலுக்குள் சா வீட்டின் பயங்கரம் நிழலாடுவதை ஒரே கணத்தில் அவதானித்தான்.

' என்ன நடந்திருக்கும் ... ஒருவேளை வேதாளம் முருங்கை மரத்தில் மறுபடியும் ஏற, விரக்தி கொண்ட பூமணி, தன் உயிரை ஏன் பூமிக்கும் அடுத்த வீட்டுச் சபல எண்ணங்களுக்கும் பாரமாக வைத்திருக்க வேண்டுமென்ற நினைவில் உயிரை மாய்க்க பொலிடோல் என்னும் சக்தி மிக்க நஞ்சு இப்பகுதியில் வெகு மலிவாகக் கிடைக்கின்றது ...'

முந்தாநாள்கூட யாரோ ஒரு இளம் பெண் பொலிடோல் அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டதாகச் செய்தி வந்திருந்தது. தலைப்பை வாசித்தவன், செய்தியை வாசிக்க வில்லை.

'ஒருக்கால் இந்தப் பூமணிதான்...'

நெருப்பின் மீது நீரைக் கொட்டும்பொழுது மேலெழும்பும் ஆவியைப் போன்று எழும் எண்ணங்களின் குமைச்சல்.

அவசரமவசரமாக முகத்தைக் கழுவிக்கொண்டு வீட்டுக்கு வந்தான்.

"அம்மா, பூமணியின்ர வீட்டை என்னணை ?"

"சொல்ல மறந்துட்டன் தம்பி அவன் சின்னத் தம்பி செத்துப் போனான். நேத்துத்தான் சவம் எடுத்துக் காடாத்துச் செய்தினம். எளியதுகளெண்டாலும் நல்ல சனம். ஒருக்கா முகத்தைக் காட்டீட்டு வாவன்."

இறகு முளைத்துப் பறந்த கற்பனைகள், பூமியை நோக்கி இறங்கினவா ? சாவீட்டிற்குப் புறப்பட்டான்.

படலையைத் தாண்டும் பொழுது, வாசலுக்குக் கிட்ட இருந்த கொட்டிலில் கட்டப்பட்டிருந்த பசு, தொழுவத்தில் நிரம்பி வழியும் வைக்கோலைத் தின்னுது. பக்கத்தில் சிந்தப்பட்டிருந்த வைக்கோற் துண்டுகளின் சுணைப்பில் கிடந்து, உள்ளிருந்து வாய்க்குள் இழுத்துக் கொள்ளும் உணவு உருண்டைகளை அசை போட்டுக்கொண்டிருந்தது. உள்ளுணர்வுக் கக்கல்களில்—தீனுருண்டைக் குமட்டலில்—மனம் மாடாகக் கூடுவிட்டுக் கூடு பாய மனம் அசை போட, கால்கள் சாவீட்டை அடைந்தன.

கால்கள் நடப்பட்டு, தடிகளை அப்படியும் இப்படியும் எறிந்து, நிழலுக்காக ஓலை பரப்பப்பட்ட கூரை. கூரையை மறைத்து வெள்ளை கட்டப்பட்டிருக்கிறது. பந்தலின் மையத்தில் இரண்டு வாங்குகள் இணைத்துப் போடப்பட்டிருக்கின்றன; அதில் பிரேதம் வளர்த்தப்பட்டிருந்த கோலம்.

வாங்குகளின் இரு ஓரங்களிலும் அடிக்கப்பட்டிருந்த சட்டப் பிளவுகளில், சந்தனக் குச்சியின் குறள்கள்—மருந்துப் பகுதி எரிந்துவிட, வெறுங் குச்சிகள் மொட்டையாக நிற்கின்றன. அத்தர், கற்பூரம், சாம்பிராணி ஆகியவை கலந்த ஒருவகை நெடி அப்பிராந்தியத்தை முற்றுகையிட்டிருப்பதாக ஒரு மனப்பிரமை. பந்தலின் அருகுகளில் ஐதாகத் தூக்கப்பட்டிருந்த குருத்துத் தென்னோலைத் தோரணங்கள், கயர் ஊறிக் காவி நிறம் பற்றி வாடிக்கிடக்கின்றன. பந்தலின் ஒரு காலாக இருக்கின்றது, ஒரு முள் முருங்கை மரம். அதைப் பார்த்த மாத்திரத்திலேயே, அது பூமணியின் பொன்னுருக்கன்று நடப்பட்ட கன்னிக்கால் என்பதைச் சொல்லிவிடலாம். அது என்னவோ மதமதப்பில் சடைத்து வளர்ந்துதானிருந்தது. அதன் பக்கத்தில் முருகன் யோசனையில் அமுங்கியவனாக, ஒரு சிறுமியை மடியில் தூக்கிவைத்திருக்கின்றான். அச் சிறுமி பூமணியின் சாயல். என்ன யோசனை, உலகத்து இச்சா சக்திகளுடன் இரண்டறக் கூடிக் குலவிக் கிளைத்துக் கவர் விடும் ஆசாபாச இயக்கங்களுடன் சங்கமமாகித் தேங்கிச் சக்தியாக, அச் சக்திக்கூடாக வாழ்க்கை என்ற தேரைப் பலவந்தமாக இழுத்து வர ... தேரின் அச்சாணி முறிந்துவிட .. ஓடி, ஆடி வாழ்வதாக மேடையில் இயந்திரப் பொறி இயக்கம் காட்டி அதையே அநித்தியமற்ற அமரத்துவமென்று வாழ்ந்து, இறுதியில் நித்தியமான சாம்பல் மேடு. சாம்பல் மேட்டில் பாத்திகள் கீறி, நவதானியங்களைத் தூவி, இளநீர், பால், தயிர், நெய், முக்கனிகள், பன்னீர் என்பன ஊற்றி, சிறுகுச்சிகளை நாவிதன் செய்த செப்படி வித்தையில் கலப்பையாகப் பாவனை செய்து உழுது, அலை கடலில் கரைத்து விடுவார்கள். எல்லாம் சூனியம்; சூனியமே நித்தியம். சாம்பல் கரைக்கப்பட்ட கடலைப் போன்றே விரிந்திருக்கும் சிந்தனைக் கடலில் முருகன் கிளிஞ்சல்கள் பொறுக்குகிறானா? அல்லது மரவள்ளித் தோட்டத்தில் எத்தனை கிழங்குகள் பணமாகி, தன் மடியில் தவழும் பிஞ்சின் வாழ்க்கையை ஈடேற்றும் என்ற சிந்தனையா? நிலத்தைக் கொத்தும் குடியானவனால் தன் நெஞ்சில் தத்துவப் பயிர்களை நாட்ட முடியுமா?

பந்தலுக்குள் பனையோலைப் பாய்கள் விரிக்கப்பட்டிருந்தன. அதில் நாலைந்து கிழவிகள் வளைத்துவரக் குந்தி, கிசு முசு என்ற பேச்சுடன் வெற்றிலைச் 'சமா' வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

'பூமணி எங்கே?'

அவளை மட்டும் காணவில்லை. இவற்றில் பார்வை மேய, கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு, முகத்தில் சோக ரேகைகளின் கோடுகள் பற்றிப்படர, அமைதியின் உருவாய், வேலும்மயிலும் பந்தலுக்குள் நுழைந்தான்.

அவனை முதலில் கண்ட ஒரு கிழவி கூட்டத்திலிருந்து எழுந்து,

"உனக்குத் தோளும் துடிக்க வில்லை—என்ர ராசாவே
நீ ஒரு துக்குறியும் காணலை யோ...?"

என்று ஒப்பாரி இழுத்துக்கொண்டே அவனை நோக்கி விரைந்தாள். மற்றக் கிழங்களும் தொடர்ந்தார்கள். மாரடித்து ஒப்பாரிக் குரலெழுப்பி விரைந்த கிழவிகள் வேலும் மயிலுவைச் சக்கர வியூகமாக வளைத்து அமர்ந்து கொண்டு, கைகளை இணைத்துச் சங்கிலிக் கோர்வையின் சாயலில் ஐக்கியமாகி, தாங்கள் ஒப்பாரியில் அடைந்துள்ள தேர்ச்சியைப் பறை சாற்றினார்கள்.

அந்தப் பிலாக்கணம் ஓய்ந்ததும் குறுக்குக் கட்டின் தலைப்பினை எடுத்து, மூக்கைச் சிந்தி, கண்ணீர் வராத கண்களையும் ஒப்பனைக்குத் துடைத்துக் கொண்டு எழுந்தார்கள்.

அப்பொழுது ஒரு பெண் தலைவிரி கோலமாகத் தலையில் மண்ணை வாரிப்போட்டபடி அவன் காலடியில் வந்து விழுந்தாள். துண்டிக்கப்பட்டவுடன் துடிக்கும் பல்லியின் வாலைப் போன்று துடிக்கின்றாள். உலகம் முழுவதும், சூனியமாக, அந்தச் சூனிய வெடிப்புப் பாளங்களுள் ஒன்றில் அமுங்கிக் கொண்டிருப்பதான குரல். அவனுடைய கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, சோகத்தின் நிலைக்களனாகிவிட்ட குரலில் தாலி இழந்து தலைவிரி கோலமாக,

" அந்தரிச்சு நிக்கிறேனே—அயலூர்த்துரையே
புருஷனைத் திண்டுவிட்ட பெரும் பாவியானேனே
அப்பனைத் திண்ட அநாதைக்குத் தாயானேன்
சங்கிலி ராசாவே நேசம் மறக்காதே...
நம்பினேன் என்துரையே"

என்ற ஒப்பாரி அவன் நெஞ்சைத் துளைக்கிறது. அவளுடைய கண்ணீர் அவன் பாதங்களைக் கழுவுகின்றது.

நெருப்பின் காங்கை எங்கே? உள்ளத் தவிப்பு எங்கே? அறுந்த வீணையில் ஒலிக்கப்படும் அவலக் குரலா? கண்ணீரா? இதயத்தைப் பிழிந்து நீர் கக்கி, கங்குகள் உமிழும் நெருப்பை அவித்து, அதன் வெப்பத்தினைத் தணிக்கின்றதா? ஓராண்டல்ல; இரண்டாண்டல்ல; ஆறு நீண்ட நெடும் ஆண்டுகளாக நெஞ்சில் எழுந்த தீ நாக்குகள் செத்துச் சவமாகி, சூனிய உலகின் சூனியமாகி விட, எஞ்சியிருக்கும் சாம்பல்மேடு நெஞ்சை அழுத்துகின்றதா? சாம்பல் எங்கே? கடலிலா? உள்ளமா? கடலா? உள்ளக் கடலில் என்ன கிடக்கும்? சபல நினைவுகளின் கழிவுப் பொருளான சாம்பலின் சுவடே தெரியாது கழுவும் நீராக. அவளுடைய மென் பஞ்சு மார்பின் அணைப்புக்காக ஏங்கித் தவித்த நேரங்கள் உண்டு... இன்று அந்த ஜடப்பொருள் உருண்டை காலடியில் சுருண்டு கிடக்கும் பொழுது...? எங்கே இச்சை? தணியாத புலால் வேட்கை எங்கே? குப்பை மேட்டின் அழுக்கில் வாடிக் கிடக்கும் ரோஜாவினை முகர்ந்தனுபவிக்க இயலாது என்ற அருவருப்பா? ஆயிரம் விரிபுடையன்கள் நெஞ்சில் கொக்கி இட்டு நிற்கின்றன.

பிலாக்கணம் ஓயவில்லை; ஒப்பாரி மடிய வில்லை.

பூமணியின் பிடியை விலக்கிக் கொண்டு, சவம் வளர்த்தப்பட்டிருந்த வாங்கை நோக்கிச் சென்றான் வேலும்மயிலும்.

" தம்பிக்கு ஒரு கதிரை கொண்டு வந்து போடுங்க" என்று வரவேற்றான் முருகேசன்.

மருந்துப் பகுதி எரிந்துவிட, எஞ்சி நிற்கும் ஊதுபத்திக் குறள்களும் தன்னை வரவேற்பதாக அவனுக்குப் படுகின்றது

# நரபலி

நடு நிசி....

நட்சத்திரங்களற்ற மேக இருள். கரு மேக இருளைக் குத்திக் கிழிக்கும் மின்னலுடன் வானத்தை உதைத்த இடி முழக்கம் பயங்கரமாகக் குடலைக் கலக்கிற்று. மயிர் நனையாத் துந்துமி. புயலின் வருகைக்கான ஒத்திகை.

தெரு ஓரம் இருமருங்கும் கரடிகளாக நிற்கும் மந்துச் செடிகளினுள்ளும், அங்கொன்றும் இங்கொன்றுமாக அலியன் யானைகள் நிற்பது போன்ற ஈச்சம் பற்றைகளினுள்ளுமிருந்து புறப்பட்ட பலதரப்பட்ட பூச்சி புழுக்களின் ஒலிகள் அந்தக் கொடிய இரவின் பயங்கரத்தை இன்னும் பன்மடங்காகக் காண்பித்தன.

வடமராட்சிப் பிரதேசத்துக் கிராமங்களுக்கு வாழ்வளிக்கும் கற்பகதருவான பனை விருட்சங்கள் தனித்துவமாக, தன்னிச்சையாய், தலைவிரி கோலமாக எங்கும் பரந்து சிதறி நின்றன பாழ்பட்ட இந்தப் பாதி இரவில் அவையெல்லாம் பயங்கரப் பூதங்களாக உருமாறித் திகழ்ந்தன.

அவற்றில் சில வான மண்டலத்தில் அவ்வப்போது நிகழும் பருவ மாற்றங்களையெல்லாம் பூமிக்குக் கொண்டுவரும் ஏக விநியோகஸ்தர்களாக வெகு உயரத்தில் சஞ்சரிக்கும் மேகக் கூட்டங்களுடன் மெல்லக் கதைத்துப் பேசி உறவு முறை பூண்டு நிற்கின்றன.

இருளைப் பிதுக்கும் வடலிக் காட்டிற்குள் ஆணும் பெண்ணுமாக இரு ஆந்தைகள் அலறின. அதைத் தொடர்ந்து சுடலைக்குருவி ஒன்றின் சோகக் கூக்குரல். தூரத்தில் எங்கோ அவலத்தொனியில் ஊளையிடுகின்றது நாய் ஒன்று.

வடகிழக்கிலிருந்து வீசிய கொடிய குளிர்காற்று உலகத்து ஜீவராசிகளிடத்தெல்லாம் ஏகோபித்த வெறுப்பைச் சம்பாதித்திருக்கும். உலகமெல்லாம் கவலையற்று உறங்கியிருக்கும். அதன் உறக்கமும் விழிப்பும் உடுப்பிட்டிக் கிராமத்திலா தங்கியிருக்கிறது? நிச்சயமாக உடுப்பிட்டிக் கிராமம் எப்போதோ உறங்கிவிட்டது.

ஆனல், ஒருவன் மட்டும் அந்த இரண்டுங்கெட்ட அகால வேளையில் நிராதரவாக—நீண்டு கிடந்த அந்த மக்கித் தெருவில் நிலைகொள்ளாது பரிதவிக்கும் தன் உடலை வெகு சிரமத்தினூடே அழுத்திப்பிடித்த வண்ணம் உடுப்பிட்டிக் கிராமத்தை நோக்கி—அதி வேகமாக நடந்து கொண்டிருந்தான்.

அவன் அரையிலுள்ள வேட்டியை ஏற்கெனவே மடித்து, முழங்கால் சிரட்டைக்குமேல் சண்டி கட்டி இருந்தான். உடலில் தரித்திருந்த அரைக்கைச் சட்டை எப்போதோ தெப்பமாக நனைந்து உடலோடு உடலாக ஒட்டி உரித்தெடுக்கும் நிலையிலிருந்தது. கழுத்தைச் சுற்றிய சிவப்பு, பச்சைக் குறிகளமைந்த 'மவ்ளர்' சற்று வெதவெதப்பாக முன்பு இதந்தந்த போதிலும், இப்போது வியர்வை உட்புகுந்து கொண்டதால் மயிர் கொட்டிப்புழு ஊர்ந்த இடமாகச் சுணைத்துச் சொறியத் தூண்டியது. வெளிறிப் போயிருந்த முகத்தில் வியர்வைத் துளிகள் அதீதமாகத் தோன்றி, அவன் கண்களிலும் வாயிலும் அலாதி

யாகப் புகுந்து கரித்தன. எரிந்த கண்களை அழுத்தித் துடைக்கும்போது ஏதோ ஒன்று சுழன்று வந்து 'கிண்...' என்று ரீங்காரத்துடன் செவிகளை அடைத்து விட்டது போன்ற உணர்வு தோன்றுகிறது. அத்தோடு காய்ந்த உதடுகளை நுனி நாக்கால் உறுவி நனைக்க முயன்றான். பயத்தால் நடுங்கிய அவன் தேகம் அடிக்கடி சிலிர்த்துப் புல்லரித்தது. கால்களின் குறிக்கோள் தறிகெட்டுத் தடம் புரண்ட போதிலும் கனவேகமாக எட்டி அடிவைத்துக் கொண்டு நடந்தான்.

கால்களை எட்டிப் போட்டு நடந்த போதிலும் வழி என்னவோ மாளாது நீண்டுகொண்டே சென்றது. அந்தத் தொலையாத தூரத்தை நினைத்த பரமநாதனுக்கு அழுகை அழுகையாக வருகின்றது. என்ன செய்வது? 'ஐயோ' என்று அவன் அவலக்குரல் இட்டால் அது ஊர்மனைக்கு எட்ட ஆறு மாதங்கள் செல்லும்.

வரண்டு உமிழ்நீர் சுரப்பி ஒத்துழைக்க மறுத்து, அண்ணத்தில் ஒட்டிக் கொண்ட நடுநாக்கை ஈரளிக்கச் செய்து புரட்டிக் கொடுப்பதற்கே பெரும்பாடாயிற்று. உலர்ந்த தொண்டை வற்றிக் காய்ந்து விட்டதால் ஊமைத் தன்மை அடைந்து பரிதவித்தது.

'கடவுளே முருகா.'

பரமநாதனின் நெஞ்சில் சுழியோடி முதன் முதலாகத் தேடிப்பிடித்த அச் சொற்களை, வாய் திரும்பத் திரும்ப இரண்டு மூன்று தடவைகள் புடம்போட்டு உச்சரித்துக் கொண்டது.

மருதடியைச் சமீபிக்கும் பரமநாதனின் நெஞ்சுள் பயம் எலியாக அரித்தது. அதுதான் உயிரோ? அது அவன் உடலை விட்டுப் புறப்படத் துடிக்கின்றது போலும்!

பல காலம் மறந்திருந்த தெய்வ நம்பிக்கை பரமநாதனின் நெஞ்சில் மறுபடியும் இப்போது விதையூன்றி விகசித்தது. அது அவனைப் பொறுத்தவரையில் நித்தியமா,

அநித்தியமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

மருதடி வந்து விட்டது. அவ்விடத்தைக் கடப்பதா, அல்லது வந்த வழியே திரும்பி ஓடிவிடுவதா ... என்பதை நிர்ணயிக்கு முன்பே,

அவன் முன்னே நின்ற அந்த உருவம்...?

'முனி!'

இத்தனை நேரமாக எதற்காகப் பயந்தானே அது அவன் எதிரே பிரத்தியட்சமாகக் காட்சியளித்தது. பரமநாதனின் மண்டை சுக்குநூருக வெடித்துச் சிதறியது போன்ற நிலை. நினைப்பதற்கு மறந்து விட்ட நெஞ்சு உயிரை எங்கோ ஒளித்து விட்டது போலும்! செயலற்று—ஆனல் வேரூன்றிவிட்ட கால்களை அவ்விடத்திலிருந்து பெயர்க்கவே முடியவில்லை. பிதுங்கி வெளியே புறப்பட்டிருந்த விழிகளை இழுத்தணைத்து மூடுவதற்கு மறந்தன இமைகள்.

கத்தி வீச்சு மின்னல், முனியைச் சுட்டிக் காட்டிற்று' ஜடாமுடிகள் நிலத்தில் சரிந்து புரளகறுத்துத் தடித்த பெரிய ஆகிருதியாகப் முனி முன் நின்றது.

'ஐயோ!'

நினைக்கும் சொற்கள் நெஞ்சில் கருவுற்றவுடனேயே நிறைவு பெற்றுப் பிரசவமாகாது மரித்துக் கொணடிருந்தன. 'ஆ'வென்று திறந்து கிடந்த அவன் வாயில் சீறி வந்த காற்று கோ' என்று குழறிக்கொண்டு புகுந்து வெளிப்பட்டது.

"அப்பனே முருகா, நீ மயிலேறி வர வேண்டும்!"—வெகு நேரத்தின் பின்பு பரமநாதன் குழறிக்கொண்டே சிரமேல் கரம் குவித்துக் கும்பிட்டான.

மறந்து போயிருந்த திருப்புகழில் இரண்டொரு வரிகளைத் திக்கித் திணறிக் கொண்டே பாடினன். இதிலிருந்து

காப்பாற்றினல் ஆவணிக்கு அறுநூற்று நாற்பத்தெட்டு வேல்கள் குத்தி அரிகண்டக் காவடி எடுப்பதாக நேர்த்தி வைத்துக் கொண்டான்.

என்ன ஆச்சரியம்! தெய்வ அனுக்கிரகம் பலித்ததைப் போல முனி விலகி வழிவிட்டது.

அதற்கு மேலும் பரமநாதன் அங்கு நிற்பானு? பிடரியைத் தொடும் அவன் குதிக்கால்கள்தான் அதற்குச் சாட்சி சொல்ல முடியும்.

ஓட்டமா அது? அசுர வேகம்! வீட்டை நோக்கிப் பரமநாதன் காற்ருய்ப் பறந்தான்.

முனி மாத்திரம் விட்டதா அவனை? அதுவும் விடாமல் அவனைத் துரத்திற்று.

'கலீர் கலீர்' என்ற சலங்கை நாதத்துடன் சுழன்று ஓடிச் சென்றது மருதடி முனி. அந்தச் சலங்கை நாதம் பாய்ந்து ஓடும் பரமநாதனின் மிக அருகிலேயே கேட்டது.

அதிவேகமாக ஓடிய பரமநாதன் சவாரிமாடு மூசுவது போல இரைந்தான்.

"குய்! குய்! குய்!"

முச்சந்தித் திருப்பத்தில் மூன்று முறை 'ஆதாளி' போட்டு கூக் குரல் வைத்தது முனி.

பாவம், பரமநாதன். பகலென்ருல் இப்படி ஓட முற்பட்டிருப்பானு? என்ன செய்வது? எக்கச்சக்கமான இரவு நடுச்சாம வேளையாய்ப் போய்விட்டது.

இல்லையென்ருல் ... ?

என்ன செய்வது? இந்த அகால வேளையில் கூட அவனுடன் இரண்டொருவர் கூடிவந்திருந்தால் மருதடி முனியின் சூலத்தைப் பிடுங்கி மக்கிக் கிடங்கிற்குள்ளல்லவா 'முசுப்பாத்தி'யாகப் போட்டு விட்டுப் போயிருப்பான்!

பகலென்ருல் அதன்மேல் சிறுநீரே கழித்திருப்பானே! அப்படி எத்தனையோ இடங்களில் செய்திருக்கிருன். 'நாய் சிறுநீர் தெளிக்கும் சூலங்களுக்கும் கற்களுக்கும் பாலாபிஷேகம் ஒரு கேடா?' என்றெல்லாம் 'பகிடி'கள் விடுபவனுயிற்றே.

நாலைந்து நாஸ்திகப் புத்தகங்களை அரை குறையாகப் படித்ததன் விளைவுதான் இதெல்லாம். இளம் வயதில் இயற்கையாக ஏற்படும் ஏதோ ஒருவகைப் புரட்சி எண் ணங்களுக்கு அடிமையாகி இப்படி இரண்டு மூன்று புத்தகங்களைப் படித்து மூளையைச் சுருக்கிக் கொண்டதால் ஏற்பட்ட கிறுக்குப் புத்தி இது.

பகலென்ருல் பரமநாதன் கதைத்து வெழுத்து வாங்கி விடுவான். பகலெல்லாம் பேய் பிசாசில் நம்பிக்கையில்லைத் தான். ஆனுல், ஏனே இரவு வந்ததும் மெல்ல மெல்ல விஸ்வரூபமெடுத்து ஒரே பயப் பிராந்தி ஆகிவிடுகிறதே!

மருதடி முனிக்கு விளக்கு வைக்கும் பரமநாதனின் மச்சான் முருகுப்பிள்ளைக்கும் பரமநாதனுக்கும் பார்த்த நேரமெல்லாம் வீட்டில் வாதப் பிரதிவாதங்கள் பேய் பிசாசைப் பற்றி மிக மும்முரமாக நடைபெறுவது வழக்கம். பாவம்! முருகுப்பிள்ளையர் பரமநாதனுடன் பகலில் பேசி வெல்ல முடியாமல் தோற்றுப்போய்த்தான் விடுவார். ஆனுல், இரவு வந்தால் இரண்டொரு 'பேய்க்கதை'களைச் சொல்லிப் போர்வைச் சீலைக்குள் முகம்கால்கள் தெரியா மல் மூடிப் போர்த்துக் கொண்டு சுருண்டு அவனைப் படுக்கச் செய்து விடுவார்.

நேற்று மத்தியானங்கூட மச்சான்காரனுடன் இதே சர்ச்சை செய்து கொண்டிருக்கும்போதுதானே பரமநாதனின் சிநேகிதர்களில் ஒருவன் வந்து சொன் ஞன் "நாளைக்கு அச்சுவேலிப் பிள்ளையார் கோயிலிலை அசல் கூத்தாம், நீ வரயில்லையே பரமு? நாங்களப்பிடி

வேலையாலை வந்து கூத்தெடியிலை நிப்பம். நீயும் வந்தி யெண்டால் எல்லாருமாப் பாத்துட்டுச் சேந்து வரலாம்'' என்று.

அடுத்தநாள் அவர்கள் சொல்லை நம்பிவந்த பரம நாதனுக்கு கூத்துக் கொட்டகையடியில் பெருத்த ஏமாற்றம்! அவன் நண்பர்களில் ஒருவன்கூட வரவில்லை. கூத்தும் அவ்வளவாகச் சோபிக்கவில்லை. மழையும் வருவதற்குரிய அறிகுறிகள் தென்படவே வருவது வரட்டும் என்று புறப் பட்டுவிட்டான். ஆனல் உள்ளுக்குள் பயம்தான்.

இருளுக்கும் தனிமைக்குமூடே முனியும் தோன்றி அவனைத் துரத்தி வாருவதாக இருந்தால், பாவம்! பரம நாதன் என்ன செய்வான்?

வருஷந் தவருமல் ஆடு, கோழிகளை வெட்டிப் பலி யாகக் கொடுத்தும் அடங்காத மருதடி முனி ஆண்டுக் கொருமுறை ஓர் ஆளையாவது அடித்துச் சரிக்கட்டி இரத்தத்தைக் குடித்து வருவதாக அபார நம்பிக்கை அப் பக்கத்துச் சனங்களுக்குண்டு. அதன் நிமித்தம் வீடுதோறும் ஆடு கோழிகளை வளர்த்து வருகிருர்கள். எதை வளர்த் தென்ன? யாராவது ஓர் ஆளையேனும் நரபலியாயும் முனியப்பர் எடுத்தே தீர்ப்பார் என்பதில் அசைக்க முடி யாத நம்பிக்கை அவர்களுக்குண்டு.

நாய்கள் ஏகோபித்துக் குரைத்துத் துரத்தின. ஊர் விழித்துக் கொண்டுவிட்டது. அது அவர்களுக்குப் புரிந்து விட்டது. கர்ண கடூரமாகக் குரைக்கும் நாய்களின் ஊளை யின் மத்தியில் 'கல கல' என்று ஒலித்த சலங்கையின் நாதந்தான் அதற்குக் காரணம்.

'முனியப்பர் இன்று ஆற்றையோ முடறை முறித்துச் சரிக்கட்டப் போருர். இந்த வருசத்துக்கு இன்னும் ஆரையும் பலி எடுக்கயில்லை. இண்டைக்கு அது நடந்து விடும்' என்றெல்லாம் தீர்மானித்து விட்டார்கள்.

பரமநாதனின் வீடு திமிலோகப்பட்டது. பேர்த்தி யாரும், தாயும் படுத்திருந்த பாயில் இருவருக்குமிடையே 'தொபீரென்று' முகங்குப்புற விழுந்தான், பரமநாதன். என்னவோ ஏதோவென்று துடித்துப் பதைத்தெழுந்த அவர்களுக்கும் விஷயம் புரிந்துவிட்டது போலும்!

வாயை அலசிக் கொப்பளித்துக் கொண்ட பேர்த்தியார் இறப்புக்குள் கைவிட்டுக் கடுதாசிச் சரையை எடுத்து விரித்து 'அப்பனே முருகா என்ரை பிள்ளைக்கு ஒண்டும் வராமல் காப்பாத்து' என்று நினைத்துக் கதிர்காமத்து விபூதியை விரல்களில் எடுத்து அவன் நெற்றியில் பூசி மெழுகினுள்.

"காய் மணம், பூ மணம்; எச்சில் பேய்கள் எங்கை யெண்டு காத்து நிக்கும்! குறுக்காலை போவான் ஏம சாமத்திலை போகாதை வராதை யெண்டால் கேக்கிருனே!" என்று வாய் விட்டுத் திட்டிக் கொண்ட கிழவி முனியப் பருக்கு வாறமுறை கோழிச் சேவலொன்று நேர்ந்து விடு வதாக வேண்டிக் கொண்டாள்.

முனியின் அகோரம் அடங்கவில்லை. ஆளை அடித்துப் பலி எடுத்தாலொழிய அவ்விடத்தை விட்டு அகலுவ தில்லை என்ற வீருப்புடன் பரமநாதன் வீட்டு வேலியைப் பிய்த்து விடுவதுபோல் வேலியில் உரசி ஆதாளிக்கூக் குரல் போட்டது.

முனியப்பரின் மூர்க்கத்தனமான உரசுதலால் பாட்டில் சரிந்து 'படா'ரென்று விழுந்தது, லொறி செல்வதற் காகக் கட்டிவைக்கப்பட்டிருந்த அந்தப் பெரிய தட்டி. தட்டி விழுந்த சப்தத்தையடுத்து பரமநாதனின் மச்சான் முருகுப்பிள்ளையின் முனகல் கேட்டது.

பாலூற்றியவனையே பதம் பார்த்து விட்டாரா முனியப் பர்? யாரும் வெளியே வந்து 'என்ன' என்று பார்க்கத் துணிய வில்லை. அவ்வளவு பயம்!

லொறித் தட்டிக்குள் அகப்பட்டு நசுங்கிய முனியப்பர் மூச்சுத்திணறிக் கொண்டே கத்தினர்:

"டே, பரமு! தட்டியைத் தூக்கி விடடா... தட்டியைத் தூக்கி விடடா..."

முனியப்பரின் ஆதாளியொன்றும் தொடர்ந்து கேட்கவில்லை. கிழவி வைத்துக்கொண்ட நேர்த்தியால் அவர் விலகிச் சென்று விட்டார் போலும்!

குரல் பழக்கப்பட்டதுபோல் படவே விளக்கை எடுத்துக்கொண்டு வீட்டிலுள்ள அத்தனை பேருமாக — ஆனல் பரமநாதனைத் தவிர—துணிவை வரவழைத்துக் கொண்டவர்களாக எட்டி அடிவைத்துச் சென்று தட்டியை மிதத்திப் பார்த்தார்கள்.

ஆ! அங்கே நசிந்து கொண்டு கிடந்த முனியப்பர்...

இந்த ஆண்டில் முனி பரமநாதனைத்தான் நரபலி வாங்கியதென்ற உண்மை விடிந்த பொழுதுதான் வெளிச்சமாயிற்று.

# கறை

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்திலே முன் தோன்றிய மூத்த குடியினர்' வதியும் தமிழ்ப் பகுதியில்தான் இது நடந்தது.

வேத நூல்களை விழுங்கி வைத்திருக்கும் வித்தகராம் பொன்னம்பலவாணர் இல்லத்தில் நடந்த இந்தச் சங்கதிக்கு நான்தான் முக்கியமான சாட்சி. வழக்குப் போலிஸ் வழக்கு.

என்னுடைய பொல்லாத காலமில்லாமல் வேறு எப்படி இதைச் சொல்ல முடியும்? நானே விலைக்கு வாங்கிப் போட்டுக்கொண்ட விஷயம். என் வீட்டுச் சோற்றைச் சாப்பிட்டு விட்டுச் சும்மா கிடக்கமாட்டாமல், பிறர்வீட்டுக் காரியங்களில் தலையிட்டுப் பொல்லாப்பைச் சம்பாதிக்க வேண்டியிருக்கிறது.

ஒருவன் நல்லவன் என்ற பெயரெடுக்க வேண்டுமானால் கட்டுப்பட்டு வாழ்ந்து கட்டைக்குப்போன பின்புதான் சாத்தியம். சில சமயம் அதுகூட சந்தேகம்தான். ஆனால், கெட்டவனென்று கேட்பதற்கு ஒரே ஒரு நிமிஷம் மாத்திரம் போதும்.

இன்று என்னுடைய நிலையும் இதுதான்.

எதுவோ நானுண்டு எனது வேலையுண்டு என்று இருந்திருந்தால் இன்று இந்த நாலுபத்துப் பேருடைய பொல்லாப்பைக்கூடச் சம்பாதித்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்திருக்காது. என்னுடைய கொழுப்புச் செய்த வேலைக்கு இது வேண்டும்.

சாட்சிக் கூண்டிலும் ஏறியாச்சு.

இதோ நான் கூறிய சாட்சியம்:

"கடவுள் சாட்சியாக நான் சொல்வதெல்லாம் உண்மை. கண்ணால் கண்ட உண்மை. கடுகளவு பொய்கூடக் கலந்திருக்கவில்லை.

கோட்டார் அவர்களே!

என் வீடும் பொன்னம்பலவாணர் வீடும் ஒரே வேலியைக் கொண்ட வளவு. அந்த ஒரு வேலி இடையில் முளைத்து மறைத்துக் கொண்டிருக்க வில்லையானால் பூர்வீகத்தில் சித்தாத்தை, பெரியாத்தை பிள்ளைகளின் வழித்தோன்றல் என்றுகூடச் சொல்லலாம். ஆனால், அப்படியொன்றும் அவர்கள் எனது சொந்தக்காரர்கள் அல்ல. இந்த வேலி இடைக்காலத்தில் ஏற்பட்டதே.

இப்போதுகூட என் வீட்டிலிருந்தபடியே பொன்னம்பலவாணருடைய வீட்டு முற்றத்தில் எது விஷயம் நடந்தாலும் திறந்த வெளி அரங்கில் பார்ப்பது போல் பார்த்துக் கொள்ளலாம். நாங்கள் ஏதாவது இரகசியம் பேச வேண்டுமானால் 'பகலென்றால் பார்த்துப் பேசு, இரவென்றால் அதுகூடப் பேசாதே' என்பதற்கொப்ப நாங்கள் இருந்து வருகிறோம். அப்படி அவசிய அவசர இரகசியம் பேச வேண்டியிருந்தால் ஒருவருடைய காதை மற்றவர் கடிப்பது போல்தான் கதைத்து முடிப்போம்.

நாங்களிருவம் ஆசிரியர்கள். காலையில் கைகால் முகம் கழுவிக் கொண்டு புறப்பட்டால் மாலையில் தான் மறுபடியும்

வளவிற்குள் காலடி வைப்போம். அதுவரை எங்கள் வீட்டுக் கதவு பூட்டப்பட்டே கிடக்கும்.

பொன்னம்பலவாணர் குடும்பத்தில் வாணர் அவர்கள் உட்பட மொத்தம் ஏழு அங்கத்தவர்கள். ஐந்து ஆண் பிள்ளைகளும், அரியதோர் பெண்பிள்ளையும் உளர். எல்லோரையும் எங்களுக்கு நன்கு தெரியும்.

பொடியன்கள் எல்லோரும் நல்ல வாலிபர்கள். சிறந்த தொழிலாளிகள். ஒருவன் மட்டும் படித்துப் பட்டம் பெற்றிருக்கிறுன். இன்னும் வேலை கிடைக்கவில்லைப் போலிருக்கிறது. அவன் கூடத் தோட்டத்திலிறங்கித் தொழில் செய்து கொண்டுதானிருக்கிறுன். ஐவருமே அருமைத் தங்கையின் பொருட்டுத் தவமிருக்கிருர்கள். இன்னும் மண முடிக்கவில்லை. அந்த மனுஷனுக்கு என்ன குறை. மகாராஜன் மாதிரி இருந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கிருர். இன்னும் இளமை குன்றுத தேகநிலை.

பெண்ணும் பெரிய பெண்ணுகி ஏழெட்டு வருஷங்களாகின்றன. இன்னும் ஓர் ஏற்பாடும் செய்யவில்லை. ஏனே தெரியாது. ஆனுல் மாப்பிள்ளைப் பஞ்சமென்றும் சொல்வதற்கில்லை. ஊருக்குள் ஏராளமாக இருக்கிருர்கள்.

அதிலும் அவளைக் கட்டுவதென்ருல் ஒற்றைக் காலில் நிற்பார்கள். ஐவருக்கோர் அரிய சகோதரி. அழகென்ருல் கொள்ளை. பெண் இங்கிருப்பதால் நீங்களே பார்த்துக் கொள்ளலாம். காணி பூமி, பொருள் பண்டங்கள் சேனை சேனையாகக் குவிந்து கிடக்கின்றன. பெண்ணும் சீனியர் வரை படித்திருக்கின்ருள். இன்றைய கலியாணச் சந்தைக்கு வேண்டிய தகுதி அவளுக்கிருக்கிறது. ஆனுலும் இன்னும் திருமணம் நடக்கவில்லை.

சிங்கப்பூரில் எவனே ஒரு முறைமாப்பிள்ளைப் பொடியன் இருக்கிருனும். அதற்காக 'ஐயர் வரும் வரைக்கும் அமாவாசை பொறுத்திருக்குமா' ? அருகிலிருக்கும் பண்டாரத்தையாவது பிடித்துப் பக்குவமாகக் குறித்த நேரகாலத்தில்

விஷயத்தை முடித்துக்கொள்வது சாலச் சிறந்ததல்லவா? இது ஏன்தான் அவர்களுக்குத் தெரிய மாட்டேன் என்கிறதோ?

பொன்னம்பலவாணர் ஊரிலிருக்கும் மாப்பிள்ளைகளை உதறித் தள்ளி விட்டு, எங்கோ சிங்கப்பூரிலிருக்கும் மாப்பிள்ளைக்காக இப்படிக் காத்திருக்கிறார்.

பையன்கள் ஐவரையும் இதோ உங்கள் கண் எதிரிலேயே பார்க்கிறீர்கள். மாண்டுபோன பாண்டவர் மீண்டும் உயிர் பெற்று வந்திருப்பது போல்..., திரும்பவும் இவர்களைப்பற்றி ஏன் சொல்ல வருகிறேனென்றால் இவர்களுக்கும் இந்த இடத்தில் ஒரு முக்கியத்துவமுண்டு.

ஒரு நாள் இரண்டு ஊதாரி இளவட்டங்கள் வேலியால் எட்டிப்பார்த்து என்னவோ அந்தப் பெண்ணை வீண் வம்பிற்கு இழுத்தார்களாம். விடுகாலிப் பொடியங்களுக்கு விபரம் தெரியாது போலிருக்கின்றது. அன்று பின்னேரம் அவர்களிருவரும் ஒட்டகப் புலத்திற்குப் புக்கை கட்டப் புறப்பட்டுவிட்டார்களென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். இவர்களின் தங்கையென்றால் ஊரில் ஆரென்று கேட்கக் கூடியவர்களும் இருக்கிறார்களா?

ஆனால், அப்படிப்பட்ட 'பஞ்சபாண்டவர்' வீட்டிலே தான் இன்று இப்படிப்பட்ட விபரீதமான இழிவுச் செயல் நிகழ்ந்திருக்கிறது.

எப்படித்தான் அது நடந்திருக்கக் கூடும்—இன்னும் என் மூளையை உடைத்துக் கொள்ளுகின்றேன். ஆனாலும் புரியவேயில்லை. காவலும் கட்டுப்பாடுமோ சொல்லி முடியாது. ஆள்மாறி ஆள்மாறி ஆரும் ஒரு ஆள் வீட்டிலிருந்துகொண்டேயிருப்பார்கள். இனி, சுயமான கட்டுப்பாடுடைய கௌரவமான பெண். இப்படி மூன்றே நாலு மாதங்கள் வீட்டுக்குத்தூரம் வரவில்லையென்றால்... யார் நம்புவார்கள்?

அன்று அந்த மயக்க நிலையிலிருந்த அவளைப் பரிசோதனை செய்த டாக்டர் விஷயத்தைச் சொன்னதும் என்னைத் தூக்கிவாரிப்போட்டதுமல்லாமல் உண்மையில் திகிலடைந்தும் விட்டேன்.''

''ஏனப்படிப் பயப்பட்டீர்?''

இந்தக் கட்டத்தில் வழக்கறிஞர் குறுக்கிட்டுக் கிண்டலாகக் கேட்டார்.

''நானும் ஆண்பிள்ளைதான். அதிலும் கல்யாணமாகிய வாலிபன். ஆமாம்! வருகிற ஆடியுடன் எனக்கு முப்பது வயது முடியப்போகிறது. அருகிலுள்ள ஒரே வளவு வீட்டுக்காரன். அதிலும் அந்தப் பெண் நாளிலும் பொழுதிலும் நாங்களிருக்கும் சமயங்களில் வந்து என் மனைவியுடன் சிரித்துப் பேசி விட்டுச் செல்பவள். இப்படியெல்லாம் வந்து திரிந்த பெண் விபரீதமாக ஏதாவது பதில் சொல்லிவிட்டால்...? எப்படிப் பயப்படாமலிருக்க முடியும்? இதை நான் சொல்லித்தான் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை'' என்றேன்.

மறுபடியும் வழக்கறிஞர் குறுக்கிட்டார். கோபப்படுபவர் போல் கண்களில் கனல் தெறிக்க என்னை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார். பிறகு...

''ஆசிரியர் வெறும் பள்ளிக்கூட ஆசிரியர் மட்டுமல்ல, அவரொரு கதாசிரியருமாவார். தயவு செய்து ஆசிரியரவர்கள் கதை சொல்லாமல் கண்டதை மாத்திரம் சொன்னால் போதும்'' என்றார் ஒருவிதக் கிண்டலுடன்.

நான் தொடர்ந்து கூறினேன்:

''அந்தப் பெண்மீது—அதுதான் பொன்மலரினிடத்தில் என் மனைவிக்கு எப்போதுமே விருப்பம். ஆனால், அதை எனக்குப் பயத்தினால் அவ்வளவாக வெளிக்காட்டிக் கொள்வதில்லை என் மனைவி. ஒரு நாளைக்கு ஒரு முறையேனும் அவளும் சரி, இவளும் சரி ஒருவரை ஒரு

வர் பார்த்துப் பேசாவிட்டால் பத்தியப்பட்டுக் கொள்ள மாட்டார்களாம். அதை நானும் கண்டிப்பதில்லை. பெண் கள்தானே, பேசாமல் விட்டுவிட்டேன்.

என் பெற்ருேர்க்குப் பின்பு இரு குடும்பங்களும் ஓரளவு கசப்பு நீங்கி வழிதெருவில் ஒருவரையொருவர் கண்டால் பேசிப்பறைந்து கொள்வோம். ஆனுல் வீடுகளுக்கு மாத் திரம் பொன்மலரைத் தவிர மற்றவர்கள் வருவது மில்லை; நாங்கள் போவதுமில்லை. இப்போதிருக்கும் பகை யெல்லாம் எங்களுக்கு அவர்கள் வீட்டுடனும் அவர்களுக்கு எங்கள் வீட்டுடனும்தான்.

திடீரென்று ஒரு கிழமையாகப் பொன்மலர் எங்கள் வீட்டுப்பக்கமே வரவில்லை. அது ஏனே தெரியாது. அவள் வீட்டில் கூட அவள் நடமாட்டமோ சந்தடியோ ஒன்றுமே தெரியவில்லை. வெளிமுற்றத்திற்கே ஆளைக் காணக் கிடைக்கவில்லை. என் மனைவிக்குப் பெரும்பாடாகி விட்டது. பின்னேரங்களிலும், சனி, ஞாயிறுகளிலும் பொழுதே போகவில்லையாம்.

'அல்லது ஏதாவது சுகமில்லையோ, பாவம்! பெண்துணையில்லாத சின்னன். என்ன பாடுபடுகின்றதோ' என்றெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டே,

'எதுக்கும் ஒருக்கால் போய்ப் பார்த்தால் என்னெண்டு பார்க்கிறேன்' என்ருள்.

'சரி. போய்வா' என்றேன்.

போன வேகத்துடன் என் மனைவி திரும்பி வந்தாள்.

'என்ன சங்கதி?' என்று கேட்டேன்.

அதற்கு அவள், 'அவளங்கில்லை' என்று வெட்டொன்று துண்டு இரண்டாகப் பதில் சொல்லிவிட்டார்கள் என்ருள்.

'பொன்மலர் அங்கில்லையா? ஆச்சரியமாயிருக்குதே! சரி. இனிமேல் அந்தப் பக்கமே போகாதே!' என்றேன்.

அன்றிரவு என் மனைவி நல்ல உறக்கத்திலாழ்ந்து கொண்டிருந்தாள். அநேகமாக அயலட்டத்து ஜனங்கள் 'அடக்கத்திற்கு'ப் போய் விட்டார்கள். நான் மாத்திரம் ஏதோ ஒரு புத்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தேன். அதில் தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருந்ததால் மணியைக்கூட அப்போது கவனிக்கவில்லை. ஆனால், பன்னிரண்டுக்கு மேலிருக்கும் என்பது மாத்திரம் நினைவிருக்கிறது."

இதற்கிடையில் வழக்கறிஞர் குறுக்கிட்டு,

"அப்போது நீர் வாசிக்க வில்லை, படித்துக் கொண்டிருந்தீர். அப்படித்தானே!" என்றார்.

"ஆமாம். படிப்பதற்கும் வாசிப்பதற்கும் வெவ்வேறு அர்த்தங்கள்" என்றேன். அவ்வளவுதான் இருந்துவிட்டார்.

கோர்ட்டில் கூடியிருந்தவர்கள் சிரித்தார்கள். எதுவோ நான் பெரிய ஹாஸ்யத்தைச் சொல்லிவிட்டதாக அவர்கள் நினைப்புப் போலும். நீதிபதி அமைதிகோரி மேசை மீது தட்டினர்.

நான் தொடர்ந்தேன்:

"அப்போது பொன்னம்பலவாணர் வீட்டில் பொன்மலரின் அழுகுரல் உச்சஸ்தாயியில் அவலமாகக் கேட்டது.

'ஐயோ! என்னைக் கொல்லுறுங்கோ, ஐயோ என்ரை அம்மா...

தொடர்ந்து 'தொம்! தொம்!' என்று பனம் பழம் விழுவதுபோலச் சப்தம்... ஆண் குரல்கள் 'ஆருக்கடி? ஆருக்கடி? உள்ளதைச் சொல்லாவிட்டால் உயிரை எடுத்துப்போடுவம்!' என்ற கர்ஜனைகள்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அந்தச் சப்தத்தில் என் மனைவி வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து நின்றாள். அயலட்டையும் விழித்துக் கொண்டிருக்கும்.

என் மனைவி என்ன சங்கதி என்று கேட்பது போல் என்னைப் பார்த்துக் கொண்டே உடல் வெடவெடக்க விழிகளைப் பிதுக்கியபடி விதறிக்கொண்டிருந்தாள்.

'அவங்கள் ஆரோ பேயோட்டுறுங்கள்போலை கிடக்கு. பேசாமல் போய்ப் படுத்துக்கொள்' என்றேன்.

அழுகுரலும் அடியும் ஓயவேயில்லை.

என் மனைவி என் பக்கத்தில் நின்று இன்னும் பட படத்துக்கொண்டே நின்றாள்.

'என்னென்றுதான் பார்ப்போமே' என்று அவளும் நானுமாக வேலியால் எட்டிப் பார்த்தோம். வெளியே இருள் கம்மிக்கொண்டிருந்ததால் ஒன்றுமே தெரியவில்லை. எல்லாம் நடு வீட்டுக்குள் நடந்திருக்க வேண்டும்.

'ஒருக்கால் போய்ப் பார்த்துவிட்டு வாங்கோ...' என்று பரிதாபமாகக் கேட்டாள் என் மனைவி.

'மறுபடியும் அந்த வீட்டிற்கா? அறிவுகெட்டதனமாகப் பேசாதே!' என்றேன் அதட்டலாக.

அவள் விடவில்லை.

'ஆபத்திற்குப் பாவமில்லை' என்று சொன்னாள்.

ஆனால் பொன்மலரின் கூக்குரல் மேலும் மேலும் பன் மடங்காகி என் நெஞ்சிலும் அடி வயிற்றிலுங்கூட எதுவோ செய்வது போலிருந்தது. 'டோச் லைட்'டை எடுத்துக் கொண்டு வேலிப் பொட்டுக்குள்ளால் புகுந்துவிட்டேன்."

வழக்கறிஞர் இடைமறித்தார்.

"அகால வேளையில் அடுத்தவர் வீட்டிற்குள் புகுந்தது பெரும் குற்றமல்லவா? அதற்கு நீர் என்ன சொல்லு கின்றீர்?" என்றார்.

“ஆம்! குற்றம்தான். ஒப்புக்கொள்ளுகின்றேன். மனம் கேட்கவில்லை. ஒரு வேலிக்குள் நடக்கும் அடியை யும் அழுகுரலையும் கேட்டு மனம் வெதும்பிப் போனேன்” என்றேன்.

நீதிபதி தொடரும்படி சைகை செய்தார்.

“அப்போது நான் அங்கு போனபோது அவர்கள் என்னைக் கொஞ்சமும் எதிர் பார்த்திருக்க மாட்டார்களல் லவா? ஆத்திரத்துடன் சற்று வெலவெலத்துப் போய் விட்டார்கள்.

பொன்மலர் தூணோடு கட்டி வைக்கப்பட்டிருந்தாள். அவள் வாயிலும் மூக்கிலுமிருந்து இரத்தம் கொட்டிக் கொண்டிருந்தது. அநேகமாக நான் அங்கு போன சமயம் அவள் மூர்ச்சையாகிவிட்டிருக்க வேண்டும். கண்களைத் திறக்காமலே கழுத்து பக்கவாட்டில் சரிந்து தொங்கிற்று. இறந்து விட்டாளோ என்று கூட நினைக்க வேண்டியிருந் தது.

ஐவருமே அருமைத் தங்கையை அடித்து நொருக்கிக் கொண்டிருந்தார்கள். பொன்னம்பலவாணர், வீட்டு விருந் தையில் நிலை குலைந்தவர் போல் படுத்திருக்கக் கண்டேன்.

ஆத்திரத்தில் நின்ற ஐவரும் என் நெஞ்சில் பிடித் துத் தள்ளினார்கள். நான் வீட்டுப் படிகளிலிருந்து ‘குடைக் கடித்து’ நிலத்தில் வீழ்ந்து விட்டேன். அப்போது கல் லுக் குத்திய காயம் தான் இதோ, என் பிடரியிலிருக்கும் வடு. ஆனாலும் எனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு,

‘ஏன்ரா இந்த நேரத்தில் அந்தப் பெண்ணைப் போட்டடிக்கிறீர்கள்?... உங்களுடன் கூடிப்பிறந்த குற் றத்திற்கா?’ என்று கேட்டுவிட்டேன். உடனே அவர்கள் ஏககாலத்தில்,

‘உன்னை ஆரடா இஞ்சை கூப்பிட்டது. போடா வெளியில்’ என்று சொல்லிக் கொண்டே என்னை நெருங் கினார்கள்.

எனக்கு ஆத்திரம் அளவுக்கு மிஞ்சி விட்டது. ஆனுல் அந்த ஆத்திரம் அவர்களை ஒன்றும் செய்துவிடாது. அந்த நிலையில் கூட என் நிதானத்தை நானிழக்கவில்லை. நான் ஒரு தரம் கை நீட்டினுல் போதும், என்னைத் தட்டி நீட்டி விட்டிருப்பார்கள். ஆகையால் வேகமாக வெளி யேறி போலிஸ் ஸ்டேஷனை நோக்கி நடந்தேன்.

போலிஸார் என் வாக்கு மூலத்தைப் பதிவு செய்தவுடன் என்னையும் அதே ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள். பொன் னம்பலவாணர் வீட்டிற்குள் போலிஸ் படையுடன் மறுபடி யும் நான் புகுந்தேன்.

பொன்மலர் அறிவு நினைவற்று இரத்தக் கறைகளுடன் அப்படியே கிடந்தாள். எல்லோரையும் அள்ளிப் போட்டுக் கொண்டு போலிஸார் விரைந்தனர்.''

என் சாட்சியத்தை முடித்து விட்டு நான் சாட்சிக் கூண்டிலிருந்து இறங்கினேன்.

அமைதி குடிகொண்டிருந்த கோடு, மூச்சு விடுவது போல் மறுபடியும் இப்போதுதான் மெல்ல ஆசுவாசப் பட்டுக்கொண்டது.

தொலுக்கு முதலி, ''பொன்மலர்... பொன்மலர்...'' என்று உரத்து இருமுறை குரல் கொடுக்கிறுர். பெண் சேவகர் பின்தொடரப் பொன்மலர் கூண்டில் ஏறினுள்.

''உன் வயிற்றிலிருக்கும் குழந்தை ஆருடையது ?''

நீதிபதி பொன்மலரைப் பார்த்துக் கேட்டார்.

அவள் குனிந்ததலை நிமிரவில்லை. ஆனுல் கண்களி லிருந்து வடிந்த கண்ணீர் சாட்சிக் கூண்டிற்குள் சிறைப் பட்டுக் கொண்டிருந்ததைக் கோட்டில் கூடியிருந்த எல் லோருமே கண்டார்கள்.

''பயப்படாதே. ஆராக இருந்தாலும் சொல்...'' என்றுர் நீதிபதி, மறுபடியும்.

அவள் " ஓ " என்று கோடே அதிரும்படியாகப் பயங் கரமாகக் குரலெழுப்பிக் கத்தினுள்.

நீதிபதி நிலைமையை அவளுக்கு இன்னும் சிறிது விளக்கிச் சொன்னுர். நீண்ட நேர விம்மலுக்குப் பின் அவள் சொன்னுள்:

" அப்புவைக் கேளுங்கள் "

பொன்னம்பலவாணரின் தலை குனிந்து இறங்கிவிட் டது. கோட்டில் கூடியிருந்த ஜனங்களின் பார்வை அவரை மொய்க்கின்றன.

---

# சுவீப்

தந்தியைப் பரபரப்புடன் உடைத்துப் பார்த்த புறக்ரர் பாலசிங்கத்தார் திகைத்துப் போய் வெகுநேரம் வரை அப்படியே நின்று விட்டார்.

அதிலிருந்த வாசகம் ...

"பாலனுக்கு ஓர் இலட்சத்து அறுபதினுயிரம் ரூபா 'காலி ஜிம்கான சுவீப்' விழுந்திருக்கிறது" என்பது. அதாவது புறக்ரர் பாலசிங்கத்தார் வீட்டு வேலைக்காரப் பையன் பாலனுக்கு அடித்து விட்டது 'காலி ஜிம்கான சுவீப்'.

எக்கச் சக்கமான ரொக்கம். ரூபா ஒன்று இரண்டா? ஒரு இலட்சத்து அறுபதினுயிரத்துச் சொச்சமல்லவா ?

அதிர்ஷ்டக்காரப் பயல்தான் !

ஆனுல் பாலன், இந்தச் சந்தோஷ அதிர்ச்சியைத் தாங்குவானே, என்னவோ ? பத்து ரூபாய்த் தொகையின் நாமத்தைத் தவிர வேறு தொகையின் உச்சரிப்பையே கேட்டிருக்காத பாலன்... என்ன ஆவானே !

அதனுல்தான் பாலசிங்கத்தார் இன்னும் விஷயத்தைச் சொல்லவில்லைப்போலும். எப்படி அந்தச் சின்ன இதயம் இந்தப் பெரிய சந்தோஷத்தைத் தாங்க முடியும் என்று நினைத்திருப்பார்.

அவரைப் பொறுத்த வரையில் இது ஓர் அற்ப விஷயம்.

அவரென்ன அவ்வளவு சாதாரண பிரகிருதியா, இந்த அதிர்ச்சி தாழமாட்டாமல் 'ஆ!' என்று வாயைப் பிளந்தபடி உயிரை விடுவதற்கு? அது பாலனைப் போன்ற பரம தரித்திரங்களுக்கு நிகழ்ந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

என்றுலும் அவருக்கும் சிறு அதிர்ச்சி ஏற்படாமலில்லை. அதிலிருந்து அவர் விடுபட வெகு நேரம் பிடித்தது. விரித்த தந்திக் கடுதாசியை இன்னமும் அவர் முகத்திற்கு நேராகவே கைகள் பிடித்த வண்ணமிருந்தன. சிரித்தபடி சலனமற்று இருந்த அந்தக் கடுதாசியில் அவர் வாயிலிருந்து சுரந்து வடிந்த உமிழ்நீர் சிந்தி அவரை விழிப்படையச் செய்தது. திடீரென்று அவரை அறியாமலே அப்படி நிகழ்ந்து விட்ட அக்கௌரவக் குறைவான செயலை நினைத்த போது வெளியுலகத்து உணர்வு வெட்கத்தை உண்டாக்கவே அருகில் யாரும் நிற்கிருர்களோ என்றெரு நோட்டம் விட்டார்.

நல்ல வேளையாக யாரும் அங்கில்லை. அந்த அளவில் மனத்திற்குப் பெரிய நிம்மதி. அவசரமாக வாயில் எஞ்சியிருந்த வீணத்தையும் 'மடக்'கென்று விழுங்கிக்கொண்டார்.

தந்தியை வெகு நிதானத்துடன் மடித்துக்கொண்டிருந்த அவருக்குத் திடீரென்று ஓர் ஐயுறவு. 'அப்படித் தாஞ' என்பதை உறுதிப்படுத்துவதற்காக, மறுபடியும் அத் தந்திக்கடுதாசியை அவசரமாக மடிப்பைக் குலைத்துப் படிக்கலானுர்.

சந்தேகமேயில்லை. அப்படித்தான்.

ஓர் இலட்சத்து அறுபதினுயிரமும் சொச்சமும். பால னுக்குத்தான் விழுந்திருக்கிறது!

'லக்கி போய்' என்று நினைத்த பாலசிங்கத்தாருக்குத் திடீரென்று தகப்பன் சொன்ன கதையொன்று ஞாபகத் திற்கு வந்தது.

"புங்கங்குளத்து வைரவ கோவிலடியில் ஒரு நாளும் ஏமசாமத்திலை மாடுகளை அவிழ்த்துக் கட்டாதை; அதிலை ஒரு பொல்லாத வயிரவர் இருக்கு. சாமம் ஆகும்போது 'இந்தாபிடி, இந்தாபிடி' என்றொரு குரல் கெதியாக நெருங்கி வரும். ஆச்சிப்பிள்ளையின்ரை கிட்டிணன் வண் டில் மாட்டை விட்டிட்டு ஓடிப்போய் பயத்தில் செத்தது உப்பிடித்தானே!" என்று கிடுகு வியாபாரியாயிருந்த பாலசிங்கத்தாரின் தகப்பனுருக்குச் சொல்லியிருந்தார்க ளாம். அந்தக் காலத்தில் 'விறைச்சவன்' என்று பெயர் எடுத்த அவர் எதற்கும் பயப்படாத மனிதன்.

ஒரு நாள், அவர் தனித்துப் போய்விட்டார். மாடு களுக்கும் நல்ல களை. இரவு நடுச்சாமவேளை. கும்மென்ற இருட்டு. 'வாறது வரட்டும்; கொஞ்சநேரம் இதிலை தங்கி விட்டுப் போவம்' என்று நினைத்து மாடுகளை ஆறக் கட்டிவிட்டு வண்டிலுக்குள் சரிந்தாற்போல அயர்ந்து போய்விட்டார். இருளைப் பதுக்கிவைத்த உயர்ந்த மரச் சோலையிலிருந்து அந்தச் சப்தம் வலு வேகமாக வந்ததாம். மாடுகள் வெருண்டடித்துத் துள்ளின. 'இந்தாபிடி, இந்தாபிடி' என்ற குரல் வண்டில் தட்டிக்கு வெகு சமீபமாகக் கேட்கவே, எதற்கும் துணிந்த பாலசிங்கத் தாரின் தகப்பனுர் 'எங்கே, இஞ்சை கொண்டா' என்று கரங்களை நீட்டினுராம். அவ்வளவு தான். அந்த நீட்டிய கரங்ளிலே... என்னத்தைச் சொல்லுவது? 'உண்ணுணை, நம்பினு நம்புங்கோ, நம்பாட்டிப் போங்கோ' என்று அவர் சொல்லும்போது பார்க்க வேண்டுமே! 'பென்னம் பெரிய' சருவக் குடமொன்று 'பொத்'தென்று கைகளில் வைக்கப்

பட்டதாம். ஆச்சரியம் தாங்கமாட்டாமல் அதற்குள் பார்த்த போது, பொன்னும், வெள்ளியும் இன்னும், விலைமதிக்க முடியாத ஏராளமான வேறு பல பொருட்களும் கண்ணைப் பறித்தனவாம்!

தகப்பனார் சொன்ன கதையை நினைத்துப்பார்த்த பாலசிங்கத்தாருக்கு ஓர் உண்மை புலப்பட்டது. அது' 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிய்த்தோ, வேலியைப் பிடுங்கிப் போட்டோ கொடுக்கும்' என்பது. இந்த நினைவினால் ஆனந்த பாஷ்பம் பொங்கச் சிரித்தார்.

அச்சிரிப்பில் முதுமை கோடு கட்டி நின்ற அவர் முகச் சுருக்கங்கள் இன்னும் பன்மடங்காகி, மடிப்புக்களைக் கூட்டிவிட, அதற்குள் சிரிப்பின் தூவல் ஒளித்து விளையாடிற்று.

'என்ன இன்பகரமான நாளிது! எப்பவுமே இப்படி இருக்கப் படாதா? இன்று காலமை என்னை ஆரெழுப்பினது... ஓ...மோம்! மறந்துபோய்விட்டேன். அவன் தான் பாலன்! கோப்பிக் கிளாசோடையெல்லே வந்து நிண்டு என்னை எழுப்பினவன்... எனிமேல் எப்பவுமே அவனைக் கொண்டுதான் என்னை எழுப்புவிக்க வேணும். நல்ல முழுவியளம்!' என்று நினைத்துக்கொண்டவர், இடுப்புச் சாரத்திற்குள் சுருட்டிச் செருகி வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்தார். ஆள்காட்டி விரலும், நடுவிரலும் சேர்ந்து சாக்காட்டு நிலையில் திருகி நசுக்கிக் கொண்டிருந்த புகையிலைச் சுருட்டின் நசிந்த பகுதியை விரல்களால் நீவி, பிரிந்திருந்த குழந்தையைப் பேரவாவுடன் தடவிக் கொடுக்கும் தாயின் பரிவு காட்டினார். அதுகூட அவருக்குப் பத்தியப்படவில்லை. ஆகவே அச்சுருட்டை வாயில் வைத்து அலாதியாக அடிதலைமாறிச் சூப்பினார். தொடர்ந்து, திருஷ்டித்துப்பல் புலி உறுமலுடன் வெளி வந்தது. கிணற்றைக் கலக்கி இறைத்துச் சாம்பிராணிப் புகை காட்டிய மனத்திருப்தி.

சுருட்டை வாயில் பொருத்திப் பற்றவைத்தார். சுகா னுபவம் காட்டும் புகை அவர் நரம்புகளுக்குப் புத்துணர்ச்சி அளித்திருக்க வேண்டும். ஆலவிருட்சமாகக் காட்சி தந்த அப்புகைக் கும்பல் கைதேர்ந்த சைத்திரிகனின் கலைப்பார் வைக்கே அகப்படாத அற்புதக் காட்சி. அதை இரசித்து அனுபவித்த பாவனையுடன், இன்னொரு 'தம்'மை உறிஞ்சி இழுத்து இளவட்டக் காலத்து நினைப்பொன்றின் உந்து தலினால் புகை வட்டங்களை இலையுதிர் காலத்துச் சருகெனப் பறக்கவிட்டார்.

முற்றத்துப் பந்தர் மல்லிகையின் சுகந்த வாசம் அவ ருடைய மனைவியின் மங்கைப் பருவத்து நினைப்பைத் தூண் டிற்று. இப்போதும் ஒருக்கால் சந்தோஷமாய் இருக்க லாந்தான்; ஆனால் அதற்குத்தான் பிள்ளைகுட்டிகளும், வேலைக்காரனும் சனியனாகக் குறுக்கே நிற்கிறார்களே! அதனால் அவருக்கு வேறெதுவும் செய்யத் தோன்றவில்லை. இந்தப் பெரிய சந்தோஷத்தை எப்படி அனுபவிப்பதென் பதே அவருக்கு இப்போதுள்ள பெரும் பிரச்சனையாகி விட்டது.

என்ன செய்வது?

மனம் குரங்காக அலைக்கழிய 'போய்' என்று ஓங்கிக் குரல் கொடுத்தார்.

'போய்!'

குரல் அறுந்து துண்டிக்கப்பட்ட வேகத்துடன் துப் பாக்கிச் சன்னமாகப் புறப்பட்டு சமையல் அறையிலிருந்த பாலனின் காதைக் கிழித்தது.

"ஐயா"

அலறிப் புடைத்துக்கொண்டு அரவம் கேட்ட குழி முயலாகப் புறப்பட்டான் பாலன்.

வழக்கத்தில் கனல் தெறிக்கும் அந்தக் கண்களில் இன்று புதுமையாக ஊற்றெடுத்து நிற்கும் கருணையின்

மகிமைதான் என்னவோ? 'ஏதோ பிழை கண்டுபிடித்து அதற்குத் தண்டனை தரும் பொருட்டுத்தான் தன்னைக் கூவி அழைத்தாரோ என்ற ஐயப்பாட்டில் பதகளித்துக்கொண்டு நின்ற பாலனுக்கு பாலசிங்க ஐயாவின் புதுமையான, தாயன்புப் பாசத்துடன் கூடிய பார்வை ஒருவகைத் தெம்பைக் கொடுத்தது.

"யூ ஆர் வெறி லக்கி பாலா... ஓ! மை புவர் போய்"— அன்பில் தோய்ந்த ஆங்கில வார்த்தைகள் துண்டம் துண்டமாக அவர் தொண்டைக்குள்ளிருந்து அறுந்து விழுந்தன. அதன் அர்த்தம் படிப்பறிவற்ற பாலனின் சிறிய மூளைக்குள் புகுந்து விளங்கி இருக்க நியாயமில்லை. பாஷை விளங்காமையினால் ஏற்பட்ட பயத்தின் சாயல் முகத்திற் தோன்றி வியர்வைத் துளிகளைத் தோற்றுவித்தன.

"போய், உனக்கு எத்தனை அக்காமார்?" என்று கேட்டார்.

"எட்டுப் பேர் ஐயா" என்று சொல்லி நிறுத்தினான் பாலன்.

"எட்டுப் பேரா!" என்று ஆச்சரியம் மேலிடக் கேட்ட பாலசிங்கத்தார் தனக்குள்ளாக, 'ஒருவன் கெட்டுப்போறதுக்கு ஒரு பெட்டையே போதுமே!' என்று நினைத்துக் கொண்டவர், இதழ்க்கோடிவரை வந்த சிரிப்பை இழுத்து மறைத்து விழுங்கிக்கொண்டார். கடைசியாக முகத்தைச் சுழித்தபாணியில், அந்த எட்டுப் பெட்டைக் குட்டிகளில் ஏதோ ஒருவகை அருவருப்பு மேலிட்டிருக்க வேண்டும்.

"சரி, சரி. அந்தப் போத்தலையும் கிளாசையும் கொண்டுவா" என்று பணித்தார்.

வெள்ளைப் போத்தலும் கிளாசுமாக வீட்டு அறையிலிருந்து மீண்ட பாலனை, வைத்து விட்டுப் போகும்படி சைகை காட்டினார்.

போத்தலும் கிளாசும் பரஸ்பரம் மோதிக்கொள்ளும் ஒலி.

எதற்கும் சுழற்றிப் பேசும் எலும்பற்ற நாக்கின் அழுக்குத் தன்மை கழுவப்பட்டு 'விர் விர்' எனக் கொடுப்புப் பகுதியெல்லாம்கூட விறைப்புப் புரையோடுகிறது. இன்னும் இரண்டு 'டிராம்' உட்சென்றுவிட்டால் கொன்னைக்குப் பஞ்சமேது ?

'ஈசிச்செயரி'ல் கைகளை எறிந்து படுத்திருந்தவர், கால்களையும் தூக்கி எதிரேயிருந்த 'ரீபோயில்' பரப்பிப் போட்டுக்கொண்டார். ஒரேயடியாகக் கால்கள் கிழிந்து விடாதவண்ணம் சாரம் பாதுகாத்தது. தேகம் வான் பறவையின் சுகானுபவம் காட்டிற்று. திவ்விய புருஷர் பாலசிங்கத்தார் தன்னை மறந்த நிலையில் பேசுகிறார்.

"மை... லக்கி போய்..."

வேலைகளை முடித்துவிட்டு வீட்டிற்குள் எதுவோ வேலையாக வந்த பாலன், பாலசிங்கத்தாரின் பிதற்றலைக் கேட்டு ஓடிவருமளவுக்குக் காது நல்ல கூர்மை.

"ஐயா, கூப்பிட்டீங்களா ?"—விசுவாசமுள்ள அந்த வேலைகாரப் பையன், அவர் எதிரே வந்து நின்றான்.

"ஆரடா, அது ! பாலனு ? பாலா, உனக்குச் சுவீப் விழுந்திருக்கடா. யூ ஆர் லக்கி போய்... வண் லாக் அன் சிக்ஸ்ரி பைவ் தவுசன் ஓட்..." என்றவர் சாய்மனைக் கதிரையின் பக்கவாட்டில் செத்த சவமாகத் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டார். கண்கள் மூடிக்கிடந்தன.

பாவம் பலான். தலையைச் சொறிந்து கொண்டே நின்றான். அந்தப் பால் வடியும் முகத்தில், அவன் சிரித்த அசட்டுச் சிரிப்பு அணைந்து கொண்டிருக்கும் விளக்கின் சாயல் காட்டிற்று.

ஒன்றும் புரியாத நிலையில் இன்னமும் அங்கேயே நின்று கொண்டிருந்த பாலனின் பார்வை ஐயாவின் வாயில் ஊர்ந்து திரியும் இலையானிலேயே நிலைத்திருந்தது.

கைகளைத் தூக்கி அவ்விலையானைத் துரத்துவதற்குத் திராணி அற்ற நிலையில் கிடந்த பாலசிங்கத்தார், வலிப்புக் காட்டிச் சுழித்து அதை ஓட்ட நினைத்தார் போலும்! அந்த அருவருக்கக் கூடிய செய்கையை—அது பாலனுக்கு விளையாட்டு—அதை மிகவும் விரும்பி ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்த பாலன் வெகு நேரத்தின் பின்பு அவ்விடத்தை விட்டு அகன்றான்.

செத்த நிலையில் கிடந்த பாலசிங்கத்தார், உண்மையில் செத்துத்தான் போய் விட்டாரா? செத்த சவத்திலொன்றாக வேட்டித் துணிபோன இடமே தெரியாமல் கிடக்கும் அந்த மனிதரிடத்தில் என்ன சொல்ல வேண்டியிருக்கிறது என்று நினைத்திருப்பான் போலும்.

புன்னாலைக் கட்டுவனைப் பிறப்பிடமாகக் கொண்ட புறக்ரர் பாலசிங்கத்தாருக்கு வாழ்க்கையில் என்ன குறை? அவர் தொட்டம் தொட்டமாக வளவுகள் வாங்கிக் கட்டிவிட்டிருக்கும் ஆறேழு மெத்தை வீடுகள் சொல்லுமே அதற்குச் சாட்சி!

சொந்த ஊரிலும் நகரத்திலும் பல வீடுகளுண்டு. பிள்ளைகளின் எண்ணிக்கை அவ்வளவாக ஒன்றும் அளவு கடந்து போய்விடவில்லை. அதெல்லாம் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்தான் நடந்திருக்கிறது. ஆணும் பெண்ணுமாக ஆக மொத்தம் மூன்று. 'பறுகின கோழிப் பேடாக' இன்னமும் இளமை வனப்புக் காட்டும் குமரித் தன்மை அழியாது பொங்கிப் புடைத்து நிற்கும் கொங்கைகளையுடைய அழகிய மனைவி. அல்சேஷன் நாய்கள் இரண்டு. ஆக இவர்கள் எல்லோருக்கும் பொதுவில் பாலன்தான் அந்த வீட்டு வேலைக்காரன்.

என்ன இருந்துமென்ன? பாலசிங்கத்தாரின் ஆசையின் மீசை நரைத்து விடவில்லை. ஆசைக்குத்தான் ஒரு போதும் மீசை நரைப்பதில்லையே! பாலசிங்கத்தாரின் தொழில் முறையால் வரும் வருவாய், பனையிலுள்ள தென்

னந்தோட்ட வருவாய், கொழும்பிலுள்ள கம்பெனியொன் றின் பங்கு லாபம், யாழ்ப்பாணத்திலுள்ள வீடுகளின் வாடகையோடு, பால் மாடுகளும், ஊர்க் காணிகளும் தரும் பலன் வேருக உண்டு.

இருந்தும் அதிர்ஷ்ட லாபத் துண்டுகளிலும், அரசாங் கம் நடாத்தும் சுவீப் ரிக்கற்களிலும்கூட அவருக்கு ஆசை. 'சனியன் ஒருக்கால் எண்டாலும் விழாதாமே!' என்று பத்திரிகைகளில் நம்பர் வரும்போது பாலசிங்கத்தார் கொதித்தெழுவதைப் பார்க்கவேண்டுமே!

எத்தனை தடைவைகள்தான் வாங்கித் தோற்பது? விட்டு விடவும் மனம் வருவதில்லை. ரிக்கற்றுக்கள் வரும் தவணைகளில் நம்பிக்கை என்ற பயிர் நன்ருகச் செழித்து மதர்த்து நெஞ்சில் துளிர்விடும். 'இந்தத் தரம் கட்டாயம் அடிக்கும்' என்றுதான் வாங்குவார். ஆனல் இவ்வளவு காலமும் அதிர்ஷ்டம் படுபட்சியாகி அவரைக் காலை வாரிக் கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை வரும் காலி ஜிம்கான சுவீப்பில் அவர் கவனத்தை வெகுவாகச் செலுத்தினர்.

முதலில் தெய்வங்களின் பெயரில் கற்பூரம் கொளுத்து வதாக நேர்த்தி வைத்து எடுத்துப்பார்த்தார். அந்த வரிசை யில் கடைசியாக இடம் பெற்ற முற்றவெளி முனியப்பரும், யாழ்ப்பாணக் கோட்டைக்குள் ஒளித்துக் கொண்டு விட்ட தாகவே பட்டது அவருக்கு.

அடுத்துவந்த ரிக்கற்றுக்களைத் தம்மிடமுள்ள அல் சேஷன் நாய்களின் பெயரில் எடுத்தார். என்ன துர திர்ஷ்டம் பிடித்த நாய்கள்! அந்த நாய் ஒன்றுக்கு எஜமான் ஆத்திரத்துடன் எட்டி உதைத்துக் கொண்டார்.

'எனி ஆற்றை பேருக்கு எடுப்பது?'

அடுத்த 'ரிக்கற்'றைக் கையில் வைத்திருந்த ஏஜென்ட் பாலசிங்கத்தாரை அவசரப்படுத்தினன்.

'பாலனின் பெயருக்கா? சை! நாய்களிலும் கடை கெட்ட அவனுக்கா அதிர்ஷ்டமிருக்கப் போகிறது?

ஒருக்கால் விழுந்து விட்டால் ...? மனதில் சபலம். நினைவுகள் சமநிலைப்படுவதற்கு வெகு நேரம் போராட வேண்டியிருந்தது.

'சரி, ஒரு தரம் 'ற்றை' பண்ணிப் பார்ப்போம்' என்று நினைத்தவருக்கு ஒரு சிறு நம்பிக்கைப் பொறி. தோல்வி என்றால் அவனுக்குக் கொடுக்கும் பத்து ரூபாய்ச் சம்பளத்தில் பிடித்துக்கொண்டு கொடுக்கலாம். விழுந்தால்...... அதற்கு மறுமொழியை அவர் அப்போது தயார்படுத்தவில்லை.

ரிக்கற்றை எடுத்த பின்னும் அவருடைய தீர்க்காலோசனையின்படி மூர்க்கத்தனமாக விழாதென்றே முடிவு கட்டினார். அதனால் அந்தச் சங்கதியை முற்றாக மறக்க முயற்சி செய்துகொண்டிருக்கும் போது—மூன்று மாதங்கள் ஆகிவிட்டன—இன்று காலையில் அந்தத் தந்தி வந்தது .....

பாலசிங்கத்தார் வெறி முறிந்தெழுந்துதான் விஷயத்தை விளக்கிச் சொல்லப் போகின்றார் போலும்!

அன்று சாயங்காலம் நாலு மணிக்கு 'கலை'யை முற்றாக அகற்றிவிட்ட பாலசிங்கத்தார், வெகு நிதானமாக எழுந்தார். குடலுள் புகைந்து எரிந்த நெருப்பை அணைக்க இரண்டு கிளாஸ் தண்ணீரை 'மடக். மடக்' கென்று குடித்தார். அபரிமிதமாக நாறிய வாய் நாற்றத்தைப் போக்கடிக்க நினைத்த அவருக்கு ஒரு வாய் வெற்றிலை போட்டுக் கொண்டால் தேவையில்லையென்று படுகிறது.

தலை சற்று அமுக்கமாக இருந்த போதிலும், உடல் மட்டும் மிகவும் இலேசாக, காற்றில் பறந்து செல்லும் கடுதாசிப் பட்டமாக சுகானுபவம் காட்டுகிறது. வெற்றிலை போட்ட உற்சாகம். உள்ளம் ரப்பர் பந்தாக எஃறிக் குதிக்கின்றது. மனதில் என்ன நினைத்துக் கொண்டாரோ தெரியாது, பாலனுக்குக் குரல் கொடுத்தார்.

"பாலன். 'டடி' கூப்பிடுது" கிணற்றடிப் பக்கத்திற்குப் பாலனை நோக்கி 'மெசேச்'சை 'பாஸ்' பண்ணினாள் பாலசிங்கத்தாரின் மகள்.

"ஐயா!" என்றபடி தலையைச் சொறிந்தான், எதிரில் நின்ற பாலன்.

"ஆர், பாலனா? .. ஏன்ரா, உங்கை என்ன படமடா நல்லதாய் ஓடுது?" என்று கேட்டார் பாலசிங்கத்தார்.

பாலன், பாலசிங்கத்தாரிடம் வேலைக்காரனாகச் சீல் குத்திக்கொண்டு வந்து மூன்று வருஷங்களாகின்றன. அவனுடைய பதின்மூன்று வயதே, தன் வீட்டுச் சோற்றுப் பருக்கையைத் தின்றதால்தான் ஆனது என்றுகூட நினைத்திருப்பார் பாலசிங்கத்தார். இந்த மூன்று வருஷ காலத்திலும் இப்படியொரு கேள்வியை அவனைப் பார்த்துக் கேட்டறியாத அவரைச் சற்று சந்தேகத்துடன், ஆனால் ஆச்சரியம் தேங்கிய விழிகளால் ஒரு முறை பார்த்துக் கொண்டான்.

பாலசிங்கத்தார் திடுதிப்பென்று இப்படிக் கேட்டதால் பாலன் ஆச்சரியப்படாமல் இருக்க முடியுமா? சந்தேகத்தையும், சந்தோஷத்தையும் அவன் முகம் சரிசமமாகப் பங்கிட்டுக் காட்டியது.

"வெலிங்டனிலே இரத்தக் கண்ணீர், மனோகராவிலே மாய உலகம், வின்ஸரிலே நல்ல தீர்ப்பு, இராணியிலே பணக்காரன் ஆசை...... எல்லாப் படமும் ஓடுது ஐயா" என்று விறுவிறென்று ஒப்புவித்தான் பாலன்.

"அம்மாவைக் கேட்டாயாடா, படத்துக்குப் போகப் போறனெண்டு?" என்று கேட்டார் பாலசிங்கத்தார்.

மூன்று மாதத்திற்கு முந்தி ஒருநாள் கேட்ட ஞாபகம்! பாலன் இப்போது அதை ஞாபகப்படுத்திக்கொண்டான். சிவாஜி கணேசன் நடித்த நல்ல படமென்று பாலசிங்கத்தாரின் மக்கள் பார்த்து வந்து சொன்னதால் ஏற்பட்ட ஆசை. ஆனால் அவன் பார்க்கவில்லை. படம் போய் பதி

ஊந்து நாட்களாகிவிட்டன. பாலனின் 'கேஸ்' இப்போது தான் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது

இந்தத் தடவை வெற்றி நிச்சயம்தான். பிரக்கிராசியார் பிரதிவாதிக்காக ஏற்பட்டு வாதாடுவதென்றால்......

குழைந்து நிற்கும் பாலனை என்றுமில்லாதபடி வெகு குளிர்மையோடு பார்த்தார் பாலசிங்கத்தார். பின்பு 'பேர்ஸை' எடுத்து அதற்குள் அடுக்கி வைத்திருந்த காசுத் தாள்களில் அழைந்து விளையாடி ஒரு ஐந்து ரூபாய் நோட்டை உருவி வெளியே எடுத்தார். பாலன் அதையே இமைக்காமல் பார்த்தபடி நின்றான்.

"இந்தாடா, பார்த்துவிட்டுச் சீக்கிரம் ஓடி வா" என்று கொண்டே ஐந்து ரூபாய் நோட்டை அவன் கையில் கொடுத்தார்.

ஆச்சரியத்துக்குமேல் ஆச்சரியம் பாலனுக்கு. காசைக் கையில் வாங்கிக்கொண்டவன் நாக்குழற "அஞ்சு ரூபா...", என்று ஏதோ சொல்ல முனைந்தான்.

அதை இடை மறித்து "உனக்கிண்டைக்குச் சுவீப் விழுந்திருக்கெண்டு நினைத்துக்கொள். மிச்சத்தில் உனக்கொரு சாரமும் உதிலை வாங்கிக்கொள். சரி, சரி, போட்டுச் சீக்கிரமா ஓடி வாடா" என்று துரிதப்படுத்தினார், புறக்ரர்.

ஒருகணம் ஒன்றும் புரியவில்லை மறுகணம் மயக்கம். ஏன் அப்படி? பாலன் எல்லா நினைவுகளையும் சமநிலைப் படுத்தி, கரவாக நினைக்காமல், சந்தோஷத்திற்கு முதலிடம் கொடுத்தான்.

இதோ—

அரைக் கைபெனியனும், சிவப்புக் கோடுகள் போட்ட 'பைஜாமா' சாரமுமாக, புறப்பட்டுப்போகும் பாலனின் பின்னே......

அவன் பின்னே 'ரைகரு'ம் 'பப்பி'யும் ஓடிவருகின்றன.

பாலனின் கடுகதி நடை தடைப்பட்டது. அவைகளைத் தடவிக் கொடுத்த பாலனின் உற்சாகம் கரைபுரண்டுவர, "டோய் 'ரைகர்', 'பப்பி'... வாறியளா படத்துக்கு?...... எனக்கிண்டைக்குச் சுவீப் விழுந்திருக்கடா..." என்ருன் வெகு ஆதங்கமாக.

உண்மைதான். கிடைத்த ஒரு சிறிய அளவிலும் பகிர்ந்துண்டு வாழ நினைக்கும் அந்தச் சிறியவனுக்கு இந்த ஐந்து ரூபாவை விடவா இனியும் சுவீப் விழப் போகின்றது?

# அன்றில் அன்றேல்?

வழக்கத்திற்கு மாருக, அன்று நேரத்துடன் 'கொண்வென்'டை நோக்கி வந்து கொண்டிருந்தாள் மகேஸ்வரி. திகில் மூட்டமிட்ட முகம். இனந் தெரியாத பதற்றம் உந்தும் வேகத்தில் ஒரு வீச்சு நடை. பனி போர்த்திய சீதளப் போர்வையை ஊடறுத்து விழும் இளங் கதிரில், அவள் நடக்கும் அழகு உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்த வல்லது.

வெள்ளை வெளேரென்ற கள்ளிப்பால் நிறத்தில் தூய்மை சிந்தும் 'யூனிபோம்'. அதன் விளிம்பு தசைப் பிரதேசங்களை மறைத்து, முழங்கால் ஜோடியுடன் இரகசியம் பேசுகின்றது. கணுக்காலுக்கு மேல், ஒரு பிடி பிரதேசத்தை மறைக்கும் கால் 'மேஸ்'. வெள்ளை நிற 'வெஜிஸ்' ஜோடி. குத்திச்சொருகி இழுத்து இரத்தஞ் சிந்தும் 'கிறிஸ்' கத்தியின் சாயலில் அவள் நெஞ்சை நேர்பாதியாகப் பிளந்து காட்டும் சிவப்பு 'டை'.

சூரிய காந்தி வட்டில், ஊர்ந்தேறும் கருநாகம் போன்ற பின்னல். பச்சைக் குழந்தையை ஏந்தும் வாக்கில், ஒரு கட்டுப் புத்தகங்களை அணைத்திருக்கிருள். அவளுடைய குருத்துக் கரங்களுக்கு அவை தூக்கமுடியாத சுமையாகவே தோன்றுகின்றன. இதனுல், அவள் அடிக்கொரு தடவை புத்தகங்களை இடைச் சரிவில் வைத்துச் சிரமந் தணித்துக் கொள்ளுகிருள்.

கூப்பிடு தூரத்தில் 'கொண்வென்ட்' தவமியற்று கின்றது. ஆனுல், அதற்கிடையில் வீதி பிளந்து தன்னை விழுங்குவதான பயப்பிரமை அவளைக் கப்பிக் கொள்ளு கின்றது. இரவு முழுவதும் படுக்கையை நெருஞ்சிக் காடாக மாற்றிய அந்தப் பயங்கரக் கனவு பலித்து விட்டதா ?

வீதியோரமாக இருக்கும் பரமானந்தத்தின் வீட்டில் பறைமேளம் கேட்கிறது. அமங்கலத்தை மறைக்க முடியாது, பரிதாபமாகத் தொங்கும் தென்னங் குருத்துத் தோரணங்கள். 'கேற்'றின் இரு மருங்கும் காய்க் குலைகளை நீட்டி நிற்கும் வாழை மரங்கள் .. உள்ளே, விருந்தைக்கு வெளியே, பரவிக்கிடந்த ஏராளமான கதிரைகளில் சுடலை ஞானத்திற் சிரசுகளைத் தொங்கவிட்ட ஆண்கள் கூட்டம். உள்ளே இருந்து வரும் பெண்களின் ஒப்பாரி அலறல், சாவீட்டுக் கோலத்தை நிறைவு படுத்துகின்றது.

பெண்ணின் லஜ்ஜை கழன்ற அவதி மகேஸ்வரிக்கு. ஒதுக்குப் புறமான இடத்தில், மா மரத்தின் கீழ் பல்லக் குப் பாடைக்கு ஜோடனை வேலைகள் நடைபெறுகின்றன.

'அப்படியும் நடந்திருக்குமா ? கனவுகள் அப்படியே பலிப்பதுண்டா ?' இக்கேள்விகள் உள்ளத்தைக் குடை கின்றன. 'பலித்திருக்க முடியாது; பலித்திருக்கக் கூடாது' என்ற எண்ணங்களை வளர்த்து, வீதியில் வேரூன்றி விட்ட கால்களைப் பெயர்த்தெடுத்து நடக்கத் தொடங்கு கின்ருள். அவளுடைய தாய் அடிக்கடி சொல்லும் வார்த்தை கள் மனத்திரையில் ஊர்ந்து ஆறுதலளிக்கின்றன.

'அப்பிடி இல்லைப் பிள்ளை. கனவிலை ஒரு காரியம் ஓர் ஆளுக்கு நடந்தால், அது அந்த ஆளுக்குப் பலிக் காது. அந்த அயலட்டையிலைதான் ஆருக்கேன் பலிக்கும்... ஓர் ஆளுக்குத் துக்குறியாக ஏதாவது கனவு கண்டா, சீக்கிரம் அந்த ஆளுக்கு சந்தோஷமான காரியம் ஓண்டு நடக்கும்.' வெற்றிலையிற் பழுத்த அம்மாவின் உதடுகள் அவளுடைய செவிகளுக்குள் ஓதுகின்றன. இந்த வார்த்தை கள் ஒலித்து, மடிந்து, மீண்டும் பூதாகரமாக ஒலிக்கின் றன.

ஏகாந்தப் பொழில், பால் சிந்தும் நிலவிற் குளித்து மகிழ்கின்றது. மல்லிகைப் பந்தல். அதன் பூக்கள் சொரிந்து இயற்கையிற் சமைந்த மெத்தை. நறுமணமும், சீதளமும் உடலிலே இதம் ஊட்டுகின்றன. மகேஸ்வரி யைப் பரமானந்தன் அள்ளி அணைத்து... அந்த அணைப் பிலேதான் எத்தனை கோடி இன்பம்? இன்பத்திற்கு உடல் கொடுத்து, செயல் இழந்து, விழிமூடிக் கிடக்க, 'ஐயோ' என்ற பயங்கர அலறல் அவள் மூச்சைத் திணறடிக்கின்றது. கன்னங்கரிய உருவம். அந்த உருவம் வயிரவராகவோ, நரசிம்மராகவோ இருக்கலாம். பரமானந்தனைக் குத்திப் பிளந்து, நெஞ்சிற் கசிந்தோடும் இரத்தத்தைப் பச்சை யாகவே ருசி பார்க்கின்றது. அவளைக் கண்ட அந்த உரு வம் இரத்தம் வழிந்தோடும் உதடுகளைக் குரூர கோணத் திற் குவித்துப் பயங்கரமாகச் சிரிக்கிறது—அந்தச் சிரிப்பே அவளுடைய உயிரை உறிஞ்சுகின்றது .. இதயக் குலை பிடுங் கப்பட்ட வேதனையுடன் 'ஐயா, அம்மா' என்று அலறிக் கொண்டே பக்கத்திற் படுத்திருந்த தாயைக் கட்டிப் பிடித் துக் கொள்ளுகின்றாள். கண் விழித்த தாய், 'சீ மூதேசி... ஏதோ எச்சில் பேயின்ரை சேட்டை. தூ... தூ... தூ..' என்று துப்பிவிட்டு, மகளின் நெற்றியையும் நாக்கால் எச்சிற்படுத்திப் படுக்க வைக்கிறாள். பின்னர் குலைந்த தூக்கத்தை அவள் தொடருகிறாள். ஆனால், மகேஸ்வரிக் குப் படுக்கை சிதையின் தீப்படுக்கையாக மாறிவிட்டது. அந்தப் பயங்கரக் கனவையுந் தோற்கடிக்கும் ஆயிரம்

பயங்கர நினைவுகள். அந்தப் பயங்கர நினைவுகளை உருட்டிப் பொழுது புலர, வேறு நினைவுகளற்றவளாக 'கொண்வென்'டிற்குப் புறப்பட்டுவிட்டாள்.

பின்னால் இரைத்த காரின் 'ஹோண்' சப்தம் மகேஸ்வரிக்குச் சுய பிரக்ஞையை ஊட்டுகின்றது. திரும்பிப் பார்ப்பதற்குள்ளாகவே கார்முகப்பு அவள் கவுணில் உராய்ந்து நிற்கிறது. அதனை ஓட்டி வந்த 'ஜாங்கி' மைனர் கண்களைச் சிமிட்டி, உதட்டை நாக்கால் நனைத்தபடி, அவளைப் பார்த்துச் சிரிக்கிறான். அவனுடைய செய்கை அவளுக்கு அருவருப்பை ஊட்டியதுடன், வேதனையையும் வெப்பிசாரத்தையும் பெருக்குகின்றது. இந்தப் பதகழிப்பிற் சிதறிய புத்தகங்களைக்கூடப் பொறுக்கி எடுக்காது, ஒதுங்கி நிற்கின்றாள். பணச் செருக்கின் தினவைப் பறைசாற்றிக் கார் செல்லுகின்றது.

புத்தகத்தைப் பொறுக்கி எடுக்கும் பொழுது, மீண்டும் பரமானந்தத்தைப் பற்றிய நினைவுகளே பற்றிக் கொள்ளுகின்றன. அவன் அவள் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கும் அந்த மாடி ஜன்னலை விழிகள் மேய்கின்றன. அது வெறிச்சோடிக் கிடக்கின்றது. நேற்றுப் பின்னேரம் கூட, அந்த ஒரு கற்றைச் சுருள் மயிர் நெற்றியை முத்தமிட, பற்பசை விளம்பரத்திற்கு ஏற்ற அந்தப் பற்களைக் காட்டி... அந்த அபூர்வச் சிரிப்பு! இதயத்தை அளைந்து குழைத்தெடுக்கும் சிரிப்பு... 'வீட்டில் ஆரோ செத்துக் கிடக்கும் பொழுது, அங்கை அவர் நிக்க முடியுமே? அது வடிவா இருக்குமே?' என்று நினைக்கின்றாள்.

பரமானந்தம் வீட்டிற்குச் சனங்கள் வந்த வண்ணமிருக்கிறார்கள். அவர்களிற் சிலர் தன்னையே உற்று நோக்கி, தன்னைப் பற்றியே பேசுவதான ஒரு பிரமை ஏற்படுகின்றது. கால்களுக்கு வேகத்தைக் கூட்டி, 'கொண்வென்'டை நோக்கி விரைகிறாள்.

'கொண்வென்'டில் மகேஸ்வரிக்கு ஏமாற்றமே காத்திருக்கிறது. சிவமணி வருவாள் என்று எதிர்பார்த்த வளுடைய எண்ணம் ஈடேறவில்லை. சிவமணி, பரமானந்தத்தின் பக்கத்து வீட்டிற் குடியிருப்பவள். அவளிடங் கேட்டால், பரமானந்தத்தின் வீட்டில் நடைபெற்ற சம்பவத்தை அறியலாம் எனத் துடித்தாள்.

மணி அடிக்கிறது ... ஜெபம் முடிகிறது ... வகுப்புகள் ஆரம்பமாகின்றன. படிப்பிலே மனதை ஏற்றிவைக்க மகேஸ்வரியால் முடியவேயில்லை. இனந்தெரியாத சோகத் தொனியொன்று அவள் நெஞ்சைக் கசக்கிப் பிழிகின்றது. அடுத்தடுத்து வந்த இரு ஆசிரியைகளும் "என்ன மகேஸ்வரி. ஒரு மாதிரியாய் இருக்கிறீர்? சுகமில்லையோ" என்று கேட்கச் செய்தார்கள். அக்கேள்வி, அனுதாபத்திற் பிறந்தாலும், சோகத்தை வளர்க்கவே உதவுகின்றது. "சரியான தலையிடி" என்று சொல்லி வகுப்பை விட்டு வெளியேறி, அத்திமரத்தின்கீழ் போடப்பட்டிருக்கும் 'சிமென்ட்' வாங்கில் அமர்கின்றாள்.

அந்த மரத்தின் கிளையில் அணிலொன்று தத்தித் தத்தித் திரிகின்றது. அது சோகத்துடன் தன் இணையைத் தேடித் திரிவதான நினைவொன்று ஊருகின்றது. நேற்று இதே மரத்தடியில், காகக் கிளையொன்று ஓர் அணிலைக் குத்திக் கிழித்ததை, அவள் நேரிற் பார்த்தாள். அந்த அணில் ஆண் அணிலாக இருந்திருக்க வேண்டும்; இப்பொழுது இக்கிளையிலே பரிதவித்துத்திரியும் அணில், அதன் மனைவியாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இயல்பாக ஏற்படுகின்றது. அவள், தன்னை அந்தப் பெண் அணிலின் நிலையில் உருவகப்படுத்துகின்றாள். காரண விட்டத்திற்குள் அடங்காது, சோகம் கட்டுப்படாது எழுகின்றது. நெஞ்சுக்குள் அடைத்திருக்கும் எதையோ, அழுது தீர்த்துவிட வேண்டுமென்ற உணர்வு. பரமானந்தத்தைப் பற்றி மனம் மேய... வாய்க்குள்ளும் கண்ணீர் புகுந்து உப்புக் கரிக்கத் தொடங்

கிய பின்னர்தான், தன் மனப் பூங்காரம் தீருமட்டும் தான் அழுது விட்டதான எண்ணம் எழுகின்றது. 'கண்ணீரை யாராவது பார்த்து விட்டால்...' என்ற அவசர எண்ணத்துடன், நெஞ்சச் சட்டைக்குள் சொருகி வைத்திருந்த கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைக்கின்றாள்.

அந்தக் கைக்குட்டையின் ஒரு மூலையில் இருந்த 'பி' என்ற ஆங்கில எழுத்து அவளுடைய கண்களை உறுத்துகின்றன. அது பரமானந்தன் அவளுக்குக் காதற் பரிசுகளாக அளித்தவற்றுள் ஒன்று. அந்த எழுத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவளுடைய எண்ணங்கள் நீள்கின்றன.

சில மாதங்களுக்கு முன்னர்தான் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு பரமானந்தன் ஊருக்குத் திரும்பினான். உள்ளூர்ப் பட்டதாரிகளுக்கே வேலை கிடைக்காமல் இருக்கும் பொழுது, தனக்கு யார் வேலை தரப்போகிறார்களென்று அவன் விசாரப்படவில்லை. உத்தியோகம் பார்த்துத்தான் வாழ்நாளை உருட்ட வேண்டுமென்ற அவதியுமில்லை. வசதியுள்ள குடும்பம். பெயருக்குப் பின்னால் ஏதாவது ஒரு பட்டத்தை மாட்ட வேண்டுமென்ற கௌரவ தேவையை நிறைவேற்றிவிட்டான். அந்த மாடி ஜன்னலூடாக 'கொண்வென்'டிற்குப் போய் வரும் பெண்களைப் பார்ப்பது, அவனுடைய நித்திய பொழுதுபோக்காக அமைந்தது. அந்தப் பொழுது போக்கில் அவனுக்குக் கிடைத்த முத்துத்தான், மகேஸ்வரியின் காதல். அந்தக் காதல் பார்த்துச் சிரிப்பதில் தொடங்கி, வீதியில் சந்தித்துப் பேசுவதில் வளர்ந்து, பரிசுகளை ...

கிளையிலே தவித்த அணில் 'தொப்' பென்று நிலத்தில் விழுந்தது. அதை ஒரு காகக் கூட்டம் துரத்துகின்றது. இப்படித்தான் நேற்று அந்த அணில் தன்னுடைய மரணத்தை ஏற்றுக் கொண்டது. 'இந்த அணில் அன்றிலா? தன் இணையைப் பிரிந்து வாழக்கூடாது என்ற எண்ணத்தின் எழுச்சியா? இது தற்கொலைப்

பிரயத்தனமா?'—எதற்கும் தன்னையும், பரமானந்தத்தையும் இணைத்துப் பார்க்கும் ஒரு பித்தநிலை.

இப்படி எவ்வளவு நேரந்தான் உருண்டோடியிருக்குமோ, மகேஸ்வரி அறியாள். மதிய போசனத்திற்கான இடைவேளைமணி கிணுகிணுக்க, வகுப்புகளில் அடைபட்டுக் கிடந்த மாணவிகள் வெளியேறினார்கள். அந்தக் கலகலப்பு அவளை நிஜ உலகிற்கு வரவழைக்கிறது.

'பின்னேரப் பாடசாலைக்கு வரத்தேவையில்லை; மனமும் சரியில்லை. அவள் சிவமணியைப் பார்த்துவிட்டு வீட்டை போவம்' என்ற எண்ணத்துடன், தன் வகுப்பை நோக்கி நடக்கிறாள்.

புயல் வீசி அழிவுபட்ட மருத நிலக்காட்சியை பரமானந்தத்தின் வீடு நினைவூட்டுகின்றது. 'கேற்'றை ஒட்டினாற் போலப் படர்ந்திருக்கும் மல்லிகைப் பந்தலிலும் சவக்களை. விருந்தையை ஒட்டினாற்போல குடைவிரித்திருக்கும் நந்தியாவட்டைச் செடிகளிலும் மரணச் சாயல் படிந்துகிடக்கிறது. களையிழந்துகிடந்த அக்காட்சிகளைப் பார்த்த அவளுக்கு, உடனேயே பரமானந்தனைக் காணவேண்டுமென்ற வெறி ஏற்படுகிறது 'சவம் எடுத்து விட்டார்கள்; அவரும் சவத்தோடை சுடலைக்குத்தான் போயிருப்பார்' என்ற நினைவு, அந்த வெறியை அடக்குகின்றது.

வீட்டுக்குள்ளிருந்து ஒரு பெண்ணின் தனித்த அழுகுரல் கேட்கின்றது. சோகம் முழுவதையும் தொண்டையில் ஏற்றிக் கட்டிக் கனத்த குரல். அந்த அழுகுரல், தன் எண்ணம் எதையோ, எப்படியோ பிரதிபலிப்பதான நினைவு. இன்று முழுவதுமே மனம் இப்படித்தறிகெட்டோடுகின்றது. இனியும் அதனை அதன்பாட்டிற்கு விட்டால் பைத்தியமே பிடித்துவிடும் என்கிறநிலை. எதையும் சிவமணியிடம் கேட்டுவிடுந்துடிப்பில், அவள் வீட்டிற்கு நடக்கிறாள்.

சிவமணி, ஓர் 'ஈசிச்சேரி'ற் படுத்துப் பத்திரிகையின் பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருக்கிருள். மகேஸ்வரியைக் கண்டதும், "வாருமப்பா மகேஸ். நல்ல வெய்யிலும்..." என வரவேற்ருள்.

"நீர் இண்டைக்குப் பள்ளிக்கு வரேல்லையப்பா. அது தான் பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தனனப்பா..."

"ஓ, அதுவா ?... பக்கத்து வீட்டிலை ஒரு செத்தவீடு. ஒரே மதில் பாரும். அதுதான் அம்மா மறிச்சுப் போட்டா..."

"அப்ப, சொந்தக்காரர்களாக்கும்..."

"சொந்தமாயிருப்பினம், இந்தச் சுந்தரி மனம்வச் சிருந்தால் ..." என்று நாட்டிய அபிநயத்துடன் கைகளை அசைத்துச் சொன்னுள்.

"என்னப்பா, எனக்கு ஒண்டும் விளங்கேல்லை..."

"உந்தப் பக்கத்து வீட்டுக்காறர், கொஞ்சக் காலத்துக்கு முந்தித்தான், உந்த வளவை வாங்கிக் கொண்டு குடி யேறினவை. பரமானந்தன் எண்டு ஒருத்தரப்பா; ஒருக்கா அவர் என்னை 'லவ்' பண்ணப் பாத்தவர். நான் இடம் குடுக்கேல்லை. அவரொரு வருத்தக்காறன் எண்டு உங் குனேக்கை சொல்லிச்சினம்... அதுதான் தட்டிக் கழிச்சுப் போட்டன். இதுதான் சொன்னனுன், நான் மனம் வச் சால் சொந்தமாயிருக்குமெண்டு..." — சிவமணி இதைச் சொல்லி, இலேசான குரலில் 'களுக்'கெனச் சிரித்தாள்.

"அது சரி, ஆர் செத்தது ?"

"ம்... அது வலு 'சாட் நியூஸ்' மகேஸ். அந்தப் பரமானந்தம்தான் செத்துப் போயிட்டார். நேற்றுப் பின் னேரம் கூட நல்லா இருந்தவராம். திடீரென்று அரை மணித்தியாலத்துக்குள்ளை ஆள் குளோஸ்..." என்று சொல்லித் தலையை நிமிர்த்திய சிவமணி, ஒரு கணம் திகைத்துவிடுகிருள். அடுத்த வீட்டிற்கும் கேட்கக்கூடிய விசும்பலுடன், கண்ணீர் மழை பொழிகிருள் மகேஸ்.

"என்ன மகேஸ், குழந்தைப்பிள்ளை மாதிரி ... ஆரேன் கண்டாச் சிரிக்கப் போகினம்..." என்று ஏதோ ஆறுதல் சொல்ல விழைந்த சிவமணியை அசட்டை செய்து விட்டு, மகேஸ் வீதிக்கு வருகிறாள்.

'இவளுக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது' என்று நினைவு எழ, வீதியில் அவள் நடக்கும் வேகத்தைப் பார்க்க வேண்டுமென்ற எழுச்சியில், சிவமணி கேற்றடிக்கு வந்து எட்டிப் பார்க்கின்றாள்.

மகேஸ் வீதியில் நடக்கவில்லை.

புத்தகங்கள் வீதியிலே சிதறிக்கிடக்க, அவள் எதிராக வந்த லொறியின் சக்கரங்களுக்குள் நசிபட்டுக் கிடக்கிறாள்.

'பரமானந்தன் அரை மணித்தியாலத்திலை; இவள் அரை நிமிஷத்திலை...' என்ற எதிர் நினைவு ஒன்று மின் சாரம் பாய்ச்சுகிறது.

"ஐயோ, மகேஸ்..." என்று அலறிக் கொண்டு, லொறிக்குக் கிட்டச் சிவமணி ஓடுகிறாள்.

---

# இழவு

“என்ன, கொத்தான் வெந்து போய் வாறீர் உந்த வெய்யிலுக்கை? எங்கை இந்த நேரத்திலே? வெய்யில் கொளுத்துது, கையிலே ஒரு குடையைக் கிடையைக் கொண்டு வரக்கூடாதே?”

“நான்காணும் ராத்திரி, உதிலே எப்பன் வடக்கம் பிராயுக்கை ஒரு மாட்டு விஷயமா வந்தனான். வந்த இடத்திலே எல்லுப்போலே சுணங்கிப் போச்சு. பின்னை அவன் மனிசன் — ஆர் தெரியுமே, எங்கடை வன்னிய சிங்கத்தான் தான்—என்னண்ணை இப்ப அவசரம்? நல்லா இருண்டு போச்சு. கொஞ்சத்துக்கு இதிலே சரிஞ்சு போட்டு, வெள்ளாப்பிலே எழும்பித் தட்டிக் கொண்டு போனியெண்டா மாட்டுக்கும் களையிருக்காதெண்டு தடுத்துப் போட்டான் பாவி. அதுதான்காணும்... எப்பெப்ப எனி இஞ்சாலே வாறனோ தெரியாது. கையோடை ஒருக்கா உங்களையும் பாத்துக் கொண்டு போலா மெண்டுதான்...”

"என்ன கொத்தான், சித்திரை வைகாசி வெய்யில் மாதிரியெல்லை வேசமேன்ரை வெய்யில் கொளுத்துது. அது இணலுக்கை வந்தாப்போலேதான் காணும் நல்லாத் தெரியுது. உஹ்ஹ் உஹூ... அக்கினி, அக்கினி. அது கிடக்க எங்கை அன்னத்தின்ரை சிலமனைக் காண யில்லை? மாட்டையும் வெளியிலை வெய்யிலுக்கை கட்டிப் போட்டு வந்திட்டன். எரெப்பன் தண்ணி வச்சால் நல்லது. பாவம், வாய்பேசாச் சாதியெல்லே."

"உங்கினைக்குள்ளை இப்ப நிண்டாள் பாவி ஒரு வேளை அடிவளவுப் பக்கம் போயிருப்பாள், ஆடுகளுக்குத் தண்ணி கிண்ணி வைக்க. எணே!... இஞ்சை பாரன் கொண்ணன் வந்திருக்கிருர். அவங்கடை இழவு வீட்டுக்கு மொருக்காப் போக வேணும் காணும், அதுதான் மனுசி ஆவாவெண்டு நிக்குது."

"ஆர் கொத்தான் செத்தது?"

"என்னவுமது, உமக்கு இழவறிவிக்கயில்லையே? நல்ல புது நாணயந்தான். நான் முதலிலை நினைச்சன் நீரும் அதுக்காத்தான் வந்திருக்கிறீராக்குமெண்டு; வீரகத்தி யானும், பெண்டிலுமெல்லோ காணும் வீட்டு விட்டத்திலை கவுறு போட்டுத் தூங்கியிட்டினம்" என்ருர் ஆறுமுகத் தார்.

"என்னவுமது, பேய்க் கதை பேசுகிறீர்? போன கிழமைதானை காணும் பெரிய கடையுக்கை கண்டு கதைச்சனன். மோள் வீட்டை போட்டுவாறமெண்டு சொன்னவை இரண்டுபேரும். என்ன கொத்தான் நம்ப முடியாமக் கிடக்கு."

"இன்றைக்கிருப்போரை நாளைக் கிருப்பரோ என்றெண்ணவோ திடமுமில்லை இறைவா கச்சி ஏகம்பநாதனே."

"ஓமோம். எண்டாலும், என்னவும்காணும் இந்த வயதிலை இப்பிடி அவச் சாவு செத்துப் போட்டினம். ஏதோ இல்லாதது செல்லாததுகளே! இருக்கிறதை வைச்சுக் கொண்டு பாத்தாலும் பங்கை இல்லையெண்டாலும்

ரண்டு மூண்டு தலைமுறைக்குப் போதுமே காணும். அவங்கள் பெடியளும் — மக்கள்தான் — அவங்களும் நல்ல நிலைமையில இருக்கிருங்கள். பெடியள் அஞ்சு பேரெல்லே? என்ன சொன்னீர் ?..... ஓ, ஓ, அவன் அந்த வாதக் காரனுடைதான். பெட்டை ஓண்டுதானே ? அவளையும் நல்ல இடத்தில கரை சேத்துப் போட்டாரெண்டு கேள்வி. பேந்தேன் காணும் உப்பிடிச் செத்தவை ?......''

''நீர் என்னவும் கொத்தான். அத்திபூத்தாப்போல ஆடியில ஒருக்கா அமுவாசையில ஒருக்கா வாற உமக்கு இதெல்லாம் எங்ககாணும் தெரியப்போகுது ? நீர் நினைக்கிற அண்டையில் வீரகத்திப்பிள்ளையின்ரை குடும்பமில் லைக் காணும். அதெல்லாம் தலைகீழாக மாறிப்போச்சு'' என்ற ஆறுமுகத்தாரின் பேச்சுக்குக் குறுக்கே அவர் மனைவி அன்னப்பிள்ளையின் குரல் விழுகிறது.

''அதுகள் ஒண்டுக்கையொண்டு சிக்குப்பட்டுப்போய் கிடக்குதுகள். அந்தச் சவம் கிடாய்க்குட்டி மற்றதுகளை நிக்கக்கிக்க விடுதில்லை. நாளைக்கு அதின்ரை காலுக்கு ஒரு பூட்டாங் கவுறு போடத்தான் வேணும். அந்தக் கோதாரியளோடை ஒண்டும் கேக்கயில்லை. உதாரோடை கதைக்கிறியள் ? ''

''கொண்ணையெல்லையப்பா வந்திருக்கிருர்'' என்று சொல்லவும் அவள் அங்கு வந்து சேர்ந்தாள்.

''ஆர் பெரியண்ணையே...... களைச்சுப்போய் வந்திருக் கிருப்போல கிடக்கு.''

''அப்பிடியொண்டுமில்லைப் பிள்ளை. முதல்லே அந்த மாட்டுக்குத்தான் எல்லுப்போல தண்ணின் காட்டிவிடு அன்னம், அப்படியே எனக்கும் கொஞ்சம் பச்சைத் தண் ணின் தா'' என்ருர் பொன்னர்.

''ஏனண்ணை, தேத்தண்ணி வச்சுத் தாறன்.''

''இல்லைப்பிள்ளை, முதல்லே தண்ணிவிடாய்க்கு பச் சைத் தண்ணிதான் நல்லது.''

முதலில் வாய் பேசும் சாதியாகிய பொன்னரிடத்தில் செம்புத் தண்ணீரைக் கொடுத்துவிட்ட அன்னம், வாளி யைத் தூக்கிக் கொண்டு மாட்டிற்குத் தண்ணீர் வைக்க நடந்தாள்.

தண்ணீர் குடித்த பொன்னர், "அப்பகானும் நானும் கையோடை இழவு வீட்டுக்குப் போவிட்டுப் போகலா மெண்டு பாக்கிறன்...... அங்கை ஊரிலையும் கட்டாயம் அறிவிச்சிருப்பாங்கள். அதுசரி, எப்ப எடுக்கப் போறுங் களாம்?"

"செத்து மூண்டு நாளச்சு. மணங் குடுத்திட்டுது. ஏன்தான் என்னும் வச்சுக்கொண்டிருக்கிறுங்களோ தெரியேல்லை. அவங்கள் பொடியள் ஆறேழு தந்தி அடிச் சும் என்னும் வரயில்லையெண்டால்......"

"ஓமோம், அவங்கள் பொடியளும், பொட்டையுமெல்லே வரவேணும். ஓங்காணும், கோணிலை பேசி இருந்தால் இவளவத்துக்கு வந்திடுவாங்களில்லே? பெத்ததுகளில்லே, எனி எப்ப முகத்திலை முழிக்கிறது."

"இவை தந்திக்குமேலை தந்தி அடிச்சவைதான். தந்தி யளும் இப்ப தவால்லே தானும் போகுது."

"மேளம் வந்திடுத்துப்போலை கிடக்கு" என்று இடை யில் புகுந்தாள் மாட்டுக்குத் தண்ணீர் வைத்துவிட்டு வந்த அன்னம்.

"என்னவும், இடிமோளம் போலை கிடக்கு. வலு டீங் காத்தான் செய்யிறுங்கள் போலை" என்றுர் பொன்னர்.

"ஓமோம். அவை செத்த சாவுக்கு அதைப் பின்னை பிறைசித்தம் போட்டுச் சொல்ல வேண்டாமே, தூ!...... மானங்கெட்ட சவங்கள். அவள் ஓடினவளும் வாறுளாக் கும்" என்ற முகத்தார், தன் அருவருப்பைக் காறித் துப்பிக் காட்டினர்.

"அவ வந்தாப் பெரிய மேடரெல்லோ நடக்கும்? அவளுக்கு அறிவிச்சிருக்க மாட்டாங்கள். அவள் எங்கை

இருக்கிறுளெண்டு தெரியேல்லையாம். அவளைக் கொலை செய்யிறதுக்கில்லே தேடித்திரிஞ்சவன் அவன் மாமன்"— அன்னம் அடுக்களைக்குள்ளிருந்து சொன்னுள்.

"என்ன கொத்தான், ஏதோ ஓடினது கீடினது எண்டெல்லாம் பேசுறியள்? வீரகத்தியானுக்கு ஒரு மோள் தானே...... அவளுக்குத்தானே கல்யாணம் தடபுடலாகச் செய்தவர். பேந்தார் காணும் ஓடினது?"

"நீர் ஒண்டு காணும், அந்த அவள்தான் கட்டிக் கொடுத்தவனை விட்டுட்டு இன்னெருத்தனேடை 'வாணம்' விட்டுட்டாள், போன வியாழக்கிழமை. அந்த மானக் கேட்டைத் தாங்கமாட்டாமைத்தானே காணும் இவைகள் கவுறு போட்டு கொலைபண்ணியிருக்கினம்" என்று விளக் கினுர் முகத்தார்.

"என்ன இழவு விழுந்த கதையாக்கிடக்கு! சொந்தப் புரியனை விட்டுட்டு, கள்ளப்புரியனேடை ஓடியிட்டா ளெண்டு சொல்லும்.. ஓஹோ! அப்பிடியே சங்கதி! எனக்கு உண்ணுணை இப்பதானே காணும் விளங்குது. நீர் என்னவும், கதை அப்ப இன்னும் கிடக்கு எண்டு சொல்லும். நான் அங்கை வட்டக்கச்சியிலை கமம் ஒண்டை எடுத்துப்போட்டு ராப்போலா அதுக்குள்ளை கிடந்து நாயா உழைக்கிறன். எனக்கு எங்கை காணும் இதெல்லாம் விளங்கப்போவுது."

அதுசரி கொத்தான், தெரியாமக் கேக்கிறன்; உவளைத் தானே வீரகத்தியான் பத்தோ பதினைஞ்சு வரைக்கும் படிப்பிச்சவர்? நல்ல வடிவானபொட்டை. உரிச்சுப் படைச்சு சரியா சுத்தம் சுவம் அவரைப்போலைதான். அதுக்கு உப்பிடிக் குறுக்காலைபோன புத்தி வந்திட்டுது பாரும். அப்ப நான் நினைக்கிறன்காணும், அப்பவே படிக்கிற காலத்திலை தொட்டு இப்ப ஓடினவனுக்கும் உவளுக்கும் தொடுப்பு இருந்திருக்க வேணும். அதுதான்காணும் அவளின்ரை முந்தின புரியன்காறப் பொடியன்—அவன் பொடியனுக்கும் நல்லவொரு பேர் — கனகசபையோ...... ஓ, ஓ, அப்பிடித் தான். பொடியன் அவற்றை சொந்தக்காறன்தானே.

அவனும் ஒரு மாசிற்றரெல்லே......... ப...ங்...க இல்லேயில்லேயெண்டுபோனுலும் ஒண்டரை இலச்சத்துக்குப் பதியாமப் பாக்கலாம். அவனுக்குக் குடுத்த சீதணம். பனேயிலே கிடக்கிற அந்தத் தென்னந் தோட்டத்தோடை தான்...... அப்ப பொட்டையளேப் படிப்பிச்சுப்பாரன். உப்பிடிக் குதியன்குத்தித் திரியிறவள்களேக் கூட்டிக் கொண்டோடியவனேச் சொல்லும். உவனேடை ஓடினது மா திரிதானே இன்னெருத்தனேடையும் கூடிக்கொண் டோடுவாள்—எல்லாம் ஓடுகாலி கூட்டம்தான். உப்பிடி யானவைதானே கடைசியிலே ஒட்டுமடத்தடியிலே போய் சேருவினம்'' என்று நிறுத்தினுர் பொன்னர்.

''தேத்தண்ணி ஆறப்போவுதண்ணே குடியுங்கோ'' என்று அன்னம்மா இடையில் புகுந்தாள்.

''முகத்தார்... ஓய் முகத்தார் ..... நிக்கிருரோ ?''

''படலேயிக்கை ஆரோ கூப்பிடினம்போலே கிடக்கு. ஒருக்கா எட்டிப்பாரணே'' என்ருர் ஆறுமுகத்தார்.

''அப்புக்காத்தற்றை ஆளேக்குரல்போல கிடக்கு. ஓ, ஓ, அவர்தான்...... ஏன் வழி தெரியேல்லேயோ? வாருங்கோ வன்''—அன்னம் அப்புக்காத்தரை வரவேற்றுவிட்டு குசி னிக்குள் நுழைந்தாள்.

''என்ன முகத்தார், எப்ப சாமத்தியப்பட்டனீர்... மூலே யுக்கையிருக்கிறீர்? எடடே.... பொன்னரும் விண்ணுணமா வந்திருக்கிருர்...... ஓ, ஓ, இழவு வீட்டுக்காக்கும். ஏன் கிளம்பிறதில்லேயே ..... எல்லாரும் வந்திட்டாங்களாம்; இனி வெயிலும் தணிஞ்சுபோடும்'' என்ருர் அப்புக்காத் தர்.

''உமக்கென்னகாணும் ஊரிருக்கு உம்மைத் தாங்க நாங்களும் அப்பிடியே...? ஊரொச்சம் வீடு பட்டிணி எண்ட கதைதான் எங்கடைபாடு. ஊர் அப்புக்காத்து எண்டால் என்ன குறைஞ்ச உத்தியோகமோ ? சரி இரும். எல்லுப்போலே தேத்தண்ணி குடிச்சிட்டு நடப்பம்''என்ருர் முகத்தார்.

"எனக்குத் தேத்தண்ணி வேண்டாம்காணும். நான் கந்தன்ரை கொட்டிலிலை இருந்துதான் வாறன். இண்டைக்கு வீரகத்தியானும் பொண்டிலும் போற வழிக்குப் புண்ணியம் தேடவேணுமெண்டு ஒருக்கா முழுகிப்பாப்பம். என்ன பொன்னர், ஊமாண்டிமாதிரி இருக்கிறீர்? கோணமலையின்ரை கொசுப்பிற்றலிலை ஒவ்வொரு ஊசி போட்டால் பேந்தென்ன ?...... போற வழியெல்லாம் சூடேத்திக்கொண்டே போவம்" —அப்புக்காத்தர் வெகு யதார்த்தமாகப் பேசினர்.

"இஞ்சையெடும் முகத்தார் எல்லுப்போலை தாவடியானிலை. வேசமென்ரை குடலைப் பிரட்டிக்கொண்டு வருது. ஒரு புகையை இழுத்து விழுங்கினல் இந்தப் பிரட்டலை நரம்புகளுக்கையிழுத்துக்கொண்டு போடும். வேசமென்ரை வெறும் வயிறு. அதுதான் இப்பிடிச் செய்யுது. பின்னே, அவன் பொடியன்ரை கள்ளிருக்கே... ஆற்றே... கந்தன்ரை கள்ளுத்தான்... ஒருபிள்ளை இண்டைக்கும் விரல் மடிக்க முடியாது. சாமான் எண்டால் அவன்ரைதான் சாமான்... பின்னே, உங்கினைக்குள்ளை இருக்கிருங்களே தண்ணி கலந்து வைச்சுக்கொண்டு .. உண்ணுணை நான் உவங்களட்டைக் குடிக்கிறதெண்டால் ரண்டு மூண்டு நாளைக்கு வயித்தாலை போகேலை எண்டால்தான் குடிப்பன். பேதிக்குத்தான்காணும் உவங்கடை சாமான் வலுதிறம்" என அப்புக்காத்தர் பேச்சை நிறுத்திக்கொண்டு வாயில் சுருட்டைப் பொருத்திப் பற்றவைத்தார்.

"என்னகாணும், ஏதாவது கீறிக்கிழிச்சவங்களே ? " அப்புக்காத்தரைப் பார்த்துக் கேட்டார் முகத்தார்.

"வந்த பொலிசுக்காறனுக்கும் டாக்குத்தனுக்கும் ஐம்பதும் நூறுமாகக் கைமாறிச்சுது. அலுவலெல்லாம் சரியாப் போச்சு" என்ருர் அப்புக்காத்தர்.

"எண்டாலும் ஊருக்கை அந்தப் பொடியள் எனித் தலைகாட்ட முடியாது பாரும்" என்றெரு கொழுக்கியைப் போட்டார் பொன்னர்.

"மெய்யோய், தெரியாமத்தான் கேக்கிறன்காணும். அவள் பொடிச்சி சொன்னவளே உப்புடி உவையை அவச்சாவு சாகச்சொல்லி? அல்லது, மற்றவையைத்தான் ஊருக்கை தலைகாட்ட வேண்டாமெண்டு சொன்ன வளே ?...... ஏங்காணும் ஒருமாதிரியாத் திகைச்சுப்போய் பாக்கிறியள் ?...... இஞ்சை வாரும் முகத்தார், ஊருலகத் திலை எவளவோ காரியங்கள் நடக்குது. இப்ப நாங்கள் எல்லாருமா அவள் பொடிச்சியைத்தானே குறை சொல் லுறம்; இல்லையே ? குடும்பங்களுக்கை எத்தினையோ சங் கதியள் கிடக்கும். அதிலையும் இந்தக்காலத்துப் பொடிய ளும் பொட்டையளும் இருக்கே.. எனக்கு வீரகத்தியானே சொல்லியிருக்கிருரெண்டால் பாத்துக்கொள்ளுங்களேன். அதென்னெண்டு நினைக்கிறியளோய் ?— 'பொட்டையைப் படுகுழியிலை தள்ளிப்போட்டன் அப்புக்காத்து' எண்டு. என்னை உங்களுக்குத் தெரியுந்தானை. எப்பன் எப்பனுக எல்லாத்தையும் புடுங்கிப் போட்டன், அவன் பாவியின்ரை வாயிலையிருந்து. அதைச் சொல்லேக்கை அவன் மனிசன் அழுதுவிட்ட அழுகை இருக்கே காணும், ச் ச் ச்... அது அந்த ஆண்டவனுக்கும் கேட்டிருக்கும் காணும். 'ஏனண்ணை எல்லாம் நல்லாத்தானை செய்து வைச்சனி' எண்டதுக்கு, அதெல்லாம் சரிதான் அப்புக்காத்து. அவள் பொடிச்சி கலியாண எழுத்தைத் தள்ளிவிச்சுவிடச் சொல்லி ஒத்தைக் காலிலை நிக்கிருள். இல்லை யெண்டால் என்ரை பிணத்திலதான் முழிப்பியள் எண்டு சொன்னுளாம். விசயம் என்னெண்டு நெருக்கிக் கேட்ட பிறகுதான் பொடிச்சி வெக்கம் மானத்தை விட்டிட்டு சங்கதி இப்பிடி யெண்டு சொல்லி. தாயையும் தகப்பனையும் கட்டிப்பிடிச்சு அழுது கரைஞ்சாளாம். பாவம். அவள் சொன்னதைக் கேட்டாப் போலையும் இந்த மனிசன் வீரகத்தியான் சிலபல புத்தி மதியளைச் சொல்லிச்சிதாம் பாவி. என்னெண்டு கேட் டியளே ? பிள்ளே, எல்லாம் இருக்க இருக்கச் சரியாப் போடும் குஞ்சு. எல்லுப்போலை பல்லைக் கடிச்சுக்கொண் டிரு. என்ன செய்யிறது. அதுகும் முடிச்சு மூண்டு மாதமாகேல்லைப் பிள்ளை. அதுக்கிடையிலை என்னெண்டு

மேனை கலியாண எழுத்தைத் தள்ளுறது. பேந்து ஊர் தேசத்திலை எந்த முகத்தோடை பிள்ளை நான் திரியிறது. நாலு நல்லவன் பெரியவன்ரை முகத்திலை என்னை முழிக்க வேண்டாமெண்டு சொல்லுறியே பிள்ளை? எல்லாத்துக்கும் அந்த சந்நதியான் உன்னைக் கைவிடமாட்டான் எண்டு சொல்லிப்போட்டு வந்தாராம்...''—அப்புக்காத்தர் பேச்சை நிறுத்திக்கொண்டு சுருட்டை மறுபடியும் பற்றவைத்துக்கொண்டு தொடர்ந்தார்.

"சரி முகத்தார், இஞ்சை பெண்டுகள் ஒருத்தரும் கிட்ட இல்லைத்தானே. நான் ஒண்டு கேக்கிறன் திடுகிடமாட்டியளே?...... நீயும் நானும் பெண்டில் மாரோடை தானே இருக்கிறம்—இல்லையே? இப்ப எங்களுக்கு மத்தியானத்தைத் தாண்டிப் படு பொழுதாப்போட்டாலும் கூட என்ரை பெண்டிலையோ, உன்ரை பெண்டிலையோ என்னொருத்தனோடை போகச் சொல்லிச் சொல்ல மனம் வருமேகாணும்? உண்ணைத் தெரியாமத்தான் கேக்கிறன்? இதுக்கு மறுமொழி சொல்லும் பாப்பம். நீ நாலு எழுத்தாவது தெரிஞ்ச மனிசன்.''

இழவு வீட்டிற்குச் செல்வதற்காக வேட்டிமாற்ற எழுந்த முகத்தார், அசைவற்றுச் சிலையாகி நின்றார். அருகிலிருந்த பொன்னரின் வாயில் ஈயொன்று தன்னிச்சையாய்ப் புகுந்து ஒளித்து விளையாடி வெளியேறிற்று. அங்கே நிலவிய அந்த நீண்ட மௌனத்தின்பின், புதிர் விடுவிக்கும் வாக்கில் ஒருசிறு புன்னகையை வெளிப்படுத்திக்கொண்டே பொன்னர் சொன்னார்:

"அந்தப் பொட்டையின்ரை புரியன் இதைச் செய்யச் சொல்லி அடிச்சு நெகிட்டு ஆய்க்கினைக்குமேலை ஆய்க்கினை செய்து கொடுமைப்படுத்தினனும். பின்னை அவளும் பொடிச்சி இந்த அநியாயத்தையெல்லாம் எத்தனை நாளைக்குத்தான் பொறுத்துக்கொண்டிருக்கிறது சொல்லுங்கோ பாப்பம்?''

அவசரமாக—ஆனல் ஆத்திரத்தின் சிகரத்தில் நின்ற பொன்னர், ஓங்கி நிலத்தில் உதைத்துக்கொண்டே

"அடிப் பண்டி வேசேமேனை. கெட்ட வடுவாவை என்னும் உயிரோடையே விட்டிருக்கிறுங்கள். அவனைக் கொல்ல வேணும்; அவனைக் கொல்லாம விடுறதுதான் பாவம்."

"அது சரிகாணும், அவனென்ன ஆம்பிளையா அல்லது அலி ருசுக்கோலா? அந்தக் கெட்ட நாயே ஆரோ பெப்தும் போட்டாளே" என்ற முகத்தார் வேட்டியை இடுத்பில் இறுக்கிக் கட்டிக்கொண்டார்.

"அன்னம் எங்கை நிக்குது......" என்று அக்கம் பக்கமாகத் திரும்பிப் பார்த்துக்கொண்ட பொன்னர் சொன்னுர். "அதுதான் காணும் அந்தப் பண்டிவேசேமேன், பொல்லாத பொடியள் விளையாட்டுக் காறனுமோய். அவனுக்கு வாறவங்களுக்கு இவள் பொட்டையே முந்தானை விரிக்க வேணும்?" என்று இரகசியம் பேசும் குரலில் அப்புக்காத்தர் சொன்னுர்.

பொன்னர் ஒன்றும் விளங்காது விழித்தார்.

அப்புக்காத்தர் பேசியதை அரைகுறையாகக் கேட்டுக்கொண்டுவந்த முகத்தாரின் சகதர்மினி அன்னப்பிள்ளை இடையில் புகுந்து, "அவன் பொடியன் பின்னை உப்புடி நெடுகப் பொடியளோடை சுத்திவிளையாடிக்கொண்டு திரிஞ்சால், அவளும் பொட்டைதான் என்ன செய்யிறது? உண்ணைத் தெரியாமத்தான் சொல்லுறன். ஒரு பெண் சென்மமெண்டாப்போலை ஆகக் கசக்கி மணக்கிறதே?" என்று பெண்களின் கட்சியை எடுத்துப் பேசினுள்.

விஷயத்தைப் பச்சையாகப் பேசவிரும்பாத ஆறுமுகத்தார் "சரி கிளம்புங்கோ போதும்" என்றுகொண்டே நடந்தார்.

பொன்னர் ஒருவருடனும் பேசாமல் நடந்தார். கடைசியிற் பரிமாறப்பட்ட பரிபாஷை அவருக்கு விளங்கவேயில்லை. அது அவர் மனதைக் குழப்பியது அதைப் புரிந்துகொண்ட அப்புக்காத்தர், அவருடைய காதில் ஏதோ குசுகுசுத்தார்.

"அடடே, அப்படியே சங்கதி! என்ன இழவு விழுந்த விளையாட்டு ? மூதேசித் தரித்திரியம் பிடிப்பாங்கள் உப்புடியும் செய்யிருங்களே ? தூ!"

துப்பி முடித்துத் தலையை நிமிர்த்தினர் பொன்னர். எதிரேகோணமலையின் கொட்டில்.

மூவரும் கொட்டிலுக்குள் புகுகிருர்கள்.

# ஊருக்காக

" என்ன சின்னத்துரை, கொப்புவுக்கு அரிசி குடுக்கப் போருபோலை கிடக்கு?"

" ஓமம்மான்."

" என்ன குத்தரிசியோ, கூப்பன் அரிசியோ?"

" வரியத்திலை ஒருநாளைக்குத்தானை பாருங்கோ, குத்தரிசியாகக் குடுத்திடுவம். ஆச்சி தன்ரை கைப்படக் குத்தித் தந்த நல்ல புழுங்கல் அரிசி."

" அப்பிடியே? ... ஓ, குத்தரிசி யெண்டால் அவையளும் கொண்டு போற கையோடை களைக்கு இல்லுப்போலை கஞ்சியாவது வடிச்சுக் கிடிச்சுக் குடிப்பினம். அது சரி கொப்புவை உனக்குத் தெரியுமே? "

" உரிச்சுப் படைச்சு என்னைப் போலைதான் இருக்குமெண்டு ஆச்சி சொல்லுரு."

"கொப்பன் பின்னை வேறை ஆரைப் போலை இருப்பான்? உன்னைப் போலைதானையடா இருப்பான்."

"நான் எங்கையம்மான் அந்தாள்ளை முகத்தைப் பாத்தன். நான் எடுத்தடி வைச்சு நடந்தண்டே அந்தாள் போவிட்டுது. அடிச்சுக் கொண்டாலும் ஆறேழு நாள் செல்லுமெண்டு ஆச்சி இண்டைக்கும் இத்தித்து மாண்டவ. 'வாறன் உதிலை போவிட்டு' எண்டு சொல்லிப் போட்டுப் போன ஆள் பிணமாக வருமெண்டு ஆருக்குத் தெரியும? அந்த இயமனுக்குப் பொறுக்கேல்லே..."

"உன்னோடை ஆரும் கூடிக்கீடி வந்தவையே?"

"இல்லையம்மான்."

"அப்ப வாவன், அப்பிடி ஒரு மூலையாப் பாத்துக் குந்துவம்."

"மூட்டை வலு கனமாக் கிடக்கு. எத்தினை கொத்தரிசி?... காய் பிஞ்சுகளுமாக்கும்."

"ஒரு கொத்தரிசியும், ஒரு சிறங்கையும்; கத்தரிக்காய் பச்சை மிளகாயும் கிடக்கு."

"கோத்தைக்கு கொப்பரிலை இப்பவும் சரியான ஆசைதான். பின்னை இருக்காதே? அவளும் வாழுற உண்ணுற வயதிலை அவனை வாரிக் குடுத்திட்டு நிக்கிறதெண்டால் ஆராலைதான் அவளவு கெதியா மறக்க முடியும்? கொப்பனை இப்ப நினைச்சாலும் என்ரை கண்ணுக்கை நிண்டு ஆடுறான். சை! அவன் என்ன ஆம்பிளை. பின்னை இப்பதையுச் சுறேங்குகள் மாதிரியே? ம்... என்ன செய்யிறது. நீயும் கோத்தையும் குடுத்து வச்சது அவ்வளவுதான்... அதுசரி சின்னத்துரை, சும்மா சாத்திரப் படிக்கு ஒரு சிறங்கை அரிசியைக் குடுக்கிறதுக்கு உதேன் உவளவு அரிசியையும் பண்டாரிக்குக் குடுக்க வேணும்? நேராகக் கொப்பன் வந்து வாங்கிற தெண்டாலும் பாதகமில்லை. கோத்தை அப்படி யெண்டால்தான் அடுத்த ஆடி அமுவாசைக்குப் போதக் கூடிய அரிசியை வண்

டில்லே ஏத்தி அனுப்பிப் போடுவாளே!... பின்னே அவள் பாவி கோத்தையின் ஆசையையும் ஏன்தான் கெடுப்பான். நானும் அங்கினேயுக்கை ரண்டு சிறங்கை கட்டரிசியும் ஒரு வாழைக்காய்ப் பிஞ்சும்தான் கொண்டந்திருக்கிறன். ஏதோ உள்ளதைத்தானே குடுக்க வேணும்?''

"அதுசரியம்மான்."

"போயிலே குடிக்கிறனியே?"

"இல்லேயம்மான்."

"அப்ப சீக்கிரெட்டுக் குடிக்கிறனியாக்கும்."

"ஒண்டும் குடிக்கிறதில்லே அம்மான்."

"வலு நல்ல பழக்கமாக் கிடக்கு. இந்தக் காலத்துப் பொடியளுக்கை நீ ஒரு புது நாணயமாகத்தான் கிடக்கடா சின்னத்துரை. கைம்பெண்டாடிச்சி எண்டாலும் உன்னேக் கழுதை போலே வளக்கேல்லேக் கோத்தை. பின்னேத் தேப்பனேடை இருக்கிறதுகள்... தாயடை சீலே—என்னமாய் வாயாலேயும் மூக்காலேயும் புகை விடுதுகள். அதுகளேத்தான் உண்ணுணே அறுதலி பிள்ளேயெளெண்டு சொல்ல வேணும்."

"ஓமம்மான். என்ரை பெரியாச்சியின்ரை மேனும் ஒருத்தன் உப்புடித்தான்."

"ஆர் மூத்தான்ரை மேனேச் சொல்லுறியே? ஓ. அதை நானுங் கண்டனுன். அது இப்பவே அழிஞ்சுபோகத் துவங்கியிட்டுது... வலு குளிராக் கிடக்கு. பல்லோடை பல்லுக் கிட்டிக்கொள்ளுது. சுத்துப் புகையையும் தூக்கியெறியிறனெண்டு நிக்குது குளிர். பழக்கமில்லாத எங்களுக்கு கடல்காத்து குடலேக்கூட உலுப்பி எடுக்குது. ஓ. வயதும் போவிட்டுதுதானே. எனியும் பின்னே என்ரை உடம்பு தாங்கிறனெண்டதே! அதுசரி, உனக்கு நடுங்கேல்லேயே சின்னத்துரை?''

"சும்மா, சாடையா."

"ஓ, நீ இளந்தாரிதானே. நானும் உன்ரை வயதிலே உப்புடித்தான். நீயாவது உடம்பிலே சட்டை போட்டுக் கொண்டே சாடையா நடுங்குது எண்டிருய். நான் அப்ப மேலிலே துண்டு இல்லாமலே இருந்திடுவன். இப்பவும் உவளவாவது தாக்குப்பிடிக்குதெண்டால் அப்பதைக் குரக்கன் புட்டும், ஒடியல் புட்டுந்தான் . அது சரி கடலைப் பாத்தியே? அலையள் ஒவ்வொண்டும் பனையள்ளை உயரத்துக்கு வருகுது. இண்டைக்கு சனசந்தடியைக் கண்டாப்போலைதான் உவளவு கொந்தளிக்குது. வெளிச்சக் கூட்டிலை இருந்து வாற வெளிச்சம் அலையள்ளை படேயிக்கை விடிஞ்சுவாற காத்தாலைச் சூரியனைப்போலை கிடக்கு. பேந்து வெள்ளி விறிசு கொளுத்திறமாதிரியும் அலையள் சிதறிப் பறக்கையுக்கை நல்ல வடிவாக்கிடக்கு... என்னடாப்பா, இப்பவே கொட்டாவி விடுருய்? கள்ளுக்கும், நித்திரைக்கும் நல்லாக் கதைக்கவேணும் சின்னத்துரை. இல்லையெண்டால் ஒரேயடியா மொச்சுப்போடும். பின்னை ஒரு நாலஞ்சியத்து கடலையைக் கச்சானை வாங்கிக் கொறியன்."

"ஓமம்மான். நானும் அப்பிடித்தான் நினைச்சனுன். கடலைக்காறியளை இஞ்சினையிக்கை கிட்டக்கிளலையும் காணேல்லை."

"உதிலை திரும்பினுப்போலைதானே, ஒருக்கா எட்டி மிரிச்சு போவிட்டு வாவன். உன்படை என்படை தெரியாத உந்த நரல் சனத்துக்கை வலு கவனமாப் போவிட்டு வருவியே? உண்ணுணேயடா சின்னத்துரை, மறந்திடாமல் எரப்பன் சுண்ணும்பு கிள்ளிக் கொண்டா. இஞ்சை கறண்டத்துக்கை கிடக்கிறது கலடு பத்திப்போச்சு."

"அதுக் கென்னம்மான். கொண்டாறன்."

"பத்திரம். பத்திரம். பாத்துப் போடா. பேந்தாரும் தாறுமாருக் கிடக்கிற பெண்பிரசுக்கு மேலை மிரிச்சுப் போடாதே. கழுத்தான் காதான் அறுக்க வந்த கள்ள

னெண்டு பிடிச்சுக் கொண்டு போடுவாங்கள். நானிருக் கிற குறிப்புத் தெரியுமல்லே? சரி, சரி. போட்டுச் சீக் கரம் ஓடியா.''

'நல்ல பொடியன். அறுதலியெண்டாலும் வலு அடக் கொடுக்கமா வளத்திட்டாள் பொட்டை. பின்னை என் னட்டையொரு விடுகாலிப் பொடியன் இருக்கே, நானி ருந்து வளத்தே தறுதலையாப் போட்டு தெண்டால்... ஏதோ கிரகதோசமெண்டு செங்கட்டி வேலுப்பிள்ளைச் சாத்திரியார் சொன்னவர். அதுதான் அவனை உப்புடிக் கொண்டு சுத்துது. எனக்கென்னம்மோ நம்பிக்கை யில்லை. திருந்திறவனெண்டால் ஒரு கட்டையிலை கட்டின பிறகும் திருவாலியாத்திரிவானே? பின்னை மூத்த வன் குமாரசாமிதான் எனக்கு இந்தத் தினத்திலை ஒருபிடி அரிசியெண்டாலும் என்ரை நாமத்தைச் சொல்லிக் குடுக் கும்.

'எங்கை உவன் பொடியன் போனனை போனன், என்னும் காணேல்லை. குறிப்புக் கிறிப்புத் தெரியாமலுக்கு எங்கனுச்சும் அலையிருனுக்கும். நான் நினைச்சது சரியாத் தான் போச்சுது. அங்கினையுக்கை ஆரோ ஒருதன் மிலாந்திருன். ஓ, அவன் போலைதான் கிடக்கு.'

"எட பொடி, சின்னத்துரை... இஞ்சையிஞ்சை, இந்தப் பக்கமா வா... கவனம். பாத்து வாடா மேனை."

'எத்தினை வரியமா வந்து போற எனக்கே திகைப் பூண்டிலை மிரிச்சது மாதிரிக் கிடக்குது... இதுகள் முந்த நாள் வந்த தவ்வலுகளுக்கு என்ன தெரியப்போகுது.'

அம்மான். சின்னத்துரைக்கு கலங்கரை விளக்காகித் திசை காட்டினர்.

"நல்லவேளை அம்மான், நீங்கள் கூப்பிடயில்லையெண் டால் நான் அங்காலை அள்ளுப்பட்டுப் போடுவன். திக்குத் திசை ஒண்டும் தெரியேல்லை அம்மான்."

"சரி, சரி. சுண்ணும்பு கொண்டந்தனியேடா?"

வெற்றிலைக் கடுதாசியாயிருந்த 'சிமெந்து' முழுத்தாள் ஒன்று மடிப்புக் குலைக்கப்படுகிறது. அதற்குள் பல பிரிவுகள். அதில் ஒன்றுக்குள் பண்டாரத்திற்குக் கொடுக்க வேண்டிய தெற்பைக் காசும் தட்சணைக் காசும். மற்றென்றுள் 'வசுக்கூலி'. வேறொரு மடிப்புக்குள் விரல்கள் ஓடி உலாவி வெற்றிலைப்புறமாக வந்து நிற்கின்றன.

பட்டாணிக் கடலை சின்னத்துரையின் பற்களுக்குள் அகப்பட்டு படீர் படீரென்று வெடித்து நொருங்குகின்றன. அவனுக்கு வந்த நித்திரையைத் தகர்த்தெறியும் 'நித்திரை டைனமைட்' ஆக அது இருந்ததால் அவன் வெகு உற்சாகமாகவே காணப்பட்டான். என்றாலும் அம்மான்தான் பேச்சைத் தொடங்கினர்.

"போன கோசும் நீதானை வந்து அரிசி குடுத்தெனி கொப்புவுக்கு?" — பாக்குத் துகள்களும் வெற்றிலையும், கோலிக் குழிபறித்துக் கிடந்த உள்ளங்கைக் குண்டிற்குள் வைத்து வலப் பெருவிரலால் நசுக்கப்படுகின்றன.

"ஓமம்மான்."

இருளின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் கடலைப் பார்த்துக் கொண்டிருந்த சின்னத்துரை, அம்மானுக்குப் பதிலளித்தான். அந்த உடனேயே அவன் பார்வை மறுபடியும் இருளை ஊடறுத்துக் கடலைப் பார்த்தது 'கடல் அப்படி அடித்துப் புரண்டு அழுவதே இருளினின்றும் தன்னை விடுவித்துக் கொள்வதற்காகத்தான்' என்று அவனுக்குப் படுகின்றது. கடலின் அந்த இழவோலத்தைக் கேட்டுப் பாய்ந்தோடிவரும் கலங்கரை விளக்கின் ஒளிக் 'கிறிஸ்', கடலைத் திருகும் அந்த இராட்சத இருளைக் குத்திக் கிழிப்பதான பிரமை, சின்னத்துரைக்கு. அவன் அந்த ரசனையிலேயே தன்னை வெகுநேரமாக ஈடுபடுத்திக்கொண்டிருந்தான்.

அநுமானங்கள் பிரிந்து நிற்கமுடியாத கஞ்சாக் கசக்கல். அம்மானின் உள்ளங்கைக்குள் இரத்தம் பிழிந்தது. நாட்டு வைத்தியன் சாராய ஊறல் தூளுக்குச் சொல்லிக்

கொடுக்கும் பிரமாணமாக, மூன்று விரல்சேர்க்கையுடன் வாய்க்குள் அனுப்பப்படுகிறது துவையல். நாக்கு, கொடுப்பிற்குள் 'அதக்கும்' தொழிலை அந்தரங்கமாகவே செய்கிறது. கொடுப்பசைவும், மிடறுமுறிதலும் 'கொடுக்கல் வாங்கல்' செய்கின்றன. 'சுத்துப் பொயிலையில்' தடித்த பிரதேசமாகப்பார்த்து ஒரு 'நுள்ளு'க் கிள்ளப்படுகிறது. 'இன்னுமொரு சுத்துக்குப் போதும்' என்ற நினைவோடு கடதாசியை மடித்து மடிக்குள்...

வெற்றிலை போட்ட உற்சாகம். நித்திரைக்குப் போக்குக்காட்டிய எக்களிப்பு. காற்றுவாக்கில் எட்டி ஓர் 'பீச்சல்' துப்பல். குளிகைப் பிரமாணமடைந்த புகையிலைத்துண்டு— வெற்றிலை கரையாமல் இருப்பதற்காக — கொடுப்பிற்குள் அனுப்பப்படுகிறது. குதிபோட்டுவரும் கதைக்கு, பாவம், சின்னத்துரைதான் பக்கத்தில் இருக்கின்ருனே.

"போன வரியத்தைக் காட்டிலும் இந்தமுறை சனம் வலு குறைவு; இல்லையே, சின்னத்துரை ?... போன கோசு வந்தவையின்ரை தேப்பன்மார் திரும்பி வந்திட்டினமோ ? இல்லையெண்டால் போனமுறை குடுத்தவை இந்தமுறை அரிசி வாங்கத் துவங்கியிட்டினமோ என்னவோ ? ...இஞ்சை கீரிமலைக்கு வந்தால் செத்தவங்கடை கூப்பன் வைச்சு அரிசி வாங்கிறவையேக் கண்டுபிடிச்சுப் போடலாம்" என்று சொல்லிக்கொண்டுவந்த அம்மான் கதையைத் துண்டித்த வேகத்துடன் அவசரமாகச் சின்னத்துரையை முழங்கையால் இடித்து, எதிரே சென்ற யுவதிகளைச் சாடை காட்டினர்.

அந்த யுவதிகளை மோப்பமிட்டுச் செல்லும் இரு யுவர்கள். அவர்கள் இருபாலாரிலும் ஆங்கில நாகரிகம் அப்பட்டமாகத் தெரிந்தது.

அம்மானுக்கும் சின்னத்துரைக்கும் அவர்கள் பேசிய பரிபாஷை விளங்கவில்லை. குமரிகளின் சிரிப்பு இனிமையாகத்தான் கேட்கிறது. 'எங்கை?' என்ற உள்ளார்த்தமான கேள்வி இருவரின் நெஞ்சிலும் சுழியோடிவர, ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கிருர்கள்.

"ஆக்களில்லாத பக்கத்துக்குப் போகினம் அம்மான்"— சின்னத்துரை சொன்னன்.

"ஓமோம்! அப்பதானே வசதி. அங்காலே கொஞ்சம் மறைவுகளும் கிடக்கு" என்ருர் அம்மான்.

"இவையளுக்கும் தேப்பன்மார் இல்லேயே?"

"இந்தக்காலத்திலே தேப்பன்மார் இருக்கிறதும், இல்லாமலுக்குப் போறதும் ஒண்டுதான் சின்னத்துரை. தேப்பன்மார் உயிரோடை இருக்கேக்கையே இண்டைக்கு இஞ்சைவந்து எத்தினைபேர் அரிசி குடுக்கினம் தெரியுமே?"

"என்னம்மான் சொல்லுறியள்? எனக்கொண்டும் விளங்கேல்லே."

"உனக்கு விளங்காதுதான் சின்னத்துரை. விளங்கச் சொல்லுறன், பின்னேக் கேளன். உவன் சின்னத்தம்பியை உனக்குத் தெரியுமெல்லே?"

"ஆரம்மான், பள்ளியவத்தையில்சின்னத்தம்பியைத் தானே சொல்லுறியள்? தெரியும்; நல்ல மனிசன்."

"நீ ஒரு அறுதலிமேனடா. வெளுத்ததெல்லாம் பாலெண்டோடா நினேக்கிறது? அவனும் உங்கினேயிக்கை வந்திருப்பான்ரா, பாத்துப் பேசு. பேந்தேன் எங்களுக்கு அந்தப் பொல்லாப்பை. அவன் ஆருக்குப் பிறந்தவன் தெரியுமே?"

"தெரியாதம்மான். ஆருக்கு?"

"முடமாவடிச் சந்திரசேகரிக்கல்லேயெடா பிறந்தவன். ஆத்தை ஆடின ஆட்டந்தெரியாது. அவர் பெரிய வெண்டிறேசன் கணக்கு வல்லவன் பம்பரம் மண்ணிலேயும் ஆடும், மற்ற இடங்களிலேயும் ஆடும்."

"அப்ப தேப்பன் குருநாதிக்குத்தானே அரிசி குடுக்க போன முறையும் வந்தவர். இந்த முறையும் உங்கினேயுக்கைதான் வத்திருப்பார்."

" நான் சொன்னன், நீ ஒரு கள்ளு முட்டியெண்டு... எட சின்னத்துரை, குருநாதி உயிரோடை இருக்கை யுக்கைதான்ரா உவன்ரை தாய் சந்திர சேகரியோடை கூடியிட்டாள். அந்த இழவை ஒருநாள் கண்ணலை கண் டாப்போலைதானை அவன் கிடந்து அழுந்திச் செத்தவன். அப்ப இந்தப் பிறவு பிறந்திட்டுது. அவனையும், சந்திர சேகரியையும் கண்டனிதானே ? ஒரே அச்சாக இலையே ரண்டு பேரும் ?"

" ஓமம்மான், அப்பிடியே சங்கதி? அப்ப, இப்ப உயிரோடை இருக்கிற சந்திரசேகரிக்குத்தான் அரிசி குடுக்க வந்திருக்கிறுனெண்டு சொல்லுங்கோ. அப்ப பேந்தேனம்மான் குருநாதியின்ரை பேரைச் சொல்லி அரிசி குடுக்க வாறவன்? "

"அவனையுந்தான் ஏன் குறை சொல்ல வேணும்? எல்லாம் அந்தப் பத்தினிப் பரத்தை ஊருக்காக வேசம் போடுருள்."

இருவரும் மௌனமாகிக் கடலைப் பார்க்கிருர்கள்.

'பரத்தைக்கு வாயிருப்பதுபோல், கடலுக்கும் அலை இருக்கிறது' என்று படுகிறது அம்மானுக்கும் சின்னத் துரைக்கும்.

---

# வேலி

அந்த யாழ்ப்பாணத்துக் கிராமம் தன்னுடைய சுறு சுறுப்பை இழக்கின்றது. பொழுது சாய்ந்து. இரவு புகுந்து விட்டது.

தாய் அடுப்படியில் வேலையாக இருக்கிறாள்.

படிப்புப் பராக்கில் மேசையருகில் அமர்ந்திருந்த மகள், "விளக்கு வைச்சு எவ்வளவு நேரமாப் போச்சுது. எங்கை அம்மா தம்பி ?" என்று கேட்கிறாள்.

அவன் புள்ளை நாலைஞ்சு நாளாய் நாண்டு கொண்டு நிண்டான் படத்துக்குப் போக வேணும் எண்டு. கொய்யாவின்ரை குணம் தெரியாதே. அவர் வந்தால் அவனாலை ஒரு இடமும் உசும்பேலாது. அதுதான் போட்டு வரட்டு மெண்டு விட்டனான். பத்து மணிக் கிடையிலை வந்திடுவான். பாவம், அவனுக்கும் மற்றமற்றப் பொடியளைப்போலை ஆசை இருக்குந்தானே ?"

"உதென்னணை நெடுக அடுப்பெடிக்குள்ளை இருக் கிருய் . ?"

"உன்ரை படிப்பைக் கெடுக்கலாமே? கொய்யாவுக்கு நான் சுடுற தோசை எண்டால் நல்ல பிரியம். அங்கை மனுஷனுக்குக் கடைச் சாப்பாடுதானே. அதுதான் உழுந்து ஊறப்போட்டனுன். அதை ஒருக்கா அரைக்கப் போறன்."

'சிங்கார வேலா...' என்ற பாட்டைச் சீழ்க்கை யடித்து வீட்டுப் படலையை ஒரு உருவந் தாண்டியதை மகள் அறிவாள். சந்தேக மில்லை, அது 'சிங்கார வேலா' பாட்டுத்தான்.

"வயித்தைக் கலக்குது... ஒருக்காக் கக்கூசுக்குப் போட்டு வாறன்"—தனக்குத்தானே சொல்வதைப் போல, தாய்க்கும் கேட்கக் கூடியதாக மகள் சொல்லுகிருள்.

"எதுக்கும் கைவிளக்கை எடுத்துக் கொண்டு போ பிள்ளை......"

"இஞ்சேரும். நாளைக்கு ஐயா கொழும்பிலையிருந்து வாருர். ஏதேன் நினைப்பிலை என்னைப் பாத்துச் சிரிச் சிடாதையும். ஒழுங்கையாலை சீக்காய் அடிச்சுக் கொண்டு போகாதையும். அவர் சரியான சமுசியக்காறர்" என்று மிக இரகசியமான குரலில் மகள் தன் காதலனிடம் சொல் லுகிருள்.

"உனக்கு ஐயா எண்டால், எனக்கு அவர் மாமா தானே? உன்னை எனக்குக் கட்டித்தரச் சொல்லிக் கொய்யாவைக் கேக்கப் போறன்."

"ஆளைப் பாருங்கோவன்...... வந்து கேட்டால் விளக்குமாத்துக் கட்டைத்தான் எடுத்துத் தருவார். நான் கதைக்கிற எண்டு தெரிஞ்சாலே கொண்டு போடு வார்...... உங்களுக்கு நெடுகச் சேட்டைதான். கார் ஓட் டிற பழக்கத்திலை நெடுக இதிலை தனகிறதுதான்......"

“கொய்யா வந்தால் பாக்கக் கூடாது, பேசக்கூடாது எண்டெல்லாம் சொல்லுறீர்...... அப்ப கெதியா வாருமன் ......”

“அம்மா வந்தாலும் வந்திடுவா...... போதுமப்பா, போதும்......”

..................

“நான் உங்களைத்தான் கட்டுவன். இது சத்தியம்.”

“அப்ப இன்னும் படிக்கப் போறனெண்டு சொன்னீர்?”

“ஐயா படிக்கச் சொல்லுறதாலே படிக்கிறன். சும்மா படிக்கிறதாலே என்ன கெட்டுப் போடுது.”

“என்ன, போனவளை இன்னும் காணம்...... புள்ளை, புள்ளை”—அடுப்படியிலிருந்து தாயின் குரல் கேட்கிறது.

“வந்திட்டனம்மா...... நான் வாறன். நீர் கெதியாப் போயிடும்.”

காதலன் கதிகாலால் ஏறி, வேலியைத் தாண்டி மறைகின்ருன்.

அந்த இளங் காதலர்களின் சல்லாபத்தைக் கண்ணுற் கண்ட வேலி பெருமூச்சு விடுகின்றது.

“இதிலே இருப்பம். வீட்டுக்கை வேண்டாம். பொடியன் படத்துக்குப் போட்டுவந்து நல்ல நித்திரைதான். ஆனல், பொடிச்சிதான் இருமி இருமிக்கொண்டு கிடக்கிருள். அவள் பக்குவப்பட்ட பிள்ளையல்லே......” என்று தாய் சொல்லுகிருள், தன்னை மறந்த இன்பத்திற் கிணற்றுக் கட்டில் சாய்ந்து கொண்டே.

“ஐயா வந்தால், எத்தினை நாளைக்கு இஞ்சை நிப்பார்?”

“ஒரு கிழமை லீவு எடுத்துக்கொண்டு இஞ்சை வாருராம். அதுதான் இண்டைக்கு கட்டாயம் வரவேணுமெண்டு சொன்னனுன்.”

“இந்த வருசமும் நீர் சொல்லி, எனக்குத்தான் உங்கடை மரங்களை வாங்கித் தரவேணும்.”

"உனக்கு இல்லாமல் வேறை ஆருக்கு அவர் குடுப்பார்...... வேறை ஆருக்கேன் குடுக்க நான்தான் விடுவேனே?...... இது என்ரை சீதண வளவல்லே...... நல்ல வடிவாக் கட்டிப்பிடியும்......"

..................

"ஓம், போயிட்டுவா, புள்ளையும் இருமிருள். இஞ்சை, நாளைக்கு ஐயா நிப்பார். பத்துமணிபோலை ரண்டு போத்தில் பனங்கள்ளுக் கொண்டுவந்து குடும். பாவம், அது கொழும்பிலை ஒண்டும் தொடுறேல்லே......இஞ்சை வந்தாத்தான்......"

"எனக்கு அம்மா சொல்லவேவேணும். ஒவ்வொரு கோசும் ஐயாவுக்குக் குடுக்கிறனுன்தானே?"

அவன் வேலியைத் தாண்டிச் செல்கின்ருன்.

வீட்டு எஜமானியம்மாளின் சல்லாபத்தையும் நேரிற் கண்ட வேலி மீண்டும் ஒரு பெருமூச்சு விடுகின்றது.

"அடுத்தநாள் பத்துமணி இருக்கும். ஐயா வந்து விட்ட கலகலப்பு, வீட்டிலே விரவிக்கிடக்கிறது.

ஒரு தடியை எடுத்து, வேலியிலுள்ள கறையான்களைத் தட்டிக்கொண்டிருந்த ஐயா, "வேலியும் நல்லா உக்கிப் போச்சுதுபோலை கிடக்குது" என்று சொல்லுகிருர்.

"ஓமப்பா... புள்ளையும் கடுக்கண்டிட்டுது. ரண்டு வரிச்சு மேலாலை உயத்தி அடைக்கத்தான் வேணும். அடுத்த மாதம் சின்னச் சீட்டின்ரை காசு வரும்" என்கிருள் தாய்

பரம்பரை பரம்பரையாக யாழ்ப்பாணத்துக் கௌரவத்தைக் காப்பாற்றிவரும் அந்த வேலி தான் ஓரடி இன்னும் வளரப்போவதைப்பற்றிச் சந்தோஷப்படவில்லை. அது மீண்டும் ஒருதடவை பெருமூச்செறிந்து. யாழ்ப்பாணத்துக் கௌரவத்தைக் காப்பாற்றுங் கருமத்தை இயற்றிக் கொண்டிருக்கிறது.

---

# விடிவு

நித்திரை வரமாட்டேனெங்கிது; கால் கையளையெல்லாம் அங்கினைக்கங்கினை எறிஞ்சு மல்லாக்குப்பறிய ஆமையைப் பிரட்டினதுபோலை கிடந்து உளத்தினலும், சர்வாங்கியமெல்லாம் விட்டுப் போறது மாதிரி உளையுது. ஓ, எனி எனக்கென்ன நித்திரை? அறுவது செண்டாலே வீட்டுக்கு நாய் வேண்டாமெண்டு சொல்லுவினம். இப்ப எனக்குத்தான் தொண்ணூறைத் தாண்டிப் போட்டுதே! பேந்தென்ன?...... மழை வாறதுக்கும் உப்புடி உழையிறது. மழையும் வரும்போலைதான் கிடக்கு. ஆகாயத்திலை வெள்ளி ஒண்டும் பூக்கையில்லை. கைவிரலுகளையும் கால் விரலுகளையும் மொழிக்கிடுத்திஞல் ஒரெப்பன் சுகமாக் கிடக்குமெண்டு நெட்டி சவட்டிப் பாக்கிறன், சவம் ஒண்டும் முறியிதில்லை...... இரவிலை உப்புடி மொழிக்கிடுத்திஞல் குடிநட்டம் வருமெண்டும் சொல்லுறவை.

உப்பிடி முழங்காலுகளை வயிற்றுக்கிள்ளை முண்டு குடுத்து குறவணவன் புழுப்போலை குறண்டிக்கொண்டு கிடந்தால் இல்லுப்போலை சுவாத்தியமாக் கிடக்கு. கொஞ்

சத்துக்குத்தான் அதுவும் உப்புடிக்கிடக்கலாம். பின்னே ஓரேயடியா நெடுக அப்பிடிக் கிடந்தால் பேந்து எனக்கு நாரிப்பிடிப்பும் வாறது......

ஆ... ஹ் .. ஆய்... இந்தச் சவம் கொட்டாவி வீமன் நாய் ஊளையிடுறமாதிரி சும்மா சும்மா குழறிக்கொண்டு வருகிது இழவு... இது நித்திரைக் கொட்டாவி இல்லை; பின்னைப் பசிக்கொட்டாவியே ? என்ன சவத்தை, இடி விழுந்த வயிருக்கிடக்கு; ரண்டு மரவள்ளிக்கிழங்கை நல்லாக் கனிஞ்ச நெருப்புத் தணலுக்கை தாட்டெடுத்து. பச்சைமிளகாய் வெங்காயத்தோடை, ரண்டு கட்டி உப்புக் கல்லும் சேத்து விழுங்கினது, அதுக்கிடையிலை சமிச்சுப் போச்சே ? சே, வயித்துக்கை அப்பிடித் தெரியேல்லை; சமியாப்பாட்டுக் குணமா இடிமுழக்கம்போலை வயிறு கடாம்புடாமெண்டு கத்துது. ஊத்தை வயிறு; என்ன இழவைப் போட்டாலும் ஒத்துக்கொள்ளுது. சவத்தை விடியப்புறம் ஆமணக்கம் பத்தையுக்கை கொண்டேக் கொட்டுறதுதானே...... அது வயித்துக்கை கிடக்கேக்கை என்னவாத் தூக்கியொண்டு அதைக் கொழுப்பெண்டு நினைக்கிறம்..... பேந்து வெளியாலை வந்தாப் போலைதானே திரும்பிப்பாராம ஓடியாறம். எல்லாத்திலையும் நாங்கள் உப்புடித்தான்... சும்மா சொல்லப்பிடாது, நல்ல செம்பாட்டுக் கிழங்குகள். தோலெல்லாம் வெடிச்சு மாந்தி நல்லா மலந்தாப்போலை வாய்க்கைபோட மாவா உலுந்துபோச்சுது. என்ரை பொக்கை வாய்க்கு அது பொது பொதெண்டு அப்பிடியும் இப்பிடியும் ரண்டுதரம் அதக்கிப்போட்டு விழுங்கேக்கை நல்ல உரிசை. பல்லில்லாட்டி என்ன ?

இப்ப கிழங்கும் கடையுமாத்தான் கிடக்கு. நல்ல மலிவு. மனுஷன் செத்தும சிவலோகம் போவிட்டான் பாவி. ஆர் ? என்ரை இவர்தான் ! அந்தாளின்ரை செண்டைக் கால் பருப்பத்திலை ரண்டு கிழங்குகளும்......

இல்லுப்போலை சுடுதண்ணி குடிச்சால் இந்த இழவு விழுந்த எதிரெடுப்பைக் கட்டுப்படுத்திப் போடலாம்; சவம், புளிச்சுப் புளிச்சுக்கொண்டல்லே மேலுக்கு வருகிது......

உந்த நெருப்புப் பெட்டியை உங்கிளையிக்கை வைச்சன் சுத்துப் பத்தவைச்சுப்போட்டு .... ஓ. ஓ, மறந்திட்டன்; மறதி ஒண்டுதான் வயசு போவிட்டது எண்டதைக் காட்டுது. பனிக்கு இளவாளிச்சுப்போடுமெண்டெல்லே மார்புக் கச்சையுக்கே உடம்புச் சூட்டுக்கா போட்டுவைச்சனான். இப்ப எழும்பிக் குந்தேக்கைதான் கிலுங்கிச் சத்தம் கேட்டுது......

"எடியே ராசாத்தி, மழை பொடுபொடுக்குமாப்போலை கிடக்கு...... வெளியாலை துணிமணி கிடந்தால் எடுத்துப் போட்டிட்டுப் படுங்கோவன்ரி."

உந்தப் பாழ்படுவார் படுக்கைக்குப்போனல் சவங்கள் மாதிரித்தானே! மாவிலிவாணன்கூட வரியத்திலை ஒருக்கால் திரும்பியாவது படுப்பான்; இதுகள் கோதாரியளை இண்டோடிண்டு இடிச்சு இடிச்சு எழுப்பினலும் எழும்பாதுகள்......

உதார் வீமண்ணுவே? எங்கெத்தெயாலை வாருய்... உனக்கும் குருகுருப்புக் கொண்டல்லே சுத்துது. சப்பிச் சப்பிப்போட்டு பெம்பிளையில்லாட்டிக் கிடக்கமாட்டியே? அடி நாய் சென்மமே! என்னத்தைத் திண்டிட்டு வந்தனி? ஓரேயடியா நாறித் துலைக்குது.

நான் சொன்னன், உவளுகள் என்னும் எழும்பேல்லைத்தாளை. ஆடுகளும் அடிச்சுப் பிரண்டு கத்துதுகள். சரியான பிரளயமாத்தான் மழை கொட்டப்போகுது. ஈசல் பூச்சியளும் கிலுமுலெண்டு பறக்குது. எங்கை இந்த இடிவிழுந்த பானமடியை இஞ்சிளையிக்கை வைச்சன்...... தேத்தண்ணிக் குடுவை மூடாட்டிக்கு இந்தக் கெட்டாரக் கெட்ட சவங்கள் அதுக்கிள்ளை விழுந்து அவியப்போகுதுகள்......

எங்கடை தீவாளியையும், காத்தியை விளக்கீட்டையுமண்டித்தான் இந்த ஊருக்கு புதுநாணயமா மழை வாறது. பிள்ளையா கதையுக்கைதான் ஒரு பாட்டம் முறையாப் பிடிச்சுக்கொள்ளும். அதுவும் கனத்தநாளும் அதுவு

மாத்தான் துவங்கியிருக்கு. இண்டைக்குப் பறுவம்வந்து எத்தினை நாள்?...... வெள்ளியோடை வெள்ளி எட்டு, சனி ஒன்பது, ஓ, ஓ, சரியான அட்டமி நவமிக்கைதான்! ஒரு கரை கண்டுதான் விடும். நாலைஞ்சு விறகுத் தூளைப் பொறுக்கி வைக்கவேணும், அடைமழைக்குச் சுடுதண்ணி யாவது வைச்சுக்கிச்சுக் குடிக்க உதவும். தீவாளி நாளை யிலை உந்த மழை உப்புடி அடிதண்டல் படுதண்டலாக வாறதும் ஒண்டுக்கு நல்லதுதான். உண்ணுணை, இல்லை யெண்டால் உந்தப் பிரளுவாங்கள் குடிச்சுப் போட்டு நிண்டு தெருவழியிலை பெண்பிரசு வெளிக்கிட முடியா மலுக்கல்லே உரிஞ்சுபோட்டு நிண்டு ஆடுவாங்கள்.

என்ரை இவரும் உப்புடிக்கொத்த நல்லநாள் பெரு நாள்ளை இல்லுப்போலை பாவிக்கிறவர்தான். குடிச்சாலும் நல்ல மரசாதி... .. அன்னபரிபூரணம் வயித்திலை சனிக்க முந்தித்தாளுக்கும்...... ஓ, ஓ! மனுஷன் அப்பகொஞ்சம் கண்விண் தெரியாமத்தான் போடுறது. சும்மா அநியா யம் சொல்லப்பிடாது அப்பவும் அந்தாள் பிழை விடுற தில்லை. அதிலை ஒரு தீவாளிக்குத்தாளுக்கும், அதை எனக்கு இப்பநினைச்சாலும் சிரிப்புச் சிரிப்பா அடக்க முடியாமல்வரு குது. என்ன, முழுக வந்த மனுசன் அரப்புத் தண்ணியைச் சரக்குத் தண்ணியெண்டு குடிக்கிறதோ! அண்டைக்கு மனுசனுக்கு வேட்டியோடை வயித்தாலையும் போட்டுது சவம்! அண்டுமண்டைக்குப் பிறகு மனிசன் வலு அள வோடைதான் செய்யும்... நான் சொன்னன், புங்கை நல்ல பாட்டமாகத்தான் மழை புடிச்சிருக்கு.

தண்ணி நல்லா மலமலவெண்டு கொதிச்சுப் பொங் குது. நான் என்னவோ நினைப்பிலை இருந்திட்டன்...... எங்கை இந்த தேத்தண்ணி இசத்துகளை இஞ்சினையுக்கை வச்சன்... எனக்கும் பதகளிப்பிலை. பங்கை பக்கத்திலை அடுப்பு முகட்டிலை கிடக்குமாப்போலை கிடக்கு... எட அநி யாயத்தை. அது முழுக்க நுள்ளான் குவிஞ்சுபோய்க் கிடக்கு. பத்தியெரிவான்ரையள் எங்கையிருந்து வந்து குவியிதுகளோ? தேங்காய்க் கையிலையும் கவிட்டுவிட்டன். அதுக்கையும் செம்மிக்கொண்டுதான் இருக்குதுகள். அடுப்

புக்கை கொட்டக்கொட்ட பொரிவான்ரையள் எங்கை யிருந்து வந்து குவியுதுகளோ... நுள்ளாளுேடை திண் டாக்குடிச்சால் கண் வெளிக்குமெண்டு முன்னைக்காலத் திலை பூட்டாத்தை சொயத்துக்குச் சொல்லுவா...... ஏன் என்ரை கண்ணுக்கு இப்ப என்ன வந்திட்டுது? எனக்கு ராவிலை சரியான பாம்புக்கண்; பகல்லேதான் சாடையான புகைச்சல். அப்ப ஒருக்கால், அம்பதிலையோ அம்பத் தஞ்சிலையோ எண்டுதான் நினைக்கிறன்... எனக்கு நல்லா நினைவுக்கு வருதில்லை... ஓ, ஓ, அப்பிடித்தான், துப்பரவா ஒருக்காப் பார்வை தெரியாமலுக்கு மறைச்சுப் போட்டுது. பேந்து இப்ப தொண்ணூறிலை நல்லாத் திறந்து போட்டுது. அது அப்பிடித்தானும். இடையிலை ஒருக்கால் வெள்ளெழுத்து வந்து பிறகு தானு அது வெளிச்சுப் போமாம். நான் என்னத்தைச் சொல்ல? எனக்கு எத்திணையோ வயதுக்கிளையவள்தானே ஆச்சிப் பிள்ளை; பாவம், இண்டைக்கு அது இருந்து தடவுது. அதெல்லாம் பார்வைச் சீத்துவக் கேட்டிலைதான் உப்புடி வாறது.....

என்ரை வலது என்ன இருக்கு? எல்லாம் அந்தப் பெருமானின்ரை புண்ணியத்தாலைதான் நான் உப்புடி இருக்கிறன். போனமாதம் கடசிச் சனிக்கிழமை ஒரு எள் ளெண்ணைப் பொட்டணி எரிச்சிருக்க வேணும். எல்லாம் அவருக்குத் தெரியாததே? காசுக்குருசு செம்பாலடிச்ச வெள்ளைச்சல்லியுமில்லாமக் கிடக்கையிக்கை .... அப்பனே, பெருமாளே! வாற மேலைக்கு மடிப்பிச்சை எடுத்தெண் டாலும் எள்ளெண்ணைப் பொட்டணி எரிப்பன்......

உதென்ன நல்லூரு மணிச்சத்தம்போலை கிடக்கு... குளிருக்கு வலு கணகணப்பாக் கேக்குது. அப்பனே முருகா ஏன்தான் என்னும் இந்தக் கட்டையை வைச்சுக்கொண்டு இருக்கிறியோ? ஒரேயடியாக்கொண்டுபோவெண்டு எப்பகூடச் சொல்லுறன். எதுவோ நான்செய்த ஊழ்வினை' என்னும் கிடந்து அழுந்தச் சொல்லி விட்டிருக்கிருய்... அதுக்கு நீ என்ன செய்வே?

சாதிசனமுமில்லே; கொடிகோத்திரமுமில்லே எல்லாம் ஒரு தனே நம்பி ஓடியந்ததாலே முழுக்கப் பத்தி எரிஞ்சுபோச்சு... பிள்ளே குட்டி ஏன் இல்லே... உனக்குத் தெரியாதே? மூண்டு பிஞ்சுகளேத் தந்திட்டு அதிலே ரண்டைத் தட்டிக்கொண்டு போட்டாய்... மற்றது ஒண்டு... ம்... அது என்னேக் கவனிக்காட்டிலும் எங்கையெண்டாலும் நல்லா இருக்க வேணும், என் தங்கவேலே. அதுக்குக் குடுத்த நாய்க்குட்டியளுக்கும், தாலிப் பிச்சைக்கும் ஒரு குறையும் வராமல் காப்பாத்திப்போடு... நான்தான் ஆற்றையும் கோடிக்கையாவது அண்டி இருந்திட்டுப் போடுவன். அது என்னே விட்டெறிஞ்சு போட்டுது எண்டுறதுக்காக, நான் என்ரை வயித்தெரிச்சலேக் கொட்டி சாபக்கேடு போட்டால் நல்லாயிருக்குமே? ..... அதுகள் எங்கையெண்டாலும் நல்லா இருக்கட்டும். அதுதான் நான் உன்னேக் கையெடுக்கிற புண்ணியத்துக்காக நீ இதைச் செய்துபோடு.

தேத்தண்ணிக்கு சீனி போதாதுபோலே கிடக்கு. கிடந்ததைத் தட்டிக்கொட்டி பேணியை வழிச்சுத் துடைச்சுத் தானே போட்டனுன் நான் முழிச்சுக்கொண்டிருக்கிறனெண்டாப் போலே தீவானுமே கடையைத் திறந்து வைச்சுக்கொண்டிருப்பான்?...... அநியாயப்படுவான்ரை கடையிலே எல்லாம் சரியான ஒறுப்பு; கடன் கிடன் எண்டால் முகங்கோணுமலுக்கு விட்டுத் தாறவன். அதாலே தான் பாக்கிறன். அறுவானிட்டை ஒரு அஞ்சியாம் கடன் வாங்கினுல், கொஞ்ச நேரத்தாலே போய்ப்பாத்தால் அது பத்துச் சதமாக் குட்டிபோட்டிருக்கும். அவன் ஒரு மட்டெண்டாலும், அதிலே விப்பனேக்கு நிக்கிற குறுக்காலே போன குஞ்சுகள் நெறுவையை வலுவாக் குறைச்சுப் போடுங்கள்...

இஞ்சாலேயும் தூவானம் அடிக்குது. குளிருக்குச் சுடுதண்ணி சதிரத்துக்கு நல்லாய்க் கிடக்கு. அந்த மேச்சல் காரப் பத்தியெரிவான் கோவியனட்டைச் சொன்னனுன், மூலேக்கை கிடுகுகளே முறிக்காதையடா எண்டு. அறுவான் சவங் காவி கேட்டானே?...... பின்னே எனக்கு என்னம் பெண்டெல்லாம் பத்திக்கொண்டு வருது. இஞ்சைபாரன்,

ஏதோ வடிவாக் கிடக்குமெண்டு சொல்லி மேஞ்சான். இப்ப கொட்டில் புண்டமேகம்போலை அல்லோ ஊத்துப் படுது...... ஒண்டுக்கு நேரே கஞ்சிச் சட்டியை வைச்சாச்சு. மற்றதுகளுக்கு என்னத்தை வைக்கிறது ?...... வாசல் சாக்கையும இழுத்து விட்டாச்சுது...... உதார் வீமண்ணுவே?— சவத்தை, நான் திரத்தி நீ எங்கை போறது ? நீ திரத்தி நான் எங்கை போறது? உதிலை சாக்கிலை படன்.

ஒரு மணி இறயில் இப்பதான் வருகிது போலை கிடக்கு. இடியேறு விழுவான்ரை இஞ்சின் கோண்டா விலைப் பேத்துக் கொண்டு வாறது போலை சத்தம். இதிலை வரயிக்கை என்னையுமொருக்கா மற்றப் பாட்டுக்கு தூக்கிப் பிரட்டி மல்லாத்திப் போட்டுத்தான் போகும், சவம்.

எங்கை இந்த உரலும் உலக்கையும் ?...... இந்தச் சவத்துப் பாக்குப் பிளகுகளை இல்லுப் போலை நசுக்கிப் போட்டுப் போட்டால்தான் நல்லது. சுண்ணும்பும் கலடு பத்திப் போச்சுது...

இந்த உரல் இடிச் சத்தத்தோடை செல்லன் எழும்பியிடுவான். அவன் அப்பிடித்தானே சொல்லுறவன். ஒரு வேளை இண்டைக்கு இந்த மழையுக்கை இது அவனுக்கு கேக்குதோ என்னவோ? இஞ்சை இந்த ஒரு வேலியிக்கை கிடக்கிற சவங்கள் என்னும் எழும்பேல்லை யெண்டால்... சும்மா சொல்லப் பிடாது. அவர் போனுப் போலை, ஆர்?— இவள் பெட்டை ராசாத்திதான், அங்கினையிக்கை திண்டு கிடக்கிறனே, தின்னுமக் கிடக்கிறனே எண்டு அரைக்கண் வலக்கண் பாத்துக் கேக்கிறது பொடிச்சி! என்ரை இவருக்கு ராசாத்தி தூரத்துப் பேத்தி முறைதான். இவற்றை கூடின இரத்த உருத்துகளைக் காட்டிலும் இவள் பொடிச்சிக்கு என்னிலை ஒரு பச்சந்தான்.

பின்னை அதுகள், சவம், ஏன் நாயெண்டு திரும்பிப் பாக்காதுகளே. சரி, பாக்கத்தான் வேண்டாம்; ஆறுதலுக்கு ஒரு சொல்லாவது கேக்க வேண்டாமே ?......

அதுகளைத்தான் ஏன் குறை சொல்ல வேணும்?...... என்ரை வயித்துக்காலே வந்த இரத்தக் கட்டியே ஏனெண்டு கேக்கையில்லையாம், மற்றதுகளைப் பத்தி ஏன் குறை கதைக்கவேணும்?

இந்தக் கால் கோதாரியள்தான் கடியன் நாயள் பிடிச்சுப் புடுங்கிறதுபோலே வெடுவெடெண்டு உழையுதுகள் சவம். அதுக்கு உப்பிடி ரண்டு காலுகளையும் நீட்டிப் பின்னிப் போட்டுக் கொண்டிருக்க எப்பன் சுகமாக் கிடக்கு... பின்னை எவளவு நேரமெண்டு கையளாலே உருவுறது?... பேந்து சவம் கையளை என்னத்தாலே உருவி விடுறது?...

கை விளக்குக்கையும் எண்ணை இல்லைப் போலே கிடக்கு. அது பங்கை கண்ணைத் தூங்குது. சவம் நூந்தாலும் நூரட்டும். நீட்டின காலை இனி முடக்கிறதெண்டால் ஆராலே ஏலும்? சாந்து கொண்டிருக்கிற கொட்டில் கப்பு முதுகு முள்ளந்தண்டை நெருடுது. அந்தப் பாழ்க்கறுப்புப் பழஞ் சீலையைத் திரட்டி முதுக்கை வைச்சால் சார்மனைக் கட்டில் போலே ஒரெப்பன் நல்லாக் கிடக்கும்.

இந்தச் சீலே, அவர் இருக்கையிக்கைதான் எடுத்தது. கெட்டாலும் செட்டி, கிழிஞ்சாலும் பட்டெண்டதுபோலே, கிழிஞ்சும் போச்சுது, இண்டைக்கும் சீலையெண்டால் சீலை தான். இடுப்புக்கு நல்ல பொலிவான சீலே; பின்னை ராசாத்தியின்ரை பெட்டையள் கட்டுற மாதிரி—அவளுகள் என்ன?—இப்ப அதுதானுமே மோடி. வெறும் அலவல் துணியள். உண்ணுணை உதுகள் கட்டிக் கொண்டு போகயிக்கை பாக்கவேணும் பின்னை அந்த விண்ணுணச் சீலேயே. தூ...! மானங் கெட்ட சவங்கள். உப்புடித் துடை தெரிய ஏன்தான் மானத்தை மறைக்க வேணுமோ தெரியேல்லை...... என்னட்டைக் கிடக்கிற மற்ற மாங்காய்க் கரைச் சீலேயும் அவர் இருக்கையிக்கை ஒரு தீவாளிக்கு வாங்கினதுதான். அந்தப் போக்காளன் போனப்போலே நானெங்கை புதிசாக் கட்டினன்? இப்ப எனக்கு உடுபிடவைக்கும் பஞ்சமாப் போச்சுது. இப்ப

எல்லாமா ரண்டோ, மூண்டு சீலையள்தான் கிடக்கு. எல்லாம் அந்த வல்லாளன் இருக்கையிக்கை வாங்கினதுகள் தான். அதுகளையும் உந்தக் கட்டுப் பெட்டியிக்கை கட்டி வைச்சன். என்னபாட்டிலை கிடக்கோ என்னவோ ? பூச்சிக் கட்டியளும் சமைஞ்சு போயிருக்கும் நாளைக்குக் கையோடை அதுகளை என்ன பாட்டிலை கிடக்குதெண்டு பாக்கவும் வேணும்.

பெருமாள் கோயில்லை ராமசாமிப்பண்டாரம் இரும்பிலை அடிக்குது. ரண்டு மணியே அடிச்சது ?... அவனும் மனுசன் அந்தந்த நேரத்துக்கு முழிச்சு என்னமாய் அந்த மணியை அடிச்சுப் போடுறான் ?...... எல்லாம் அந்தப் பெருமாளின்ரை புதுமைதான்......

நேத்து அதிலைதானை கூட்டம் போட்டவங்கள் .. சாதியொழிப்புக் கூட்டமோ, என்னம்போரு சங்காரக் கூட்டமெண்டு சொன்னாங்கள். நானும் எப்பனுக்கு அதிலை நிண்டு கேட்டனான். நல்ல சனம். இவற்றை ஆக்கள்தான் கனக்க நிண்டவை. நல்லாத்தான் பேசினவங்கள், நடந்து காட்டுறதுதான் பிழையாக்கிடக்கு. அதிலை ஒரு பெட்டைப் பொடிச்சியும் பேசினவள். எங்கை ஏலுமெண்டால் என்னைப் போலை வந்து இந்தச் சாதியெளுக்கை ஒரு கலியாணம் கட்டெட்டும் பாப்பம் ? இவங்களும் என்னும் தேத்தண்ணிக் கடையளுக்கை போறதுக்கும், கோயிலுக்கை போறதுக்குந்தானே புரச்சியோ கோதாரி செய்துகொண்டிருக்கிறாங்கள். உண்ணுணைத் தெரியாமக் கேக்கிறன், இவங்களுக்குத்தான் தெய்வம், சுவாமியிலை நம்பிக்கையில்லையெண்டும் சொல்லுறாங்கள்; பேந்தேன் கோயிலுக்கை விடச் சொல்லி நிக்கிறாங்கள் ?

எனக்கு அது இப்ப எண்டதுபோலை நினைப்பாக் கிடக்கு. அப்ப எனக்கென்ன ஒரு பதினைஞ்சு பதினாறு வயதுதானிருக்கும். நான் அப்பஎன்ன வடிவான பெட்டை... நல்லா வாந்து வடிஞ்சு என்ன வட்டுறுப்பா வத்தகப் பழத்து உள் பக்க நிறம்போலை இருந்தனான். அதுதானை வழி தெருவாலை போறவங்கடை கண்கடை பட்டுவிடப் போற

தெண்டுதானே அப்பு அவளவு உயரத்திலே வேலி அடைச்சு வைச்சிருந்தவ என்ரை தெறிச்சுப்போன புத்தி குறுக்காலே கொண்டுவந்திடுத்து. ம்...... அது அந்தந்த வயசிலே அந்தந்த அதுக் குதியன் குணந்தான் செய்யும்!

அப்ப இந்த மனிசன் கறுத்தார் அங்கை கள்ளுச்சீவ வந்தவர். பண்டத்தரிப்பிலே எங்கடை குலமென்ன, கோத்திரமென்ன? நானந்தான் குலத்தைக் கெடுத்த கோடாலிக் காம்பாப் போட்டன். எங்கடை கோடியிக்கையும் அப்ப இந்தாள் நாலைஞ்சு பனைச் சீவினது. அப்பு பனைக்கு மேலாலேயும் வேலி அடைக்க முடியுமே!...... நான் என்னை இல்லுப்போலே மறைச்சுக்கொள்ளேயில்லேயாம் பாவம். அதுக்கு அப்பு என்ன செய்யும்?

அதுக்காக நான் ஒண்டும் கவலைப்படேல்லே. ஏனெண்டா கறுத்தாரை இன்னுன் எண்டு தெரிஞ்சாப்போலேதானே நான் அவரோடை ஓடியந்தனுன்.

அப்ப என்ன இந்த மனிசன் இறுங்காட்டந்தானே. பனை ஏறி ஏறியாக்கும் நல்லா நாலு அஞ்சு பேர் தட்டாம முட்டாம ஏறிப் படுக்கக்கூடிய அகண்ட நெஞ்சு. இப்ப நான் சாந்து கொண்டிருக்கிற பாலைக் கப்புகளைப்போலே கைகால்களும்... ஆள் கறுப்புத்தான். கறுப்பெண்டாலும், அது ஒரு தனிக்கறுப்பு. அது அவருக்கு நல்ல வடிவு. கறுப்பெண்டால் என்ன? அவற்றை முக லெச்சணத்துக்கு கோடி பொன்தான் குடுக்க வேணும். முகங் கிட்டினற்றை சாங்கம். சுறுண்டு சுறுண்டு கிடக்கிற ஒரு கொள்ளை தலைமயிர். உண்ணுணை அதை ஒருக்கா இழுத்து விட்டுட்டுப் பாக்க வேணும் பின்னை. அதுவுமொரு வடிவுதான். கொழுக்கி ஓட்டு வீடுமாதிரி ஊருப்பட்ட வளைவுகள்......

இப்பதானே அதுக்கு காதலோ கீதலெண்டு என்னம் போ சொல்லுகினம். அப்ப நாங்கள் உந்தக் கதையேக் கேட்டுமறியம். நான் இவரோடை தொடுப்பா இருந்ததைக் கண்டுட்டுத்தானே அப்பு கொடுவாக் கத்தியைத் தூக்கியொண்டு ஓடி வந்தவ வெட்டிறதுக்கு. அண்

டைக்கு நல்லகாலம், ஆச்சி குறுக்கை வந்து விழுந்து கிடந்து கும்பிடாட்டிக்கு என்ரை தலையைக் கொய்துதான் போடுவார்...... அடுத்தநாள் ஒரு வெள்ளிக்கிழமையாக்கும்' ஓ' அப்பிடித்தான். வீட்டிலை சொல்லாமக் கொள்ளாம லுக்கு இவரோடை இவற்றை ஊருக்குக் கிளம்பியிட்டன். தேடிப் பாத்தவையாம். சங்கதி இப்பிடி யெண்டாப்போலை பேசாமப் பறையாம விட்டிட்டனமாம். அப்பு சும்மா லேசுப் பட்டவரில்லை. இவற்றை ஆக்களும் ஒருமாதிரியான வெட் டுக்கொத்துக் காறங்களெண்டாப்போலைதான் அந்தாளும் பேசாமல் விட்டிடுத்துப்போலை.

நானும் இப்ப பூட்டாத்தையாப்போட்டன். இவளவு காலத்துக்குப்பிறகு இப்பதான் எனக்குக் கண் கலங்குது. அவர் இருக்கையிக்கை கண்கலங்காமத்தான் பாத்தவர். இப்ப நடுத்தெருவிலை நாதியத்து நிக்கிறன். அவர் உசி ரோடை இருக்கையிக்கை சொயத்துக்குச் சொல்லுகிறவர் தானே ? அவருக்கு அப்பவே தெரியும், மருமோன்ரை குணமும், மோளின்ரை குணத்தைப்பற்றியும். அதாலை தான் அந்தாள் அப்பவே 'அம்மிணி, நான் இருக்கை யிக்கை நீ கண்ணை மூடியிடவேணும். இல்லையெண்டா நீ அந்தரிச்சுப் போடுவா' யெண்டு. அதுபோலைதானை நடந்திட்டுது.

இப்ப எழுவத்தினலு வரியம், நான் பிறந்த இடத்தை மிரிச்சு. ம்...... எவளவு காலமாப்போச்சுது. இந்த மூச்சு நிக்கிறதுக்கிடையிலை ஒருக்கா அந்த இடத்துக்குப்போய் அந்த மண்ணிலை மிரிச்சுப்போட்டு அந்தத் தண்ணியி லையும் ஒரு முடறு குடிச்சிட்டு வந்திடவேணுமெண்டு நினைக்கிறன். அப்புவும் ஆச்சியும் எப்பவோ போயிருப் பினம். தம்பியும், அக்காவும்தானே. அதுகள் எங்கை இருக்குதுகளோ ? இல்லையெண்டால் அதுகளுந்தான்...! நான் பாவம்செய்தனுன் கிடந்து அழுந்திறன் எண்டாப் போலை...... அதுகளின்ரை பிள்ளை குட்டியள் — அதுக ளுக்கு என்னை என்னெண்டு தெரியும்? இப்ப நினைச் சுக்கொண்டிருக்கையுக்கை 'ஓ'வெண்டு பிலத்தாக் கத்த வேணும்போலை கிடக்கு.

வாயுக்கைபோட்ட வெத்திலையும் கரைஞ்சுபோச்சு. சதிரம் கொடுகிறமாதிரிக் கிடக்கு. உந்தச் சுங்கான் கல்லுச் சவத்தை உவடத்தைதான் வைச்சனுன் நல்லவேளையாச் சுவர்க் குந்தலை கிடந்திட்டுது. இல்லையெண்டாக் கைவிளக்கும் நூந்தமாதிரிக்கு கன இடத்திலை தடவி இருக்க வேணும்!

சச்சுப்பொயிலை தலைக்கு வைக்கிற சாக்குச் சுறுட்டுக்கை கிடக்கு. பூவரசம் தடியிலை கிடக்கிற தணல் அசுப் பழம்போலை கிடக்கு. கல்லுக்கை ஒரு துண்டை முறிச்சு கொள்ளக் கூடியதா வைக்கலாம்...... அடிச்சல்லிதானே, முதல்லே இல்லுப்போலை கருகப் பாக்கும். நெருப்புப் பிடிச்சிடுத்தெண்டால் கணகணெண்டு சீக்கிறேட்டு எரியுமாப்போலை எரியும்.

விடிஞ்சுவாற தீவாளியோடை பதினெட்டுத் தீவாளி ஆகப்போகுது அவர் போய். அவமாச் சாகக்கூடாதெண்டுறதுக்காகத்தான் என்னும் இந்தஉடம்பிலை உசிரை வைச்சுக்கொண்டிருக்கிறன் இல்லையெண்டால் ஓடுற இந்த றயிலுக்கை—படலையைத் துறந்த உடனயே தலையே அதுக்கிள்ளை குடுத்து சீவனை மாச்சுக்கொண்டிருப்பன். என்னத்துக்கு அப்பிடிச் சாகவேணும்? என்னவோ பிறந்திட்டன். அவன் எழுதி வைச்சிருக்கிற அவளவத்தையும் பட்டழுந்தாமல் இடையிலை செத்தால் பேந்தும் இந்தப் பிறவிதான் கிடைச்சாலும் கிடைக்கும் எண்டுபாக்கிறன்......

அன்னபரிபூரணத்தைப் படிப்பிச்சன்...... இல்லை, அவர்தான் படிப்பிச்சவர். அதை நான் இல்லையெண்டு ஏன் சொல்லப்போறன்? படிச்சு ஒரு வாத்தியாரும் ஆயிட்டாள். அங்கை றெயினிங்கிலையோ கோதாரியிலை இருக்கையிக்கைதானே அவன் ஒருத்தனைக் கொழுவிப் போட்டாள். படிப்பு முடிஞ்ச அடுத்த வரியமாக்கும்...... அதையும் இவர் பிடிச்சு ஒருமாதிரி ஒப்பேத்திப்போட்டார். அப்ப அவன் சொன்னுன் பாவி, 'மாமிக்கும், அம்மானுக்கும் மாதத்திலை நூறு ரூவாக் குடுப்பனெண்டு எளிய பறையன், இப்ப நூறு வெள்ளைச் சல்லியும் தாறுனில்லை.

அவன்தான் பிறத்தியான்; இரத்த உறந்திலே வராதவன். இவளுக்குத் துடிக்கேல்லேயாம். அவனை ஏன் குறை சொல்லவேணும்.

ஒருத்தர் செய்தததுதானே ஊழியுள்ளவரையும் நெஞ்சிலே அழியாமக் கிடக்கும். அவர் பாத்த பார்வைச் சீத்து வத்திலேதானே அப்பு ஆச்சி அப்புவின்ரை பாசத்தையும் மறைச்சுப்போட்டுது. அவர் சொன்னது சாத்திரம் சொன்னது மாதிரிப் பலிச்சிட்டுது. 'அம்மிணி இந்தச் சாதி உன்னை நான் இப்ப கண்ணை மூடினுப்போலே ஏனெண்டும் கேளாது உன்ரை ஆக்களையும் உனக்குத் தெரியாது. எல்லாப் பாவத்தையும் செய்திட்டு நான் உன்னை நடுச் சந்தியிலே நிப்பாட்டிட்டுப் போறன். கையிலே மடியிலே ஏதாவது கிடந்தாத்தான் கடசி காலத்திலே உன்னை ஒரு அயலவனுவது எடுத்துத் தாப்பான். அதிலே இந்த ஒரு துண்டுக்காணியே ஒருத்தருக்கும் இப்ப கையளிச்சுப் போடாதை தாய் பிள்ளையெண்டாலும் வாயும் வயிறும் வேறைதான்' எண்டு. இதை அவர் கடசியாக் கண்ணை மூடையிக்கை என்ரை காதுக்கை தீச்சை மந்திரம்போலே ஓதிப்போட்டு என்னை ஒருக்காப் பாத்தார். ரண்டு கண்ணுலேயும் பொலபொலெண்டு கண்ணீர் ஊத்துப் பட்டுது. உடனே கழுத்துக் கொழுந்து மடிஞ்சு போச்சுது.

அவர் செத்துத் தெய்வமாப்போட்டார்; சொன்னது தேவ வாக்காப் போச்சுது.

அந்தப் போக்காளன்ரை சொல்லைத் தட்டினதாலே எனக்கு வந்த கேடு. என்ரை மோள் அன்னபரிபூரணத் தின்ரை பேருக்கே அந்த வளவை நான் எழுதிப்போட்டன். அதை எழுதிவிக்கிற வரைக்கும் அவனும் அவளும் என்னவா மாய்மாலம் போட்டு மருட்டி, அது இது வாய்க் கிதமானதெல்லாம் வாங்கித் தந்தவை. நான் ஏன் அதை வஞ்சகமா நினைச்சன் வேசை. அந்தக் காணியைத்தானே கடசியாக ஆரோ பத்தாயிரம் குடுத்து வாங்கிக் கடை கட்டியிருக்கிறுங்கள். நானும் பாத்தன், பின்னிட்ட

இந்தக் காலத்திலை எங்கையாவது நிண்டாப் போலை அடிச்சுக் கொண்டு விழுந்து செத்துப்போனாலும். எண்டு...... பேந்தாருக்கு? அவள் ஒருத்தி தானை. நான் வஞ்சமில்லாமல் செய்தன்; அதுகள் வஞ்சகமா நடந் திட்டுதுகள்.

அதுதான் இண்டைக்குப் பிழைச்சுப் போச்சுது. இல்லையெண்டால் இவையள் என்னையும் எப்பன் நத்திக் கொண்டு நிப்பினம். எல்லாம் நான் கொண்டோடி செய்த வேலைக்கு இதுவும் வேணும்; என்னும் வேணும்.

இவற்றை ஆக்களும், மருமோன்ரை ஆக்களும் கதைக்கிறதைப் பாத்தால் அப்பிடித் தெரியேல்லை. ஏதோ நான் தங்களைவிடக் குறைஞ்ச சாதியெண்டது போலை யெல்லே கதைக்கினமாம். அதுதானும் நான் இவர் 'சூ' எண்ட உடனை இவருக்குப் பின்னாலை வந்திட்டனும். எப்பிடிக்கிடக்கு ஞாயம்? உவையள் உப்புடிக் கதைக்கிற துக்கும் நான் ஆளாப்போட்டன் நானும் ஒரு தோறை தான். வலியக் கொண்டு போய்க் குடுக்கிற சாமானுக்கு மதிப்புக் குறைவுதானே? அந்தப் பொருளைத் தேடித் திரிஞ்சு வாங்கினாயெல்லோ அதன்ரை அருமை பெருமை இந்தச் சாதிக்கு விளங்கும்? எனக்கு முன்னாலை ஆரும் உதைப்பற்றிக் கதைச்சால் அடவியன் விளக்குமாத்தாலை தான் சாம்பிப் போட்டு விடுவன் கெட்ட சாதி. ஆரைப் பாத்து உப்புடிக் கதைக்குதுகள் எங்கடை வீட்டுக் காரியங் களை எத்திணைக்கு அப்பாலை நிண்டு உதுகள் செய்யிற துகள்...... பின்னை எனக்கு எங்கையெல்லாமோ இருந்து பத்திக் கொண்டு வருகிது.

எனக்கு இப்பதான் ஒண்டு நல்லாத் தெரியுது. இவற்றை ஆக்களும் இப்ப அங்கினையிக்கை படிச்சுக் கிடிச்சு உத்தியோகம், பணம் பண்டம் எல்லாம் வந்திட் டுதுதான். என்னத்தைப் படிச்சாலும் என்ன? சவச்சாதி—, என்னைப் பாத்து உப்புடிக் கேக்கவோ? இல்லை எனக்கு முன்னாலை சொல்லையிலைத்தான் — ஆருக்கு முன்னாலை யெண்

டாலும்? எத்தினை முள நாக்காலே உப்புடி உதுகள் கதைக்கத் துணியுங்கள்?

அவை இப்ப பெரிய சாதியள் ஆயிட்டினம். அவை படிச்சவையும், பணக்காறநும் ஒரு தட்டா நிண்டு கொண்டு மற்ற இல்லாது செல்லாதுகளை தங்களிலே குறைஞ்ச சாதி யெண்டெல்லே சொல்லுகினம். சாதிக்குள்ளை சாதி யுண்டாக்கிற சண்டாளச் சாதி.

இல்லையெண்டால் உவன் செல்லத்துரையன், மோன் பெரிய படிப்புக்காறனெண்டு சொல்லி தங்கச்சியின்ரை மோளுக்குக் கட்டிக் குடுக்காமல். என்னுமொருடத்திலே அம்பதினுயிரம் வாங்கிக் கொண்டு செய்து குடுப் பானே? அவன் முடிச்சும் ரண்டு பிள்ளை தலைமுறை யாப் போனுன். அது பொடிச்சி என்னும் மூலையுக்கை கிடந்து பெருமூச்சு விடுகுது. சரி. உன்ரை மோனைத் தான் நீ கட்டிவைக்கயில்லை வேறை ஒருத்தனையாவது பிடிச்சுக் கட்டிவையாதையெனடா பாவி...! உன்ரை பிள்ளை ஒண்டு: அவள்ளை பிள்ளை ஒண்டே?......

உங்கை நேத்துப்போட்ட கூட்டத்திலே பேசினுங்கள், படிப்பும் பணமும வந்திட்டால் சாதி யொழிஞ்சு போடு மெண்டு இஞ்சை யென்னடாவெண்டால் முந்துறவன் முநதுறவன் பெரிய சாதியாகிருன்

நான் நினைக்கிறன் உப்பிடித்தான் உப்புடியான மேட்டிமையள் வரயிக்கை அடக்கிறதுக்கு ஒரு ஆளில்லை யெண்டால் அதுக்குத்தான் என்ன மதிப்பு? உலகத் திலை அது நெடுக இருக்கும்போலைதான் கிடக்கு.

என்னைப்பாத்து உதுகள் உப்புடிச் சொல்லையுக்கை வேறை ஆரை விடப்போகுதுகள்?... அவர் இருக்கை யுக்கை உந்தமாதிரி ஆரும் கதைச்சினமெண்டால் பல்லைத் தட்டிக் கையிலை குடுத்திருக்கும் சீமான்.

ஒருக்காலும் நான் அவரையோ சரி, இதுகளையோ சரி அப்பிடி நினைக்கயில்லை. ஆனு இதுகள் இப்பிடியெல் லாம் நினைக்க வைச்சிட்டுதுகள். எனக்கு அதாலை ஒண்

டும் குறைஞ்சுபோடயில்லை. இதுகள் பேசுறது பறையிற தைப் பாத்தாத்தான் எனக்கு என்னமோமாதிரிக் கிடக்கு

எனக்கினியென்ன? நூறுநாள் போட்டுது, என்னு மொரு ஆறுநாள் கிடக்கு

என்னம்போ நினைப்பிலை சுங்கான் கல்லும் நூந்து போச்சுது. அதுக்கை பொயிலையும் இல்லைப்போலை கிடக்கு, என்னும் ஒரு நுள்ளு வைச்சால் விடியேக்கை பாவட்டைக் குப் போகேக்கையும் உதவும்......

அவர் இருக்கையுக்கை வெட்டுச் சுறுட்டுத்தான் வாங் கியந்து தாறவர். இப்ப இதை அவன் பெடியன் செல் லன், அங்கினையிக்கை தான் வாங்கிச் சுத்திற பொயிலை யிலை அந்த அடிச் சோணையைத் தாறவன் அது எங்கை உப்புடித்தான்......

விடியப்புற கொழும்பு றயில் வருமாப்போலை கிடக்கு ராமசாமியும் கம்பியிலை அடிக்கிறுன். மணி அஞ்சோ, ஆறோ...... மூண்டு நாலு அஞ்சு, ஆறு...... நிலமும் நல்லாப் பலார்பத்தி விடிஞ்சு போச்சுது இண்டைக்கு உது கொஞ்சம் சுணங்கித்தான் வருகிது உதிலைதானுக் கும் அன்னபரிபூரணமும் பெடியளும் வருவினம் எண்டு உவள் ராசாத்திதான் சொன்னவள்...... இதென்ன மழை யும் விட்டு வெட்டாப்பாக் கிடக்கு ... இண்டைக்கு சாடையா எறிக்கும்போலை கிடக்கு ...

எங்கை உந்தக் கைத்தடியை இஞ்சினேக்கை வைச் சன்...... மனங்கேக்குதில்லை, ஒருக்கா எட்டிப்பாத்தால் என்ன? அதுகளைக் கண்டும் கனகாலமாப் போச்சு...... இருந்துட்டுக் கண்ணை மூடினாலும்........

அது போட்டுக்கொண்டுபோற ஆதாளியிலை எனக் கெங்கை தெரியப்போகுது. சில நேரத்திலை இவடத்தை வரயுக்கை வலு ஆறுதலா வாறது. இண்டைக்கெண்டு பாழ்படுவான்ரை இதிலை வரயுக்கை சீறிக்கொண்டுபோ குது...... சுணங்கியெல்லே வந்தது, அதாலைதான்.

ஆரோ எல்லாம் கனசனம் எட்டிப் பாத்துக்கொண்டு போகுதுகள் அவளேன் என்னைப் பாக்கப்போருள்? அந்தப் பிள்ளையெள்ளை முகத்தையெண்டாலும் ஒருக்காப் பாக்கலாமெண்டால் .... அதுகளுக்கு விருப்பமில்லாமலே இருக்கும்?... அந்தச்சிடுமூஞ்சையன்...... அவன்தான் அந்தப் பெரிய சாதிக்காறன் பக்கத்திலே இருப்பான்...... அவள்தான் என்ன செய்வாள்? அவனுக்கும், அவன்ரை ஆக்களுக்கும் இப்பதானே நான் இழப்பமான சாதியாப் போனன், ம்........

“என்ன மோனை ராசாத்தி கேட்டனீ?...... ஏன் குளிருக்கை நிக்கிருயெண்டே...... முழுக்க நனைஞ்ச எனக்கு குளிரென்ன கூதல்ல மோனை...... சும்மா இதிலை வந்தாப் போலை மனங் கேக்கையில்லை...... தீவாளிக்கு இண்டைக்கு முழுகையில்லையெண்டே கேட்டனி...... எனக்கு இனி என்ன குளிப்பும் முழுக்கும் தலையெல்லாம் ஓரே பிசானுக் கிடக்கு. ராத்திரியெல்லாம் மொசுமொசெண்டு அதுதான் கடிக்குதுபோலை கிடக்குப்பிள்ளை பின்னை இல்லுப்போலை அரப்புத்தண்ணியைத் தாவன் இந்தப் பீடையெக் கழுவித் துடைச்சுக்கொண்டு பெருமாளெட்டைப் போவம்!......

சதிரம் நல்லாக் கொடுகுதெடிபிள்ளை..... எங்கை உன்ரை இவரைக் காணேயில்லை?...... பெடியள் எல்லாம் முழுகியிட்டுதுகளோ?...... அப்ப புதிசு கிதிசு ஒண்டையும் கட்டக் காணேயில்லை?..... பழசுகளைத் தேச்சோ கட்டி இருக்குதுகள்?...... ஒரு வரியம்போய் ஒரு வரியம் ஒரு காரிக்கன் துண்டாவது அதுகளுக்கு வாங்கிக் குடுக்கக் கூடாதே!......

எடியெடியே, நல்லநாள் பெருநாள்ளே ஏன்ரி கண்ணைக் கயக்கிரு? அவனுந்தான் என்ன செய்யிறது?... எல்லாம் நஞ்சானும், புஞ்சானுமா...... உதென்ன இறச்சியே?...... அவன்தான் சரி. பிள்ளை குட்டியள் திண்டு கெட்டாவது கிலியடங்க வேணும். அதிலைமாத்திரம் அவன் ஒஞ்சிக்கமாட்டான் ...

ஓமோம்! அவனும் மாடா உழைக்கிற தேகமெல்லே? அதுவும் நல்லநாள் பெருநாள்ளை தானை ஓரெப்பனைப் பாவிக் கட்டன்.

தலையாலை ஒரு சுமை பாரம் இறங்கினுப்போலை கிடக் கடிமோனை. நல்லாச் சம்புமாதிரி வந்திட்டுது தலை...... எங்கை மூத்தவள் லெச்சுமி? அடுப்படியுக்கையே?...... அவளும் விடிஞ்சாப் பொழுதுஇருட்டிறவரைக்கும் நெருப் புக்கைதான். குமரான குமர் என்னவா வெம்பி வெளிறிப் போச்சு!

உதிலை செல்லனே வாறது? அவனைக் கேக்கத் தான் வேணும். எடை. ஆச்சி எண்டுறது ஒருபுறமிருக் கட்டும் நான் தந்துவைச்சதிலை உங்கை எவளவு கிடக்கு? அதிலை கிடந்தா இஞ்சை கொண்டா...... ஏன்ரா முழு சிரு? ஏதாவது எடுத்துக்கிடுத்துப் போட்டியே?...... சரி, சரி, கிடக்கிறதைக் கொண்டா. என்ரை சாவறுதிக் கெண்டுதான் தந்தனுன், அது சாகேக்கை பாக்கலாம். என்னடா என்ரை சவத்தை இழுத்துக்கொண்டே எரிக்க கன காசே வேணும்?......


நூறு தானே கிடக்கு?...... இந்தா, இதைக் கொண்டுபோய் பிள்ளையளுக்கு துணிமணியை வாங்கி யாடா, நல்லநாள் பெருநாள்ளே அதுகள்தான் கட்டிக் கொண்டு நிக்க வேணும்... என்னடா சொன்னு...? பங்கை அவளை! எனக்கு விசரெண்டே சொல்லுருயடி ராசாத்தி... ஓமடி, எல்லாரும் சொல்லிப்போட்டினம் நீ ஒருத்தி தான் குறையாக் கிடந்தது...... எட்டி மிரிச்சுப்போய் வாங்கியொண்டு ஓடியா......?

உதென்ன? ஆச்சிக்கு மட்டும் சீலை வாங்கி வைச்சிட் டாள்...... எனக்கு வேண்டாமெடி. நான் கோடி கட்டி னது கொப்பாவோடை போவிட்டுது. அவர் எடுத்துத் தந்த மாங்காய்க் கரைச் சீலை அப்பிடியே கிடக்கு...... அதைத்தான் கட்டிக் கொண்டு அப்பன் பெருமாளட்டைப் போகப்போறன்...

இந்தா இதை நீ கட்டு, நான் பாக்கிறன்!... எடியே சரசு, ஓரெப்பன் திருனூறு கொண்டாடி மோனை... எங்கை உவன் போனனை போனன் காணேல்லை...''

நல்ல கதைதான்; பெடிபெட்டைக்கில்லாமல் எனக் கெல்லே சீலை எடுத்து வைச்சிருக்கினம்... இதுகளுக்குத் துடிக்கிற அளவுகூட என்ரை வயித்திலை பிறந்த அவளுக் குத் துடிக்கையில்லை.

' இப்ப சாப்பிடேல்லை ராசாத்தி, நான் பெருமாளிட் டைப் போட்டு வாறன்.''




K. V. Naduujän.

K – [illegible] [illegible]

valuettö

valuetto [illegible]

## கதைகள் பற்றி.....



பிரம்மஞானி பருவத்தைத் தவறவிட்டு, சம்பிரதாயத்திற்காக மணந்துகொண்ட தமிழாசிரியருடைய வாழ்க்கையைப் படம் பிடிக்கின்றது.

சாம்பல் சாதியையுந் தாண்டி எழும் காதல் உணர்ச்சியின் அவலங்களைச் சித்திரிக்கின்றது.

நரபலி மரங்களிலே குடியிருக்கும் 'முனி'களைப் பற்றிய நம்பிக்கையை நயம்படச் சொல்லுகின்றது.

கன்றயில் வரும் பாத்திரங்களை நாம் அடிக்கடி யாழ்ப்பாணக் கோடுகளிற் சந்திக்கலாம்.

இழவு யாழ்ப்பாணத்துப் போலி ஆசாரத்தின் பின்னணியில், யாழ்ப்பாணத்தின் அறியாமையைச் சுட்டிக் காட்டுகிறது.

வேலியென்ற ஒரு கதையே போதும் இத்தொகுதிக்கு 'யாழ்ப்பாணக் கதைகள்' என்ற பொதுப் பெயர் சூட்டுவதற்கு.

விடிவு ஆசிரியருக்கு யாழ்ப்பாணத்து வாழ்க்கை முறையிலும், அங்கு பயிலப்படுஞ் சொற்களிலுமுள்ள தேர்ச்சியைக் காட்டுகின்றது.

கனவான் ஆசிரியருக்குள்ள இயல்பான நகைச் சுவைக்கு உதாரணம்.

## ஆசிரியர் பற்றி.....

கே. வி. நடராஜன் அவர்கள் கடந்த பத்து ஆண்டுகளாக, குடத்துள் விளக்காகவிருந்து பல சிறு கதைகளை எழுதியுள்ளார். அவருக்குத் தனித்துவமான ஒரு பார்வையுண்டு இயக்கங்களின் அநுசரணைகளினூடே பிரபலமடைவது போலியான வியாபாரம் எனவும்; எழுத்தாற்றலே ஈற்றில் தகுதியை நிர்ணயிக்கும் எனவும் நம்புகின்றார். எடுத்துக்கொண்ட கதையின் தொனிப் பொருளுக்கேற்ற தமிழ் நடையைத் தமது கதைகளிற் கையாளுகின்றார். இத்தொகுதியில் இடம்பெறும் பதினொரு கதைகளும் முழுமையாக நடராஜன் அவர்களின் எழுத்தாற்றலைப் பிரதிபலிக்கவில்லை. ஏனெனில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் நடமாடும் பாத்திரங்களைப்பற்றிய அவருடைய ஆழமான பார்வையை மட்டுமே இந்நூலிற் தரிசிக்க முடிகின்றது.

Cover Printed at the Rainbow Printers,
231, Wolfendhal Street, Colombo-13.